# தமிழறிவு

7

TECA

மேலைநாட்டுத் தமிழ்ப் பாடசாலைகள் ஒன்றியம்

Western Tamil Schools Federation

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கற்க கசடறக் கற்க”

# தமிழறிவு

## பாடநூலும் செயல்நூலும்

## 7

**ASSESSMENT LEVEL 7 & 8**

மேலை நாட்டுத் தமிழ்ப் பாடசாலைகள் ஒன்றியம்
Western Tamil Schools Federation

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழறிவு ❼ TAMILARIVU ❼
## பாடநூலும் செயல்நூலும் / TAMIL LANGUAGE TEXT WITH EXERCISE

பதிப்புரிமை: மே. நா. த. பா. ஒன்றியம் / Western Tamil Schools Federation.
TECA, 72 Warlingham Road, Thornton Heath, Surrey, CR7 7DE.

முதல் பதிப்பு - புரட்டாதி 2013

**இணைப்பாளர்**
திரு யோசெப் வில்வராஜ்

**நிர்வாக ஆசிரியர்கள்**
திரு.க.மனோகரன்
திரு.ம.சி. பிரான்சிஸ்

**நூலாக்கக் குழு**
திரு.மு.து.செல்வராஜா
திரு.ம.செ.அலெக்சாந்தர்
திரு.எஸ். முருகையா
திரு.எஸ்.ஜே. பற்றிமாகரன்
திருமதி. சுமதி யசோதரன்
திருமதி. சகு ஜெயபாலசிங்கம்
திருமதி. இரஞ்ஜினி ஸ்ரீகதிர்காமநாதன்
டாக்டர் பற்றிக் அந்தோனிப்பிள்ளை
டாக்டர் இரா. சந்திரசேகரன்
திரு. எம். கமலநாதன்
திருமதி. கமலாவதி ஜெயபாலன்
பேராசிரியர் எஸ். சச்சிதானந்தம்

**அட்டைப்படம்**
கலைஞர் மாறன்

*Co-ordinator*
**Mr. Joseph Vilvaraj**

*Managing Editors*
**Mr. K. Manoharan**
**Mr. M. C. Francis**

*Consultant Editors*
**Mr. M. T. Selvarajah**
**Mr. M. S. Alexander**
**Mr. S. Murugaiah**
**Mr. S.J. Fatimaharan**
**Mrs. Sumathy Yasotharan**
**Mrs. Saku Jeyabalasingham**
**Mrs. Ranjini Srikathirkamanathan**
**Dr. Patrick Antonipillai**
**Dr. R. Chanrdrasekara**
**Mr. M. Kamalanathan**
**Mrs Kamalawathy Jeyapaalen**
**Prof.S.Sachchithananantham**

*Cover Design*
**Kalaigner Maran**

**ISBN : 978-955-0210-04-06**

அச்சுப்பதிப்பு : யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
Unie Arts (Pvt) Ltd., 48B, Bloemendhal Road, Colombo 13, Sri Lanka. Tel: +94 11 2330195, 2478133.

**Distribution:** Mr.Joseph Vilvaraj. TECA, 72Warlingham Road, Thornton Heath,Surrey, CR 7 7DE. UK. email:books@tamiled.co.uk; web:www.tamiled.co.uk Tel: 07958408280
Mr.M.T.Selvarajah, WLTS (West London Tamil School). mtsrajah@tamiled.co.uk

**Copyright © 2013**
All right reserved. No part of this book publication may be produced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronics, mechanical, photocopying or otherwise without prior written permission of the publisher.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஐக்கிய இராச்சியத்தின் கல்விப்பிரிவு (DCSF) பிற ஐரோப்பிய மொழிகளைப் போலத் தமிழ் மொழியையும் தமது சமூக மொழிகளுள் ஒன்றாக அங்கீகரித்துள்ளது. அவர்களின் நெறிப்படுத்தலில் தேசிய மொழி நிலையத்தினதும் (Asset Languages) நவீல்ட் ஸ்தாபனத்தினதும் (Nuffield Association) வளங்கள் கல்விப் பகுதியால் (DFES) ஆக்கப்பட்ட சமூகமொழிப் பாடத்திட்டத்திற்கு ஏற்புடைய தமிழ் மொழிப்பாட நூல்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் சமூகப்பணியில் ஈடுபடுவதில் மேற்குலகத் தமிழ் பாடசாலைகள் ஒன்றியம் (WTSF) பெருமை பெறுகிறது.

மேலைத்தேய நாடுகளில் வயது வேறுபாடு இன்றி தமிழ்மொழியில் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய திறன்களைப் பயிலவும், மேலும் வளர்த்துக் கொள்வதற்கும் ஏற்புடைய பாட அமைப்புக்களைத் தமிழறிவு நூல்கள் கொண்டுள்ளன. மேலும் பாலர் பிரிவு முதல் பட்டதாரிப்பிரிவு வரையிலான பரீட்சைகட்குத் தோற்றவும் தமிழறிவு நூல்கள் மாணவர்கட்கு உறுதுணையாக அமைவதுடன், கற்பிக்கும் ஆசிரியர்கட்கும், பெற்றோருக்கும் உகந்த வழிகாட்டியாகவும் அமைந்துள்ளன.

மேலை நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் மாணவர்களுக்கான தேவையைக் கருத்தில் கொண்டு இந்த நூல் உருப் பெற்றுள்ளது. இந்நூலாக்கத்தில் தமது அன்றாட கடமைகளுக்கு இடையே அயராது உழைத்த அன்பர்கள் இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, சுவிற்சலாந்து, டென்மாக்கு, நோர்வே, கனடா ஆகிய நாடுகளில் எமது அடுத்த தலைமுறையினருக்குத் தமிழ் மொழியினை கற்பிக்கும் தொண்டில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பாட நூல்கள் மூலம் தமிழறிவைத் தரணி எங்கும் பரப்பும் பெரும் பணியில் தன்னலம் கருதாது தமது ஒத்துழைப்பை நல்கும் சான்றோர் யாவருக்கும் எமது உளங்கனிந்த நன்றி.

வாழ்க தமிழ் ! வாழ்க தமிழ் கூறும் நல்லுலகம் !

**மேலைநாட்டுத் தமிழ் பாடசாலைகள் ஒன்றியம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOREWORD

Tamil language has been accepted as one of the community languages in the United Kingdom by the Department of Children, Schools and Families (DCSF). The curricular for teaching Tamil language and other community languages were published by The Department for Education and studies (DFES) with the guidance and resources from The ASSET examination Board and The Nuffield Foundation. The Western Tamil Schools Federation (WTSF) is proud to dedicate their service in fulfilling the need of publishing the Tamil Text books suitable to the above curriculum and the Cambridge and allied Examinations.

Our mission is to provide Tamil language taxt books with exercises which facilitate the students gradually to attain high level in listening, hearing, reading and writing skills. Many of the exercises included throughout the book can be used by students with minimum of aid from the facilitators.Tamilarivu books are an outstanding aid not only for the students but also for the parents and teachers involved in teaching Tamil Language in western countries.

Publishing the series of Tamilarivu was only possible because of the dedicated scholars and the enthusiastic well wishers from Tamil Nadu-India, Elankai-Sri Lanka, United Kingdom, Canada, France, Germany, Switzerland, Norway, Denmark and Australia.We thank them all for their encouragement and continuous support to spread the Tamil language all over the world.

**WESTERN TAMIL SCHOOLS FEDERATION**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பாடம் பக்கம்

1. வீரமாமுனிவர் ............ 7
2. சூழல் மாசடைதல் ............ 14
3. அல்பிறெட் நோபல் ............ 23
4. பாரதிதாசனின் இன்பத்தமிழ் ............ 32
5. நம்பிக்கையின் வெளிப்பாடு ............ 41
6. சாலை நெரிசல் ............ 50
7. தமிழரின் விளையாடல்கள் ............ 58
8. மனித வாழ்வில் அறிவியல் ............ 67
9. குற்றவியல் தடுப்பு நடவடிக்கைகள் ............ 76
10. திருக்குறள் பொருட்பால் ............ 84
11. போதைப் பொருட்களின் தீங்கு ............ 95
12 செய்தி அறிக்கை எழுதுதல் ............ 102
13. புறநானூற்றில் தமிழர் பண்பாடு ............ 111
14. தண்ணீர் ............ 120
15. சமுதாயத்தில் இனவெறி ............ 128
16. காஞ்சிபுரம் போனோம் ............ 137
17. நண்பனுக்கு ஒரு கடிதம் ............ 147

பின்னிணைப்பு 1. Language Assessment - Tamil Model Test Paper...
Listening -Speaking - Reading and Writing.......... 154
2. Canada Tamil Credit Course (Model Paper)......... 171




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானமறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

\- பாரதியார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் -1

## வீரமாமுனிவர்



வீரமாமுனிவர் (Fr. Constantine Joseph Beschi) இத்தாலியில் பிறந்து ரோமாபுரியில் கல்வி பயின்றார். யேசு சபையில் சேர்ந்து குருப்பட்டம் பெற்றபின் தனது அகவை முப்பதில், சமய சேவை செய்வதற்காக 1710ல் மதுரை வந்தார். இவர் சைவ மதத் துறவிகளைப் போல் உடை உடுத்து, சைவ உணவு உண்டு வாழ்ந்தார். **இவர் இலத்தீன், பிரஞ்சு, இத்தாலி, ஹீப்ரு ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். இவர் தமிழ் மொழியை நன்கு கற்றுத் தமிழில் செய்யுளிலும் உரை நடையிலும் நூல் எழுதும் வல்லமை பெற்றார். தனது பெயரை தைரியநாதன் என முதலில் மாற்றி, பின்னர் அதீத தமிழ்ப் பற்றின் காரணமாக வீரமாமுனிவர் என்ற பெயரைச் சூடிக் கொண்டார்.**

அக் காலத்திலே, காகிதத்தில் எழுதும் முறையும் அச்சிடும் முறையும் மேல் நாடுகளில் அறிமுகப் படுத்தப்பட்ட போது, தமிழ் நூல்கள் ஓலைச் சுவடிகளிலேயே எழுதிப் பாதுகாக்கப்பட்டு வந்தன. தமிழில் நூல்களை இலகுவாக எழுதவும், அச்சிடவும் விரும்பிய வீரமாமுனிவர், தமிழ் எழுத்துக்களில் சில திருத்தங்கள் செய்தார். பண்டைக் காலத்தில் தமிழ் எழுத்துக்களில் எகர, ஒகரங்களில் குறில் நெடில் எழுத்துக்களின் வேறுபாடுகளை அறிவதற்கு, எளிமையான குறிவேறுபாடுகள் இருக்கவில்லை. எகர, ஒகர குறில் எழுத்துக்களுக்கு மேல் புள்ளி வைத்தும், ஏகார, ஓகார நெடில் எழுத்துக்களுக்கு மேல் புள்ளி வையாமலும் கெ், கெ, கெ்ா, கொ என எழுதப்பட்டன. வீரமாமுனிவர் குறில் எழுத்துக்கு ஒற்றைக் கொம்பு சேர்த்தும் நெடில் எழுத்துக்கு இரட்டைக் கொம்பு சேர்த்தும், கெ, கே, கொ, கோ என்று எழுதும் முறையை அறிமுகப்படுத்தினர்.

சமயத் தொண்டு செய்ய வந்த வீரமாமுனிவர் ஆற்றிய தமிழ் தொண்டின் பெருமையை, அவர் ஆக்கிய செய்யுள் நூல்களும், உரைநடை நூல்களும், கத்தோலிக்க சமய நூல்களும் பறை சாற்றுகின்றன. வீரமாமுனிவர் பல நூல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதினர். தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல மாலை, கலிவெண்பா, அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரி அம்மன் அம்மானை, வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், வாமன் கதை, பரமார்த்த குரு கதை, "தொன்னூல் விளக்கம்", "கொடுந்தமிழ் இலக்கணம்" என்ற நூல்களை வசன வடிவிலும் எழுதினார். அகராதி எழுதும் மேலை நாட்டு முறையைத் தமிழுக்கு அறிமுகப் படுத்தியவரும் வீரமாமுனிவரே. **அவர் எழுதிய "சதுரகராதி", தமிழில் முதல் முதலாக எழுதப்பட்ட அகரமுதலியாகும்.** அகரமுதலி எழுதப்படமுன் ஒரு சொல்லுக்குப் பொருள் அறிவதென்றால், செய்யுள் வடிவில் இருந்த **திவாகரம், நிகண்டு** நூல்களைக் கற்றவர்களை நாட வேண்டியிருந்தது. அகரமுதலியின் அறிமுகத்தால் பாமரர்களும் இலகுவாகப் பழம் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைக் கற்க முடிந்தது.

தமிழ் மொழியின் சிறப்பினை விளக்கும் பொருட்டு, தமது **தொன்னூல் என்னும் நூலில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்து இலக்கணங்களைத் தொகுத்து வீரமாமுனிவர் வெளியிட்டார்.** இலத்தீனில் மொழி பெயர்க்கப்பட்ட இந்நூலின் சிறப்பினைப் போற்றி, அதனைக் குட்டித் தொல்காப்பியம் என்றும் கூறுவார்கள். திருக்குறளின் அறத்துப் பாலையும், பொருட் பாலையும் இலத்தீனில் மொழி பெயர்த்தார். அவரது பல நூல்கள் கன்னடத்திலும் தெலுங்கிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. **கிறீத்தவ மதத்தின் சிறப்பினை யாவரும் அறியும்படி அவரால் தேம்பாவணி என்னும் காப்பியம் இயேசு நாதரின் வாழ்வுடன் சேர்ந்த கதைகளுடன் எழுதப்பட்டது.** அந்நூலானது பழம் தமிழ் காப்பியங்களின் மரபினைப் பின் பற்றி 3615 விருத்தப் பாடல்களால் நாட்டுவளம், நகர் வளம் யாவும் தமிழ் நாட்டு வர்ணனைகளுடன் ஆக்கப்பட்டுள்ளது. **பிரெஞ்சு மொழியில் இருந்து தழுவி எழுதப்பட்ட பரமார்த்தகுரு கதை, தமிழில் எழுந்த முதல் நகைச் சுவை இலக்கியம் என்ற பெருமை பெறுகின்றது.**

**தமிழ் வளர்த்த மேலை நாட்டு அறிஞர்களுள் தத்துவ போதக சுவாமி, சீகன் பால்கு, இரேனியஸ், கால்டுவெல் அய்யர், போப் அய்யர், பேர்சிவல் பாதிரியார், வின்ஸ்லோ பாதிரியார், பேராசிரியர் சுவலபில்** போன்ற பல அறிஞர் பெருமக்கள் வரிசையில், தமிழில் எழுத்துக்களைச் செப்பனிட்ட வீரமாமுனிவர் சாகாவரம் பெற்றுத் திகழ்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் 1 : பயிற்சிகள்

1) **பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக.**

1) வீரமாமுனிவரின் இயற்பெயர் என்ன?

........................................................................................................................

2) தைரியநாதன் என்ற முதல் பெயரை வீரமாமுனிவர் என்று ஏன் மாற்றினார்?

........................................................................................................................

3) வீரமாமுனிவர் எழுதிய நூல்களில் ஒரு காப்பியமாகத் திகழ்வது எது?

........................................................................................................................

4) தமிழில் முதல் வெளிவந்த அகரமுதலியின் பெயர் என்ன?

........................................................................................................................

5) தமிழ் இலக்கணத்தின் ஐந்து பகுதிகள் எவை?

........................................................................................................................

6) தமிழுக்குத் தொண்டு செய்த இரு மேனாட்டவர்களின் பெயர்களைத் தருக.

........................................................................................................................

7) வீரமாமுனிவர் எழுதிய நகைச் சுவை நூல் எம் மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது?

........................................................................................................................

8) வீரமாமுனிவர் போல் தமிழுக்கு சேவை செய்த மூன்று மேனாட்டவர்களின் பெயர்களைத் தருக.

........................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**II) பின்வரும் சொற்றொடர்களில் உள்ள இலக்கணப் பிழைகளைத் திருத்தி எழுதுக.**

1) அம்மா நான் இன்று கோயிலுக்கு போனார்கள்.

.................................................................................................................................................

2) எனது முத்து மாலை தங்கை எடுத்து தன் கழுத்து போட்டிருக்கிறான்.

.................................................................................................................................................

3) நான் தமிளை நன்கு கற்று தமிழ் னூல்கள் எழுத விரும்புகிறேன்.

.................................................................................................................................................

4) ஒரு மன்னனுக்கு தன் தேசம் மதிப்பு, ஆனால் கற்றவருக்கோ எத்தேசம் மதிப்புண்டு.

.................................................................................................................................................

**III) உடைய : க்கு - என்ற வேற்றுமை உருபுகளை பின்வரும் சொற்களுடன் சேர்த்து எழுதுக**

எ-கா என் = என்னுடைய : எனக்கு

1) அவன் - ............................................ ............................................

2) நாங்கள் - ............................................ ............................................

3) நீங்கள் - ............................................ ............................................

4) அவர்கள் - ............................................ ............................................

5) அது - ............................................ ............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV) **பின்வரும் சொற்களின் நிகழ்காலம் இறந்தகாலம் ஆகியவற்றைத் தருக.**

எ-கா: அடி - அடிக்கிறான் அடித்தான்

1) விழு - .................................................... ....................................................

2) குடி - .................................................... ....................................................

3) எழுது - .................................................... ....................................................

4) நில் - .................................................... ....................................................

5) சிரி - .................................................... ....................................................

V) **பின்வரும் சொற்களை கீழே தரப்பட்ட அடைமொழிகளுக்கு ஏற்றவாறு தேர்ந்தெடுத்து கீறிட்ட இடங்களை நிரப்புக.**

வேலைக்காரி, பாட்டு, விடை, முதலாளி, உணவு, காலநிலை, மலை, புத்தி, வாழ்க்கை, சாட்சி

க) கூர்மையான .......................... சா) சீரான ..........................

உ) பொய் .......................... எ) கருத்துள்ள ..........................

ங) நேர்மையான .......................... அ) நெறி தவறா ..........................

ச) இரக்கமுள்ள .......................... சு) சுவையான ..........................

ரு) சரியான .......................... க0) உயர்ந்த ..........................

VI) **பண்டைக் காலத்தில் தமிழில் 1, 2, 3... முதலிய எண்களைக் குறிக்க தமிழ் வடிவ எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன.**

**Vம் கேள்வியில் முதல் நிரையில் 1-5ம் இரண்டாம் நிரையில் 6-10ம் தரப்பட்டுள்ளன. அவற்றைக் கீழே எழுதுக.**

(பத்து என்பதை ௰ என்று எழுதும் வழக்கமும் உண்டு)

....................................................................................................................................

....................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**VII) பின்வரும் பழமொழிகளை ஆசிரியருடன் கலந்துரையாடி அவற்றின் கருத்தையும் பிரயோகத்தையும் அறிந்துகொள்க.**

1) எறும்பூரக் கல் குழியும்

(Good effects of practice and repetition )

2) தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை.

( A child learns attitudes from the mother)

3) மருந்துகால் மதி முக்கால்.

(Medicine only will not be effective unless we lead a healthy lifestyle)

4) விதியை மதியால் வெல்லலாம்

( Fate can be conquered by planned actions)

5) அட்டாலும் பால் சுவையில் குன்றாது சங்கு சுட்டாலும் வெண்மை தரும்.

(Neither milk nor gold will not be discoloured on heating. In the same way a learned person will maintain his or her character even under difficulties)

## வீட்டுவேலை

**I) பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் வரும் கேள்விகளுக்கு வசனத்தில் விடை தருக.**

எனது பெயர் இரவி. எனது இணைபிரியா நண்பனின் பெயர் குமார். நாங்கள் ஏழாம் வகுப்பில் படிக்கிறோம். எனக்கு ஒரு தம்பியும் இரண்டு அக்காமாரும் இருக்கின்றனர். குமாருக்கு ஒரு தம்பி மாத்திரம் உண்டு. மாலையில் நாங்கள் அயலிலுள்ள பிள்ளைகளுடன் சேர்ந்து உதைபந்து அல்லது கிரிக்கட் (மட்டைப்பந்து) விளையாடுவோம். குமார் ஒரு நாயை வளர்க்கிறார், அதன் பெயர் சின்னு. அதுவும் ஆடுதிடலில் எங்களோடு ஓடி விளையாடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) இரவியும் குமாரும் எத்தனையாம் வகுப்பில் படிக்கிறார்கள்?

.................................................................................................................................................

2) குமாருக்கு அக்காமார் இருக்கிறார்களா?

.................................................................................................................................................

3) மாலையில் இரு நண்பர்களும் யாருடன் சேர்ந்து விளையாடுவார்கள்?

.................................................................................................................................................

4) What is the name of Kumar's dog?

.................................................................................................................................................

5) What did Ravi say about the dog?

.................................................................................................................................................

**II) உம்மைப்பற்றி 10 வரிகளில் (இரவி எழுதியமாதிரி) எழுதுக.**

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் -2

## சூழல் மாசடைதல்

இவ்வுலகில் உயிரினங்கள் சிறந்து வாழ்வதற்குத் தேவையான இயற்கைத் தொகுதி **நீர், நிலம், மண், தீ, ஆகாயம்** ஆகிய ஐம்பூதங்களால் அமைந்தது. **இத்தொகுதியை நீர்த்தொகுதி, நிலத்தொகுதி, வளித்தொகுதி, உயிர்த்தொகுதி என வகுக்கலாம். இவையனைத்தும், ஏற்றவகையில் ஒன்றிணைந்து உருவாகியுள்ள இயற்கைச் சமநிலையே சூழல் ஆகும்.** இச்சூழல் தொகுதியின் இயற்கை அமைவு மாறுபடின், அந்த நிலைமை உயிர்களின் அழிவிற்கு வழிவகுக்கும். **இந்த இயற்கை அமைவின் மாறுபாட்டையே சூழல் மாசடைதல் என்கின்றோம்.**

**மக்கள் தொகைப் பெருக்கம், குடிநகர்வு, வணிகமயமாதல் போன்ற பல காரணங்கள் சூழலை மாசுபடுத்த வழிவகுக்கின்றன.** உலகில் இயற்கை அமைவு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளது. ஆனால், **உயிர்த் தொகுதியோ பல்கிப் பெருகிக்கொண்டே இருக்கிறது.** மானிடத்திற்கு வேண்டிய உணவையும், பயன்பாட்டுப் பொருட்களையும் உற்பத்தி செய்வதற்குப் பயன்படும் புதிய அறிவியல் முறைகள். எம் சூழலில் தவிர்க்க முடியாத தாக்கங்களினை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏற்படுத்துகின்றன.

உணவுத் தேவையின் பொருட்டு மாந்தரால் **அழிக்கப்படும் பசுமையான காடுகள், உயிரினங்களின் நலனுக்கான சூழல் தொகுதியாகும்.** பசுமையான காடுகளை அழிப்பதனால் நிலத் தொகுதிக்கு வேண்டிய பல்லின உயிர்கள் அழிகின்றன. பயிர்ச் செய்கையில் பசளைகள், பூச்சிகொல்லி, களைகொல்லி **ஆகிய வேதியல் (Chemicals) மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை வெளிவிடும் நச்சுப் பொருட்களும், அமிலப் பொருட்களும் மழையையும், நீரையும், நிலத்தினையும் நஞ்சூட்டுகின்றன.** இதனால், தாவரங்களும் நிலத்தை வளப்படுத்தும் நுண்ணுயிரிகளும் இயற்கையான திறனை இழந்து அழிவுறுகின்றன.

**மானிடரின் பயன்பாட்டுப் பொருட்களின் பேரளவு உற்பத்திக்கு கனரக இயந்திரத் தொழிற்சாலைகள் செயற்படுகின்றன. இவற்றின் செயற்பாட்டின் போது வெளியேறும் நச்சுவாயுக்கள் வானில் கலக்கின்றன.** அத்துடன் வீதிகளில் செல்லும் எண்ணற்ற உந்துகள் வெளியகற்றும் நச்சு வாயுக்கள் வளி மண்டலத்தில் கலக்கின்றன. இதனால் நாம் சுவாசிக்கும் காற்று மாசடைவதுடன் சில இடங்களில், இவ்வாயுக்களால் மழை கூட அமில மழையாகப் பெய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகத்துறையில் பயன்படுத்தப்படும் **பொலித்தீன், நெகிழிப்** (plastic) **பொருள்கள் இலகுவில் உக்கி அழியாத ஒரு பண்டமாகும்.** உலகம் எங்கும் பலவிதமான நெகிழிப் பொருட்கள் மக்களின் பாவனையில் உள்ளது. இப் பொருட்கள், பாவனையின் பின்னர் வீசி எறியப்படுவதனால், மண்ணை மட்டும் அன்றி நீர் நிலைகளையும் மாசுபடுத்துகின்றன. இவை சூழலை நச்சுப்படுத்துவது மட்டுமல்லாமல், மாந்தருக்கும் மற்றைய உயிரிகளுக்கும் தீங்கை விளைவிக்கின்றன.

பல விதமான தொழிற்சாலைகளின் நச்சுக் கழிவுகளைத் தாங்கிவரும் வடிகால்கள் நீரோட்டத்துடன் சேர்ந்து ஆறுகள் மூலம் கடலிற் கலக்கின்றன. அத்துடன் இன்றைய கடற்கலங்கள் கனிமநெய்களைக் (Petroleum) கையாளுவதால், அவற்றின் கழிவுகளும் அளவிறந்து கடலிற் கலக்கின்றன. **சமுத்திரம், பல சீவராசிகளின் உணவுத் தேவையில் மிக முக்கியமான பங்கு வகிக்கும் நீர்த்தொகுதியாகும். அது மாசுபடுவதனால் நீர் வாழ் உயிரிகளும் மாந்தரும் பாதிக்கப்படுகின்றனர்.**

மக்கள் தொகை கூடிய நகரங்களில் போதிய நலவாழ்வு (சுகாதாரம்) வாய்ப்புகள் இன்மை, குப்பை கூளங்களின் பெருக்கம் என்பவை மிகக்கடுமையாக சூழலை மாசுபடுத்துகின்றன. இதன் பாதிப்புக்கள் வளர்முக நாடுகளின் முன்னேற்றத்திற்குப் பெரும் சவால்களாக அமைந்துள்ளன. அத்துடன் அமையாது பல வேறு விதமான மானிட நடவடிக்கைகளினால் உலகம் எங்கும் காலத்துக்குக் காலம் பாதிப்புக்கள் ஏற்படுவதுடன் தொற்று நோய்கள் பரவும் அபாயமும் காணப்படுகின்றது.

**இன்று எழுநூறு கோடியைத் தாண்டியுள்ள மக்கட்தொகுதியின் அவசிய தேவையிலுள்ள மின்னியல், இலத்திரனியல் பொருட்களிலிருந்தும் அணுமின் ஆக்கங்களிலிருந்தும் வெளியாகும் கதிர்வீச்சுகள் சூழலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.** இவற்றிற்கு அப்பால், பசுமை வளியினால் (greenhouse gases) விளையும் ஞாயிற்றுக் கதிரின் எதிர்த் தெறிப்பினால் வான்வெளியில் ஓசோன் படலம் சிதைந்து போயுள்ளது. இத்தாக்கத்தால் சூரியனிலிருந்து வரும் ஊதாக்கதிர்களின் நுழைவைத் தடுக்க முடியாமல் உள்ளது. ஊதாக்கதிர்கள் (ultra-violet rays) உயிரினங்களுக்கு நீண்டகால நோய்களை ஏற்படுத்தும் தன்மை கொண்டவையாகும்.

இவ்வாறு சூழல் தொகுதிகள் மாசுபடும்போது, இயற்கைச் சமநிலை சிதைவடைவதனால் பல அபாயங்கள் ஏற்படுகின்றன. இதனால் தொற்று நோய், கடற்கோள், பெருவெள்ளம், நிலச்சரிவு போன்ற பேராபத்துக்களை உலகம் எதிர் நோக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைகள் உருவாகின்றன. இவற்றைத் தடுக்கும் நடவடிக்கைகளை வருங்கால நலனுக்காக எல்லா நாடுகளும் ஒன்றுபட்டு மேற்கொள்ளுவது இன்றி அமையாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் 2 – பயிற்சிகள்

I) **பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக**

1) ஐம்பூதங்கள் எவை ?

..........................................................................................................................................................

2) நால்வகை இயற்கை தொகுதிகள் எவை?

..........................................................................................................................................................

3) இயற்கைச் சமநிலையில் தங்கிவாழும் உயிர்வாழ்வன எவை?

..........................................................................................................................................................

4) இயற்கைச் சமநிலை மாறுபடுவதற்கு முக்கியமான மாற்றம் யாது?

..........................................................................................................................................................

5) நச்சுவாயுக்கள் எங்கிருந்து வளியில் சேருகின்றன?

..........................................................................................................................................................

6) பெரும் காடுகள் ஏன் அழிக்கப்படுகின்றன?

..........................................................................................................................................................

7) நீர் வளங்கள் எவ்வாறு நச்சூட்டப்படுகின்றன?

..........................................................................................................................................................

8) பண்டைக் காலத்தில் கடற்கலங்கள் எவ்வாறு கடலில் செலுத்தப்பட்டன?

..........................................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II) **கீழே தரப்பட்ட விடைகளுக்கு ஏற்ற கேள்விகளை எழுதுக.**

கேள்வி 1: ........................................................................................................

........................................................................................................

விடை: நச்சு வளிகள் மேல்சென்று மழைமுகில்களுடன் சேர்வதால் அமிலமழை பெய்கின்றது.

கேள்வி 2: ........................................................................................................

........................................................................................................

விடை: காடுகளை அழித்தால் மழை குறையும், பல உயிரினங்களும் அழியும்.

கேள்வி 3: ........................................................................................................

........................................................................................................

விடை: நாங்கள் ஒவ்வொருவரும் ஒரு மரத்தையாவது நடுதல் வேண்டும்,

கேள்வி 4: ........................................................................................................

........................................................................................................

விடை: காய்ந்த இலைகள் உக்குவதால் மண்ணிற்கு பசளையாகும்.

கேள்வி 5: ........................................................................................................

........................................................................................................

விடை: காடுகள் பல உயிரிகளுக்கு வாழிடம் கொடுக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III) **பின்வரும் பந்தியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக.**

இப்புவியில் நான் வந்து செல்வது ஒரு முறை தான். எனவே நான் இங்கே ஒரு நற்செயல் புரிந்திட வேண்டும். இதைப் பிற்போடுவதற்கோ அல்லது தவிர்ப்பதற்கோ நியாயமில்லை. ஏனெனில் நான் மீண்டும் புவியில் வரப் போவதில்லை. எங்களையும் எங்களின்பின் பிறந்து வாழப்போகும் மக்களையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளை செய்வது நன்று அல்லவா?

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

IV) **பின்வரும் தமிழ் சொற்களுக்கு ஏற்ற ஆங்கில மொழிபெயர்ப்பு தருக.**

1) சூழல் மாசடைதல் :.........................................................................................

2) நச்சு வாயுக்கள் (வளிகள்): :.........................................................................................

3) மக்கள் தொகை பெருகல்: .........................................................................................

4) காடுகள் அழிக்கப்படுதல்: .........................................................................................

5) அமில மழை :.........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V) பின்வரும் சொற்களை வைத்து வசனம் அமைக்குக.

அ) காற்றும் மழையும்:

..........................................................................................

..........................................................................................

ஆ) நிலநடுக்கம்:

..........................................................................................

..........................................................................................

இ) தீய விளைவு :

..........................................................................................

..........................................................................................

ஈ) பாதிப்பு

..........................................................................................

..........................................................................................

ஊ) விழிப்புணர்வு:

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VI) **தமிழில் சொற்களை அசைகளாகப் பிரிக்கலாம்.**

பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய அசைகள் (monosyllables) பிரிக்கப்படும்

குறிப்பு: இரண்டு தமிழ் சொற்களை இசையோடு பாடவும், பாட்டுக்கள் புனையவும், தமிழைத் திருத்தமாக வாசிக்கவும் அசைகள் உதவும். எழுத்து தனித்தோ அல்லது சேர்ந்தோ ஒசை தர அமையின் அது அசை எனப்படும். அதாவது பிரிந்து அசைந்து ஓசை தரும்.

ஆய்த எழுத்தும் புள்ளியுள்ள குற்றெழுத்துக்களும் (ஒற்றெழுத்துக்கள்) அசைகளாக கணிக்கப்படுவதில்லை. ஆனால் அவை தம் முன்னிற்கும் அசையோடு சேர்த்து எழுதப்படும்.

பின்வரும் எட்டு வகையாக அசைகள் அமையும்.

| | | |
|---|---|---|
| குறில் எழுத்து தனியாக | எ-கா: க | அ |
| குறில் + ஒற்றெழுத்து | பல் | என் |
| நெடில் தனித்து | கா | ஆ |
| நெடில் + ஒற்றெழுத்து | தாள் | ஆண் |
| குறில் + குறில் | பட | இன |
| குறில் + குறில் + ஒற்றெழுத்து | படம் | இலன் |
| நெடில் + குறில் | பாட | தேசு |
| நெடில் + குறில் + ஒற்று | பாடல் | ஏவல் |

மேலே தரப்பட்ட எட்டு வகையில் முதல் நான்கும் நேரசை எனவும் அடுத்த நான்கும் நிரையசை என்றும் வழங்கப்படும்

எடுத்துக்காட்டு: தேமா புளிமா = தே + மா புளி + மா

மாவிளங்காய் = மா + விளங் + காய்

கூவிளங்காய் = கூ + விளங் + காய்

குறிப்பு: ஆ என்ன அற்புதம் கண்டேனே =ஆ+என்+ன அற்+புதம் கண்+டே+னே

இரண்டு ஒற்றெழுத்துக்கள் அடுத்து வருமாயின் இரண்டும் கணிக்கப்படுவதில்லை.

எ-கா : பார்த்திபன் = பார்த்+திபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்வரும் சொற்களை அசைகளாகப் பிரிக்கவும்.**

மகிழ்ந்தேனே : ............................ ............................ ....................................

ஆரோக்கியநாதன்: ............................ ............................ ....................................

அந்நியன் : ............................ ............................ ....................................

வாழ்த்தினேன் : ............................ ............................ ....................................

பெருங்கடல் : ............................ ............................ ....................................

**VII) பின்வரும் ஆங்கில சொற்களுக்கு ஏற்ற தமிழ் சொற்களை எழுதுக.**

1) Environment – ..................................................................

2) Pollution – ..................................................................

3) Experiment – ..................................................................

4) Radiation – ..................................................................

5) Sewage – ..................................................................

**VIII) மேல் பயிற்சியில் எழுதிய சொற்களைக் கொண்டு வசனங்கள் ஆக்குக**

1)..........................................................................................................

2)..........................................................................................................

3)..........................................................................................................

4)..........................................................................................................

5)..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டு வேலை

I) நீர் வசிக்கும் தெருவில் வசிப்பவர்கள் குப்பைகளை கண்டபடி தெருவில் வீசுகின்றனர், அவர்களுக்கு சுற்றாடலை துப்பரவாக வைத்திருக்கும்படி ஓர் அறிவிப்பை எழுதுக.

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

II) பின்வரும் சோடிச் சொற்களை வைத்து ஒரு வசனம் அமைக்கவும்.
எ-கா: (குளிர், மழை) : மழை பெய்தபின் குளிர் காற்று வீசியது.

1). அம்மா, சுவையான

.................................................................................................................

2) மனிதர், நேர்மை

.................................................................................................................

3) மாலை, விளையாடு

.................................................................................................................

4) குப்பை, தொட்டி

.................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் -3

## அல்பிறெட் நோபல்

அல்பிறெட் பேர்னார்ட் நோபல் (Alfred Bernhard Nobel) **சுவீடன் தேசத்தில்** ஸ்ரோக்கோம் நகரில், 1833ம் ஆண்டு பிறந்தார். அவரது தந்தையின் வேலை நிமித்தம் ரஷ்யாவில் இளம் வயதில் வாழ்ந்த போதிலும் பின்னர் பாரிஸ் நகரத்தில் வேதியல் (chemistry) கல்வி பயின்றார். 1859ம் ஆண்டு சுவீடன் நாட்டிற்கு திரும்பிய பின் பொறியியலாளராகவும், வேதியியலாளராகவும் பணி புரிந்து அனுபவம் மிக்க நிறுவன உரிமையாளராக முன்னேறினார். இளமைக் காலம் முதலாக கடின உழைப்புக் கொண்ட நோபல், புதிய விடயங்களைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சிகளிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவராகத் திகழ்ந்தார்.

அக்காலகட்டத்தில் உலக நாடுகளிடையே போக்குவரத்துத் தொடர்புகள் பெருக ஆரம்பித்தமையால் பாதைகளின் தேவை மிகவும் அவசியமானதாகக் கருதப்பட்டது. அவரது திட்டங்களில் அகன்ற பாதை அமைக்கும் போது **குறுக்கிடும் மலைகளை உடைப்பது மிகக் கடினமாக இருந்தமையால், வெடி பொருட்களை உபயோகித்துக் கற்பாறைகளை உடைக்க முடியுமா என்று ஆராய்ந்தார்.** இதன் பயனாகத் **தகர் வெடி அல்லது, 'டைனமைற்'** (dynamite) **எனப்படும் வெடியைக் கண்டுபிடித்தார்.** இதன் உபயோகத்தால் மலைகளைத் தகர்த்துப் பாதைகள் அமைப்பது, கட்டிடங்களுக்கு அத்திவாரம் தோண்டுவது, சுரங்கங்கள் அகழ்வது, கிணறுகள் தோண்டுவது போன்ற பல வேலைகளை விரைவாகவும் குறைந்த பணச் செலவுடனும், செய்யக் கூடியதாக இருந்தது.

நோபல் டைனமைற் விற்பனை செய்து, பல கோடி செல்வத்தைச் சம்பாதித்தார். டைனமைற் யுத்தகாலங்களில் குண்டுகள் தயாரிப்பதிலும் பயன்படுத்தப்பட்டது. ஆக்கபூர்வமான முயற்சிகளில், நன்மைக்கு உபயோகிக்கப்பட்ட டைனமைற், தீமை பயக்கும் வழிகளிலும் உபயோகிக்கப்பட்டதனால் அதன் தேவை பெருகிக் கொண்டே போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பல்வேறு புதிய நவீன கண்டுபிடிப்புக்களையும் மக்களின் பாவனைக்கு அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர். அவர் தன் அயராத முயற்சியினால் தமது வாழ்நாளில் முன்னூற்றுக்கும் மேற்பட்ட **காப்புரிமைப் பட்டயங்கள்** (patents) பெற்றிருந்தார்.

ஒருநாள் அல்பிறெட் நோபலின் சகோதரர் எதிர் பாராத ஒரு விபத்தினால் இறந்துபோனார். பத்திரிகைகள் எல்லாம் தவறுதலாக, அல்பிறெட் நோபல் இறந்ததாகச் செய்திகளைப் பிரசுரித்தன. இறந்த நோபலின் சகோதரரின் விபரங்கட்குப் பதிலாக, அல்பிறெட் நோபலின் வாழ்க்கை வளர்ச்சியின் கதையை எழுதின. மேலும் சில பத்திரிகைகள், அவரின் கண்டுபிடிப்புக்கள், மனித சமுதாயத்துக்குச் செய்யும் தீய விளைவுகளை மாத்திரம் எடுத்துக்காட்டி, அவரை ஒரு சமூக விரோதியாகச் சித்தரித்தன. அவரை **"மரணத்தின் வியாபாரி"** எனத் தாழ்த்திக் கட்டுரைகள் வரைந்தன. அல்பிறெட் நோபல், எதிர்பாராமல் நிகழ்ந்த இந்தத் தவறான நிகழ்ச்சியால், தன்னைப்பற்றி மக்கள் கொண்டிருந்த தாழ்வான எண்ணங்களை அறிந்தார். மனக்கவலை கொள்ள வைத்த இந்த நிகழ்ச்சி அவரை மனிதநேய அடிப்படையில் சிந்திக்க வைத்தது.

தன் கண்டுபிடிப்பால் மக்களுக்கு ஏற்பட்ட தீமைகட்கு ஈடுசெய்ய வேண்டும் என எண்ணினார். தமது எண்ணத்தை நிறைவேற்ற பொது மக்களின் நன்மைக்காகப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடத் திட்டமிட்டார். அதன்படியே அவர் செய்த மிகப் பெரிய கொடை, **நோபல் பரிசுத் திட்டம்** எனப்படுகின்றது. அவர் தனது சொத்தில் பல கோடிப் பணத்தை ஒரு நிதியத்தில் இட்டு, அதன் வருமானத்தை, உலக மக்களுக்கு நன்மை தரும் வழியில் சேவை செய்தவர்களைப் பாராட்டிச் சன்மானம் வழங்கும் படி ஒழுங்கு செய்தார்.



Level 7
Text - Ch-3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோபல் பரிசுத் திட்டத்தின் நிதியையும், அதன் நிர்வாகத்தினையும் 1900ம் ஆண்டு நிறுவப்பட்ட நோபல் அறக்கட்டளை, **சுவீடனில் ஸ்ரொக்கோமைத் தலைமையகமாகக் கொண்டு இயங்குகிறது.** ஒவ்வொரு வருடமும், 1901ம் ஆண்டு முதல் நோபல் நினைவுத் தினமான டிசம்பர் 10ம் நாள் பரிசில்கள் வழங்கும் நாளாகக் கொண்டாடப்படுகிறது. அமைதிக்கான நோபல் பரிசு, நோர்வே நாட்டின் தலைநகரான ஒஸ்லோ நகரிலும், மற்றைய பரிசுகள் சுவீடனின் தலைநகரான ஸ்ரொக்கோமிலும் வழங்கப்படுகின்றன. **பொருளியல், வேதியியல், இயற்பியல்,** (Physics) **மருத்துவம், உடலியங்கியல்** (Human physiology), **இலக்கியம், சமாதானம்,** முதலிய துறைகளில் மிகத் திறமையான **சேவையைப்** பாராட்டி நோபல் **பரிசில்கள் வழங்கப்படுகின்றன.**

இந்தியர்களில் முதலாவதாக ரபீந்திரநாத் தாகூர் 1913 ல் இலக்கியத்துக்கான பரிசினைப் பெற்றார். பின்னர் 1930ல் இயற்பியலுக்காக சி.வி. இராமன், சமாதானத்திற்காக 1979ல் அன்னை தெரேசா,1998ல் பொருளியலுக்காக அமர்த்திய சென், 2009இல் வேதியலுக்காக வெங்கட்ராமன் ராமக்கிருஸ்ணன் என்பவர்களுக்கும் நோபல் பரிசுகள் வழங்கப்பட்டன. அல்பிரட் நோபலை பெருமைப்படுத்து முகமாக, 1958ம் ஆண்டு கண்டறியப்பட்ட வேதியியல் தனிமத்திற்கு நோபிலியம் (Nobelium) எனப் பெயர் சூட்டி உள்ளார்கள்.

பொதுநலம் கொண்ட அல்பிறெட் நோபல் அக்கால மாந்தர்களில் ஒரு பெரும் வள்ளல் ஆக வாழ்ந்து காட்டி உள்ளார். அவர் மறைந்த பின்னரும் அவரது உன்னதமான கொடை தொடர்ந்து வாழ்கின்றது. தாம் வாழுங்காலத்தில் ஒருவர் முதலில் தனது வாழ்வின் உயர்ச்சிக்காக உழைப்பதுடன் தன் குடும்பத்துக்கும், உறவினருக்கும் உதவிடல் நன்று. அத்துடன் இயன்ற அளவு நாட்டிற்கும் மனித சமுதாயத்திற்கும் பயன் உடையராதல் உன்னதமான செயல் என்பதனை அவரது வாழ்வில் இருந்து, நாம் அறிய முடிகின்றது. **'தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் அறியப்படும்'** என்ற திருவள்ளுவரின் வாக்குக்கு நோபல் அவர்களின் வாழ்வு ஓர் அரிய எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் 3 பயிற்சிகள்

**I) வினாக்களுக்கு விடை எழுதுக.**

1) அல்பிறட் நோபல் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

..............................................................................................................................................

2) இவர் எதைக் கண்டு பிடித்தார்?

..............................................................................................................................................

3) எந்த நிகழ்ச்சி அல்பிறட் நோபலுக்கு மக்களின் மனநிலையை எடுத்துக் காட்டியது?

..............................................................................................................................................

4) நோபல் அறக்கட்டளை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

..............................................................................................................................................

5) ஒவ்வொரு வருடமும் நோபல் பரிசு எந்தத் துறைகளில் சேவை செய்தோருக்கு வழங்கப்படுகிறது?

..............................................................................................................................................

6) இந்தியாவில் யார் யாருக்கு நோபல் பரிசு இதுவரை கிடைத்துள்ளது? எதற்காக கிடைத்துள்ளது?

..............................................................................................................................................

7) நோபல் பரிசுத் தினம் எது?

..............................................................................................................................................

8) அமைதிக்கான நோபல் பரிசு எந்த நாட்டில் வழங்கப்படுகிறது?

..............................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II) **பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் எழுதுக.**

தேசம் -................................................ பாதைகள் - ................................................

தகர்த்தல்-................................................ யோசித்தல் - ................................................

ஒழுங்கு-................................................ முன்னேற்றம் - ................................................

நிதி - ................................................ பணி - ................................................

III) **பின்வரும் சொற்களுக்கு எதிர் சொற்கள் தருக**

தாழ்வு - ................................................ நன்மை - ................................................

செலவு - ................................................ தவறு - ................................................

இலகு - ................................................ இலாபம் - ................................................

முன்னேற்றம்-................................................ இளமை - ................................................

IV) **ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுங்கள்**

ஆய்வுகூடம் -................................................ பரிசு - ................................................

கண்டுபிடிப்பு -................................................ மருத்துவம் - ................................................

சமாதானம் -................................................ அறக்கட்டளை - ................................................

சந்ததி -................................................ பொறியியலாளர் - ................................................

தகர்வெடி - ................................................ காப்புரிமைப்பட்டயம் - ................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**V) தரப்பட்டிருக்கும் வசனங்களில் இருக்கும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றை கண்டு கீழ்வரும் அட்டவணையை நிரப்புக.**

1) மேசன் வீட்டைக் கட்டினான்.

2) ஔவையார் ஆத்திசூடி இயற்றினார்.

3) நண்பர்கள் உதவி செய்தார்கள்.

4) பாரி முல்லைக்குத் தேரை வழங்கினார்.

5) நோபல் மலைகளை உடைத்துப் பாதைகள் அமைத்தார்.

6) மனிதன் காடுகளை அழிக்கின்றான்.

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VI). பின்வரும் பன்மை வாக்கியங்களை ஒருமை வாக்கியங்களாக எழுதுக.

1) மலர்கள் மணம் வீசுகின்றன.

.............................................................................................................................................

2) தாய்மார்கள் பாடசாலைக்கு வந்தார்கள்

.............................................................................................................................................

3) நாங்கள் பந்து விளையாடினோம்.

.............................................................................................................................................

4) மரங்கள் பச்சை நிறம் உடையன.

.............................................................................................................................................

5) மாணவர்கள் பாடல்களைப் பாடினார்கள்.

.............................................................................................................................................

## VII). கலந்துரையாடல்

வள்ளல் என்றால் யார்? இதற்கு சிறந்த உதாரணமாகத் திகழும் பாரியின் கதையை அறிந்து கொள்க.

எங்கள் நாளாந்த வாழ்க்கையில் நாங்கள் மற்றவர்களுக்கு உதவி செய்த சந்தர்ப்பங்களையும், உதவி பெற்ற சந்தர்ப்பங்களையும் வகுப்பில் கலந்துரையாடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VIII) **ஒன்றன் பால் : அஃறிணையில் ஒரு பொருளைக் குறிப்பது.**
**பலவின் பால் : அஃறிணையில் பல பொருட்களைக் குறிப்பது.**

**I) ஒன்றன் பால் சொற்களைப் பலவின் பால் சொற்களாக மாற்றுக.**

1). தாமரைப் பூ குளத்தில் மலர்ந்தது.

.......................................................................................................

2). பழம் நல்ல சத்துள்ளது.

.......................................................................................................

3). குருவி வானத்தில் பறந்தது.

.......................................................................................................

4). சிங்கம் காட்டில் வாழும் ஒரு மிருகம்.

.......................................................................................................

5). எனது புத்தகம் தடித்த அட்டை உடையது

.......................................................................................................

**II) பலவின் பால் சொற்களை ஒன்றன் பால் சொற்களாக மாற்றுக.**

1) வானரங்கள் கிளைகளில் அமர்ந்தன.

.......................................................................................................

2) மேகங்களே உமது சேதிகளைச் சொல்லுங்கள்.

.......................................................................................................

3) குளத்து மீன்களைக் கொக்குகள் உண்டன.

.......................................................................................................

4) இரையும் வாகனங்களால் தெருக்களில் விபத்துக்கள் ஏற்படலாம்.

.......................................................................................................

5) நகரங்களில் பெரிய நூலகங்கள் அமைந்துள்ளன.

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டு வேலை

I) **திருக்குறளில் , நடுவுநிலைமை - அதிகாரம் 12 இல் வரும் 114ஆம் குறள்:**

தக்கார் தகவுஇலர் என்பது அவர் அவர்
எச்சத்தால் காணப்படும்.

(எச்சம் = இறப்பின்பின் விட்டுச் செல்லும் அறங்கள்)

இதன் பொருளை விளங்கி, குறளை மனனம் செய்யவும்.

II) **பின்வரும் பந்தியை வாசித்து கீழ் வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

An employee in Canada is not supposed to work more than 8 hours a day and 40 hours a week, but there are some exceptions where the employers can apply for a permit to have 48 hours of work. If the employees work more than 40 hours a week, the employer must pay at the rate of one and a half pay for every hour over 40 hours work.

1) ஒரு வேலையாள் ஒரு நாள் வேலை செய்யும் மணித்தியாலங்கள் எவ்வளவு?..

..............................................................................................................................

2) நாற்பது மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்தால் முதலாளி எப்படி வேதனம் கொடுக்க வேண்டும்?

..............................................................................................................................

3) நாற்பது மணித்தியாலங்களுக்கு மேல் வேலை கொடுக்க வேண்டிய முதலாளி என்ன செய்ய வேண்டும்?

..............................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் - 4

## பாரதிதாசனின் இன்பத்தமிழ்

பாரதிதாசனின் இயற்பெயர் **கனகசுப்புரத்தினம்.** 1891ல் புதுவையில் பிறந்த இவர் மகாகவி பாரதியின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு, தமக்கு பாரதிதாசன் என்ற புனைப்பெயரை வைத்துக்கொண்டார். சிறு வயதிலேயே நல்ல கருத்துக்களை அமைத்து சிறு சிறு பாடல்களைப் பாடும் திறமை கொண்டு விளங்கினார். தமது ஆரம்பக் கல்வியை பிரெஞ்சுக் கல்லூரியில் பெற்றாலும் அவர் ஆர்வத்துடன் தமிழ் மொழியைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார். அவரது திறமையினால் பதினெட்டு வயதிலேயே அரசினர் கல்லூரியில் தமிழாசிரியராக நியமிக்கப்பட்டார். காலம் சென்ற **அறிஞர் அண்ணாத்துரை அவர்களால் புரட்சிக் கவிஞர் எனப் பட்டம் சூட்டப்பட்டுப் போற்றப்பட்டார்**. அக்கால அரசியலில் ஈடுபட்டுப் புதுவைச் சட்டமன்ற அவைத் தலைவராகவும் கடமை ஆற்றினார். **'குயில்'** எனும் இதழின் ஆசிரியராகவும், திரைப்படத் துறையில் பங்காற்றியவராகவும் பல திறமைகள் உடையவராக விளங்கினார்.

சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட தந்தை பெரியாரின் திராவிட இயக்கத்தில், ஆரம்ப காலம் தொட்டு தீவிர ஈடுபாடு கொண்டார். தமது கவிதைகள் மூலம் மூட நம்பிக்கைகளை எள்ளி நகையாடினார். கடவுள் மறுப்பு, சாதி ஒழிப்பு போன்ற கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு முன் நின்று உழைத்தார். 'புதியதோர் உலகம் செய்வோம், கொடும் போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்' என்ற அவரது கவிதை வரிகள் சாகா வரம் பெற்றவை. அவர் தமது "இந்தியா" என்ற இதழை மறைமுகமாகப் பதிப்பித்ததுடன், புதுவை முரசு எனும் வார இதழின் ஆசிரியராக இருந்து பல சீர்திருத்தக் கருத்துக்களைக் கவிதை வாயிலாக வெளியிட்டார்.

பாரதிதாசன், இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு எனத் தமிழுக்குச் செய்யும் தொண்டையே தம் வாழ்நாள் தொண்டாகச் செய்தவர். தமிழ், இன்பத் தமிழ், எங்கள் உயிருக்கு நேர் எனத் தமிழைத் தமது உயிரெனக் கருதிப் போற்றியவர். பின்வரும் கவிதையின் மூலம் அவரது தமிழ்ப் பற்றுப் பீறிட்டுப் பாய்வதனைப் படித்து மகிழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழுக்கும் அமுதென்று பேர் — அந்தத்
    தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
தமிழுக்கு நிலவென்று பேர் — இன்பத்
    தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்
தமிழுக்கு மணமென்று பேர் — இன்பத்
    தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்
தமிழுக்கு மதுவென்று பேர் — இன்பத்
    தமிழ் எங்கள் உரிமைச் செம்பயிருக்கு வேர்.

தமிழ் எங்கள் இளமைக்குப் பால் — இன்பத்
    தமிழ் நல்ல புகழ் மிக்க புலவர்க்கு வேல்
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் — இன்பத்
    தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள் — இன்பத்
    தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் — இன்பத்
    தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ

கிடைத்தற்கு அரிய அமுதம் எப்படிப்பட்ட சிறப்புக்களைக் கொண்டு இருக்குமோ அது போலவே தமிழும் எமது வாழ்விற்கு இனிமை தர இன்றியமையாதது. அதனால்தான் தமிழை அமுதம் என்றும் கூறுவார்கள். இனிமை பயக்கும் நிலவுபோல் போலவே தமிழும் இனிமை செறிந்த மொழியாம். மேலும் அது நம் மனித உயிருக்கு நிகரானது என ஒப்பிட்டுக்கூறுகின்றார்.

'உண்டவர்களை மேலும் மேலும் உண்ணச்செய்து மயங்க வைக்கும் மது போல, மீண்டும் மீண்டும் படிக்கவைத்து, கற்பவர்களை இன்பூட்டும் பண்பு தமிழுக்கு உண்டு என மதுவிற்கு, இன்புற வைக்கும் தமிழ் உவமிக்கப்படுகின்றது. நாம் தமிழர் என உரிமை கொண்டு வாழ்வதற்கும், வாழ்வு செழித்து வளர்வதற்கும் வேர் போன்று இருப்பது எமது மொழியாகிய தமிழே. செழிப்பு மிகுந்த எம் தமிழ் மொழி அழிந்தால் அது எமது பசுமையான வாழ்வின் வேர் அழிவது போன்றது எனும் ஆழ்ந்த தத்துவம் இக் கவிதையில் வெளிப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி இன்றேல் இனம் இல்லை, மொழி அழிந்தால் இனம் மெது மெதுவாக அழிந்துவிடும் என்ற உண்மையை பாரதிதாசன் இலகுவாக விளக்குகின்றார். தமிழ் இனம் உலகம் எல்லாம் பரவி வளருவதற்கு, தமிழ் சமுதாயத்தின் வேருக்கு நீராகத் தமிழ் மொழி விளங்குகிறது எனக் கூறுகின்றார். அதே சமயம் நறுமணம் போல எங்கும் பரந்து, ஈர்க்கும் தன்மை கொண்ட மொழி, தமிழ் எனக் கவிஞர் குறிப்பிடுகின்றார்.

எமது இனத்தின் தோற்றத்திற்குக் காரணமானது தமிழ் என்ற எமது தாய்தான். தமிழ் இன்றேல் தமிழினம் இல்லை. அப்படிப்பட்ட இன்பத் தமிழ் எங்கள் வாழ்க்கையை வளமுடையதாக மாற்றக்கூடிய தீ ஆகும். ஆக்கத்திற்காக தீயின் சக்தியை உபயோகிப்பதனைப் போலத் தமிழின் பலத்தினால் எமது வாழ்க்கையை உயர்த்துதல் கை கூடும் என்ற கவிஞரது அசையாத நம்பிக்கை புலப்படுகின்றது.

உவமைச் சிறப்பு மிக்கதாக பாரதிதாசன் இக் கவிதையை ஆக்கி உள்ளார். அமுதையும், நிலவையும், நறுமணத்தையும், மதுவையும் தமிழின் சிறப்பான தன்மைகளுக்கு உவமிக்கின்றார். தமிழ் உயிர் எனக் கூறும் அவர் நீரும், வேரும், வேலும், வாளும், தோளும், தாயும், தீயும் போல தமிழ் எம்மை வாழவைப்பதாக உருவகம் செய்கின்றார்.

இயற்கையை, காதலை, தமிழை, தமிழ் நாட்டை, தேசியத்தினை பாடிய பாரதிதாசன் மேலும் பல்வேறு தலைப்புக்களைக் கொண்ட கவிதைகளுடன் மூன்று காவியங்களையும் பாடி உள்ளார். **சஞ்சீவி, பர்வதத்தின் சாரல், புரட்சிக் கவி, வீரத்தாய்** என்ற அவரது கவிதைகள் யாவும் பலராலும் விரும்பிப் படிக்கப் படுபவை. "தமிழே நீ ஓர் பூக்காடு நானோர் தும்பி" எனப் பாடியதிலிருந்து அவர் தமிழ் மேல் கொண்ட ஆழமான காதலை நாம் அறிய முடிகின்றது. குடும்ப விளக்கு, புரட்சிக்கவி, எதிர்பாராத முத்தம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு போன்றவை அவரது இனிய இசைநயத்துடன், உணர்ச்சிப் புயலான கருத்துக்களைக்கொண்ட, சிறந்த நூல்களாகும்.

"தமிழுக்குத் தொண்டு செய்தோன் சாவதில்லை" என்றும் "தமிழை என்னுயிர் என்பேன்" என்றும் தமிழுடன் தனது உயிரை இணைத்துப் பாடிய மாபெரும் கவிஞராக, பாரதிதாசன் தமிழ் மக்கள் உள்ளங்களில் வாழ்கின்றார். இலக்கியத்திற்கான சாகித்திய அக்கடமியின் விருதுபெற்ற இக்கவிஞரின் நூல்கள் யாவும் தமிழ் நாடு அரசினரால் பொது உடமை ஆக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் 4 : பயிற்சிகள்

**I) பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக**

1) பாரதிதாசன் என்னும் புனைப்பெயரை எழுத்தாளன் சுப்புரத்தினம் ஏன் வைத்துக் கொண்டார்?

..............................................................................................................................

2) எந்த வார இதழின் ஆசிரியராக கடமை ஆற்றினார்?

..............................................................................................................................

3) புரட்சிக் கவிஞன் என்று யாரால் பாரதிதாசன் பட்டம் சூட்டப்பட்டார்?

..............................................................................................................................

4) பாரதிதாசன் மக்களுக்கு செய்த சேவைகள் எவை?

..............................................................................................................................

5) பாரதிதாசன் தமிழை பலவற்றிற்கு ஒப்பிடுகின்றார். அவற்றுள் மூன்று சிறப்புப் பெயர்களைத் தருக.

..............................................................................................................................

**II) பின்வரும் பந்தியில் உள்ள தவறான சொற்களைத் திருத்தி எழுதுக.**

அதிகாளையில் கோளி கூவியது. சூரியன் உதிக்கும் பொளுது விளங்குகள் கண் விளிக்கும். நாங்கலும் காளையில் எலுந்து கொல்வது நல்ல பளக்கமாகும்.

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III) மழையினால் நாம் பெறும் நன்மைகள் பற்றி ஐந்து வசனங்கள் எழுதுக

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

IV) பின்வரும் குறிப்புகளைக் கொண்டு அவை குறிக்கும் பழமொழிகளை அறிந்து எழுதுக

1) நல்ல பயிற்சி செய்தால் ஓவியத்தையும் தமிழையும் கற்கலாம்

.....................................................................................................

2) கடல் கடந்து சென்று செல்வம் தேடு

.....................................................................................................

3) எங்கள் வேலைகளை பிறரை நம்பாது நாமே செய்தல் நல்லது

.....................................................................................................

4) சிறு வயதில் கல்வி கற்றால் அது கல்லில் செதுக்கிய எழுத்துப் போல் நிலைத்து நிற்கும்

.....................................................................................................

5) கெட்டித்தனம் இருந்தாலும் சில வேளைகளில் பிழைகள் நேரலாம்

.....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V) **தமிழில் நாம் சொல்வதை விளக்கமாக உரைக்க இணைச் சொற்கள் உதவும்**

எ-கா: சோழ மன்னன் **பேரும் புகழும்** பெற்று வாழ்ந்தான்

பின்வரும் இணைச் சொற்களை வைத்து வசனங்கள் அமைக்க.

1) சீராட்டி பாராட்டி

..............................................................................................................................

2) விருப்பு வெறுப்பு

..............................................................................................................................

3) வெற்றி தோல்வி

..............................................................................................................................

4) குண்டுங் குழியும்

..............................................................................................................................

5) அன்றும் இன்றும்

..............................................................................................................................

VI) **பின்வரும் பந்தியில் ஏற்ற இடங்களில் நிறுத்தற் குறிகளையிடுக.**

ஆ ஆ என்ன அற்புதம் என்று பெரிய தம்பி உரத்துப் பேசினான் ஏன் உரத்துப் பேசுகின்றாய் என்று நான் கேட்டேன் தம்பி தங்கை அம்மா ஆகியோர் என்னைப் பார்த்து என்ன நடந்தது எனக் கேட்டனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VII) **வேலை, வேளை: ஒளி, ஒலி: காலை, காளை: பலம், பழம்: வலை, வளை: இச் சொற்களை ஏற்ற கீறிட்ட இடத்தில் எழுதுக**

1) யானை ..............................உள்ள விலங்கு. அது .............................. விரும்பி உண்ணும்.

2) வானத்தில் மின்னல் .............................. பளிச்சிட்டது. அதன் பின் இடி.............................. கேட்டது.

3) கமக்காரன் ..............................யில் வண்டியில் .............................. யைப் பூட்டி சந்தைக்குச் சென்றான்.

4) மீனை .............................. யினால் பிடிப்பர். சில மீன்கள் கல்லிலுள்ள ..............................யுள் புகுந்து தப்பிவிடும்

5) அப்பா காலை .............................. யில் எழுந்து .............................. க்குப் போவார்.

VIII) **பின்வருவனவற்றை அறிந்து எழுதுக.**

1) முக்கனிகள் எவை? ..............., ..............., ...............

2) மூவேந்தர்கள் யார்? ..............., ..............., ...............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) திரிகடுகங்கள் எவை? .................,.................................................................

.......,...........................................................................

4) முக்காலங்கள் எவை? .................,.................................................................

.......,...........................................................................

5) மூவகைத் தமிழ் எவை?.................,.................................................................

.......,...........................................................................

6) மும்மூர்த்திகள் யாவர்? .................,.................................................................

.,...........................................................................

7) கிறிஸ்தவ திரித்துவக் கடவுள்கள் யார்? ...............................................

.......,...........................................................................

8) உயர்திணையில் முப்பால்கள் எவை? .................,.........................................

.........,...........................................................................

9) மூவுலகங்கள் எவை? .................,.................................................................

.......,...........................................................................

10) மூவேளைகள் எவை? .......,.................................................................

.......,...........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டு வேலை

1) **எதிர்காலத்தில் நீர் சிறந்து விளங்க எத்தகைய முயற்சிகளை இன்று நீர் செய்தல் நன்று. பத்து வரிகளில் உமது விடையை எழுதுக.**

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

II) **பின்வரும் பந்தியிலுள்ள ஆங்கில ஒலிப்புச் சொற்களுக்கு ஏற்ற தமிழ் சொல்லை வைத்தும் வேறு சொற் பிழைகளையும் திருத்தியும் எழுதுக**

நான் என் அங்கிளின் வீட்டுக்குப் போனேன். கேற்று பூட்டியிருந்தது. அருகிருந்த காலிங் பெல்லை அழுத்தினேன். மாமி வந்து கேற்றைத் துறந்து உள்ளே அழைதுச் சென்றார், அங்கிள் என்னைக் கண்டதும் ஹவ் ஆர்யு எனக் கேட்டார். நல்லாய் இருக்கேன் அங்கிள் என்றேன், மாமி நான் விரும்பும் அப்பிள் ஜூஸ் கொண்டு வந்தார். தம்பி எப்படி ஸ்ரடீஸ்? மத்சில் என்ன மார்க் இம்முறை கிட்டைத்தது என்று கேட்டார். நயின்ரி எடுத்தேன் என்று விடை கூறினேன்.

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் – 5

## நம்பிக்கையின் வெளிப்பாடு

### முதல் அங்கம்

*(பாத்திரங்கள்:- அரசன், அரசி, விகடகவி , மந்திரி, இடம்: அரண்மனை)*
*(அரச சபையில் அரசன், அரசி, விகடகவி ஆகியோர் வீற்றிருக்கின்றனர். மந்திரியார் அரங்கினுள் பிரவேசிக்கின்றார்)*

**அரசன்:** அடாடா! மந்திரியாரே? வாருங்கள், வாருங்கள்! பல நாட்களாக உம்மை இந்தப் பக்கமே காணவில்லையே? உடல் நலம் எப்படி?

**விகடகவி:** குளிர் கூடிவிட்டதால் மூளை உறைந்து விட்டதோ? அதனால் வீட்டிலேயே பதுங்கி விட்டீர்கள் போல இருக்கிறது.

**அரசி:** மந்திரியார் தகுந்த காரணம் இல்லாமல் வராது விடமாட்டார். ஏதோ முக்கிய விஷயம் இருக்க வேண்டும், என்ன என்று கேளுங்கள் மன்னவா!

**மந்திரி :** அரசே ! தேவி கூறுவது சரிதான். தங்களது உளவாளிகள் மூலமும் என் மூலமும் சர்வமும் அறிந்த உங்களுக்குத் தெரியாத புதினத்தையா யான் கூறப் போகின்றேன்.

**அரசன்:** பரவாயில்லை மந்திரியாரே! பகரும்! பகரும்! நும் வாயால் செய்தியினைக் கேட்க யாம் விரும்புகின்றோம்.

**மந்திரி:** மன்னவா! பெரிதாக ஏதும் இல்லை, ஆனால் எனக்கு ஒரு தீராத ஐயம் ஏற்பட்டதால் நித்திரை இன்றி அவஸ்த்தைப் படுகின்றேன்.

**விகடகவி :** அடப் பாவமே! ஐயா மந்திரியாரே! நான் கைவசம் நல்ல மருந்து வைத்து இருக்கின்றேன். எதற்கும் முதலில் சிறிது...... உற்சாக பானம் பிரயோகித்துப் பாருங்கள்.

*( சபையில் சிரிப்பும், சலசலப்பும் கேட்கிறது.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசன்:** அமைதி! அமைதி! மந்திரியாரே! நோய்க்கு முதலில் காரணத்தினைக் காணுதல் வேண்டும். உமது ஐயம் என்னவெனக் கூறும். பின்னர் அது தீர்க்கும் வழியைக் காணலாம்.

**மந்திரி:** அரசே! யான் நாட்டில் சஞ்சாரம் செய்துகொண்டிருந்த போது ஒரு அபூர்வப் பிறவியைக் கண்டேன்.

**விகடகவி :** என்ன, எமக்குத் தீங்கு செய்ய யாரேனும் முளைத்து விட்டார்களா? எமது எதிரிகளின் துப்பறியும் கையாட்கள் யாராவது...?

**மந்திரி:**அல்ல..அல்ல. யான் கண்ட அம் மனிதன் சாதாரணமான ஒருவன் தான். ஆனால் அவன் சர்வ உலகையும் படைத்துக் காத்து அளிக்கும் முழுமுதல் கடவுளை நம்புபவன் அல்லப் பிரபோ!

**விகடகவி :** அடப் பாவமே, கடவுளுக்கும் சோதனையா? அம் மானிதப் பதர் முதலில் நம்புவது யாரை? அரசனையா.. அல்லது...எதனை அவன் நம்புகின்றான் எனக் கூறும்- மந்திரியாரே! கூறும்!

**மந்திரி:** அவன் தனது கைகளையே முதலில் நம்புவதாகச் சொன்னான் பிரபோ!

**அரசி:** அப்படியா!? நாதா இப்போதே அவனிடம் சென்று எமது கடவுளின் பெருமையை விளக்குதல் வேண்டும்.

**அரசன்:** மந்திரியாரே இன்று இரவு நாங்கள் மாறுவேடத்தில் ஊரை சுற்றி பார்த்து வர ஏற்பாடு செய்துள்ளோம். மகாராணியாரும் எங்களுடன் வரவேண்டும். நாம் நால்வரும் அந்த விசித்திர மனிதனை பார்த்து விசாரித்து வருவோம்.

**விகடகவி :** ஆமாம்! ஆமாம்! தேவிதான் குடைந்து கேள்விகளை எழுப்பி விடை காணக்கூடியவர்! தங்களது சித்தப்படியே ஆகட்டும் பிரபோ!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் அங்கம்.

*(பாத்திரங்கள்: அரசன், அரசி, மந்திரி, விகடகவி, முதியவர். இடம்: குடிசைவாசல்)*

*(முதியவர் கிழிந்த துணியைத் தைத்துக்கொண்டு இருக்கிறார். மற்ற மூவரும் தேவர்கள் வேடத்தில் அரங்கினுள் வருதல்.)*

**மந்திரி:** இதோ பாருங்கள் ! இங்கு இருப்பவர்தான் நான் கூறிய அந்த அபூர்வப் பிறவி.

**முதியவர்:** வாருங்கள், வணக்கம்! அமருங்கள்! அமருங்கள்! *(தொடர்ந்து கீழே பார்த்தபடி கிளிசலைத் தைத்தல் )*

**அரசி:** *(அரசனைப் பார்த்து)* புதுமையாக இருக்கிறதே! நாம் வருகை தந்திருக்கின்றோம். அவரோ எங்களை சாதாரணமானவர்கள் என எண்ணுகின்றார் போல இருக்கின்றது. மந்திரியாரே! எப்படி அவரது கவனத்தினை எம்பக்கம் திருப்பலாம்?

**அரசன் :** எமது கைவரிசையைக் காட்டுவோம். *(முதியவரைப் பார்த்து)* பெரியவரே! நாம் தெய்வீக சக்தி கொண்டவர்கள். முதியவரே! எங்களிடம் நீங்கள் விரும்பியதைப் பயமின்றிக் கேளுங்கள். அன்புடன் தருகின்றோம்.

**முதியவர்:** வரம் தரப்போகிறீர்களா? .ஹஹ்..ஹஹ்ஹா.(சிரித்தல்)

**அரசி:** வரம் வேண்டுமா என்று தானே கேட்டோம். அதற்கு ஏன் சிரிப்பு?

**முதியவர்:** தாயே! என் வாழ்வில் தேவைகள் மிகக் குறைவு. எனது தேவைகளை நானே நிறைவு செய்து கொள்கிறேன். அதனால் என் வாழ்வெல்லாம் நிறைவே! எனக்கு எதற்கு வரம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மந்திரி:** அதனால் என்ன! நீங்கள் வரம் கேட்டுத்தான் ஆக வேண்டும். யாம் யாரைப் பார்த்தாலும் வரம் தந்து செல்வதுதான் வழக்கம். பயமின்றி விரும்பியதைக் கேளுங்கள், முதியவரே.

**முதியவர்:** சரி,சரி, மிகவும் வற்புறுத்திக் கேட்பதனால் கேட்கின்றேன். இதோ, நான் தைத்துக் கொண்டிருக்கும் ஊசியின் பின் இந்த நூல் செல்லும் வரம் தாருங்கள். அது போதும் தாயே!

**அரசி:** என்ன சொல்லுகிறீர்கள் முதியவரே! இயற்கையாகவே ஊசியின் பின்தானே நூல் செல்லும். இதற்கு ஏன் வரம்? எமது நேரத்தினை வீணாக்காது விளக்கமாகக் கூறுங்கள்.

**முதியவர்:** தாங்கள் கூறுவது உண்மைதான் தாயே! ஊசியும் நூலும் போலவே, என் வாழ்க்கையும். நான் செய்யும் நன்மை தீமையை அடிப்படையாகக் கொண்டே எனது இன்பமும் துன்பமும் அமையும். நான் ஒரு நன்மை செய்தால் அதன் பின்பு இன்பம் வரும்! நான் ஒரு தீமை செய்தால் அதன் பின்பு துன்பம் வரும். இதில் எனக்கு எந்த வரமும் உதவப்போவதில்லை?

**விகடகவி :** ஆகா! ஆகா! எல்லோரும் உம்மைப் போலவே சிந்தித்தால் உலகின் தொல்லைகளில் பாதி குறைந்துவிடும் அன்றோ. வாழ்வும் தாழ்வும் அவரவர் கைகளிலேயே இருக்கின்றது. இந்த உண்மையை அறியாத மாந்தர் தாமே தமது கவலைகளை பெருக்கிக் கொண்டு போகிறார்கள்.

**அரசன்:** உண்மைதான்! முதியவரே! மனம் நிறைந்தால் யாவும் நிறைவு தான். மக்கள் தமது தேவைகளை அவசியம் இன்றிப் பெருக்கிக்கொண்டு வாழ்கின்றார்கள். பேராசை கொண்டு தமக்குள் போட்டியும் பகையும் பாராட்டி, போராடி மடிகிறார்கள். யாவரும் அன்பும் அகிம்சையும் கொண்டு வாழ்ந்தால் இவ்வுலகம் சொர்க்க பூமியாக விளங்கும் அல்லவா! நீவிர் பாக்கியவான்! வாழ்க!வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் 5 : பயிற்சிகள்

1) பின்வரும் கேள்விகளுக்கு விடை எழுதுக

1) இந்நாடகத்தின் பாத்திரங்கள் எவை?

.......................................................................................................................

2) அரண்மனைக்கு வந்தவர் யார்?

.......................................................................................................................

3) ஒற்றர்கள் என்றால் யார் ?

.......................................................................................................................

4) மந்திரியாருக்கு நித்திரை வராததிற்குக் காரணம் யாது?

.......................................................................................................................

5) முதியவர் தான் எதை முதலில் நம்புவதாகக் கூறினார் ?

.......................................................................................................................

6) மன்னன் முதியவரைப் பார்த்த போது முதியவர் என்ன செய்து கொண்டிருந்தார்?

.......................................................................................................................

7) முதியவர் மன்னனிடம் யாது கேட்டார்?

.......................................................................................................................

8) இக்கதையில் முதியவர் கூறிய வாழ்க்கைப் படிப்பினை என்ன?

.......................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II) **க், ச், ட், த், ப், ய், ல், வ், ள், ன் ஆகிய எழுத்துக்கள் தன் எழுத்துக்களுடன் கூடி வரும் இயல்புடையன**

எ-கா: பக்கம், பட்டம், கப்பல், கொய்யகம், பள்ளம்

இது போன்று தன் இனம் அடுத்தடுத்து வரும் எழுத்துக்களைக் கொண்ட பத்து சொற்கள் எழுதுக.

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

III) **பின்வரும் சொற்களை சந்தி பிரித்தெழுதுக**

எ-கா: மனமுடைந்து = மனம் + உடைந்து

1) தமிழகம் - ........................................................................................

2) முக்காலம் - ........................................................................................

3) நித்திரையின்றி - ........................................................................................

4) வாழுங்காலம் - ........................................................................................

5) மனதுக்கினிய - ........................................................................................

6) பனங்காய் - ........................................................................................

7) வெட்டுக்காயம் - ........................................................................................

8) கடுங்கோடை - ........................................................................................

9) வீட்டுக்கணக்கு - ........................................................................................

10) கற்சிலை - ........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV) பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொற்கள் தருக.

1) பகரும் ..........................................  2) பூலோகம் ..........................................

3) இன்பம் ..........................................  4) தந்தை ..........................................

5) தாய் ..........................................  6) ஆபரணம் ..........................................

7) மகன் ..........................................  8) சூரியன் ..........................................

9) புத்தகம் ..........................................  10) ஆசிரியர் ..........................................

## V) பின்வரும் சொற்களை வைத்து வசனம் அமைக்கவும்

1) வாழுங்காலம் ..........................................

2) கல்வியறிவு ..........................................

3) பட்டறிவு ..........................................

4) ஊடகங்கள் ..........................................

5) விடுமுறை ..........................................

## VI) மேலே எழுதிய வசனங்களிலிருந்து பின்வருவனவற்றைத் தருக

| | எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VII) நாம் ஏன் தமிழ் மொழியை கற்க வேண்டும் என்பதற்கு இரண்டு காரணங்கள் தருக.

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

VIII) **உயிர்மெய் எழுத்துக்கள் யாவும் மெய்யுடன் உயிர் சேர்வதால் உண்டாகின்றன.**

எ-கா: கை = க்+ஐ

பின்வரும் உயிர்மெய்களை, மெய் + உயிராகப் பிரித்து எழுதுக

| | உயிர் மெய் | மெய் | உயிர் |
|---|---|---|---|
| 1 | சி | | |
| 2 | டி | | |
| 3 | கொ | | |
| 4 | சௌ | | |
| 5 | பெ | | |
| 6 | தோ | | |
| 7 | கு | | |
| 8 | தூ | | |
| 9 | மி | | |
| 10 | மு | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுவேலை

I) நீர் பார்த்த ஒரு திரைப் படத்தைப் பற்றி ஐந்து வசனங்கள் எழுதுக.

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

II) நீர் வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் செல்லும் பாதைகளை படம் வரைந்து பெயரிட்டுக் காட்டுக.

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் - 6

## சாலை நெரிசல்

நகரங்கள் விரிவடைதலினால் ஏற்படும் பாதகமான விளைவுகளில் சாலை நெரிசலும் ஒன்றாகும். போக்குவரத்து நெரிசலுக்கு **சனத்தொகைப் பெருக்கத்துடன், சீரற்ற நகர நிர்மாணமும் சேரிகளின் பெருக்கமும் வர்த்தக, தனியார் உந்துப் பயன்பாட்டின் அதிகரிப்புமே பிரதான காரணங்களாக அமைகின்றன.** இன்று பெரும்பாலான நகரங்களில் போக்குவரத்து நெருக்கடி கட்டுப்பாடின்றி மீறிக்கொண்டே போகின்றது. விரைந்து செல்ல முடியாதபடி மக்களும் வாகனங்களும் நிறைந்துள்ள நெரிசலால், போக்குவரத்தில் அசையாநிலை ஏற்படுகின்றது. இதனால் ஏற்படும் சிரமங்களைக் களைவதற்கான முயற்சிகள் நகர நிர்வாகங்களினாலும் அரசினராலும் மேற்கொள்ளப்பட்டு வருவதனை நாம் அறிவோம்.

மக்கள் பல்வேறு வழிகளால் தங்களுடைய பணிகளுக்காக, மாநகருள் ஒவ்வொரு காலைப் பொழுதிலும் நுழைகின்றனர். ஆனால், அவர்கள் உரிய நேரத்தில் தங்கள் பணியிடங்களுக்குச் சென்று சேர்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். உந்துகளை விரைவாகச் செலுத்த முடிவதில்லை. நெரிசல் காரணமாக வாகனங்கள் ஒவ்வொரு சைகை விளக்குளிலும், நீண்ட நேரம் தரித்து நிற்க வேண்டியுள்ளது.

தொழிலாளர்களும், பணியாளர்களும் உரிய நேரத்திற்கு வேலைக்குச் செல்லமுடியாதபோது, நேரம் பிந்துவதால் வேலையிடத்தில் கண்டிக்கப்படுவதுடன், மன உளைச்சலுக்கும் ஆளாகின்றனர். பள்ளிப் பிள்ளைகளும் நேரத்துக்கு பள்ளி செல்ல முடிவதில்லை.

**மக்கள் தினமும் தமது பயணத்தில் நேரத்தினை மேலதிகமாகச் செலவிடுவதனால் பெறுமதி மிகுந்த மனிதவலு ஒவ்வொரு நாளும் வீணடிக்கப்படுகிறது.** அதனால் மறைமுகமாக நாட்டில் பெரும் பொருளாதாரச் சீரழிவு ஏற்படுகின்றது. பிரித்தானியாவில் 2006ல் வெளியிடப்பட்ட போக்குவரத்து அறிக்கையின்படி 2025ல் போக்குவரத்துப் பிரச்சனையால் ஏறத்தாழ 22 பில்லியன் பவுண்டுகள் (US $ 32 billion) நட்டம் ஏற்படலாம் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுகள் காலத்திற்குக் காலம் இது போன்ற நிலைமைகளைத் தவிர்ப்பதற்குப் பல திட்டங்களைச் செயற்படுத்தினாலும், இதுவரை எதுவுமே பிரச்சனைகளை முற்றாகத் தீர்ப்பதாக அமையவில்லை.

அரச நிறுவனங்களினால் சாலை நெரிசலைக் குறைக்க சில நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. அவற்றுள் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள **நடுநகர் பகுதிகளில் தனியார்வாகனப் போக்குவரவைக் கட்டுப்படுத்துவதும்** ஒன்றாகும். **ஒற்றை வழிப்பாதைகள் அமைப்பதன் மூலமும்** சாலை நெரிசலைக் குறைக்க முயல்கின்றனர். நகருக்குள் நுழையும் சிற்றுந்துகளைப் புறநகரில் நிறுத்துவதற்கு ஏற்றவகையில் தரிப்பிடம் அமைத்து அங்கிருந்து உள் நகருக்குள் **பொதுப் போக்குவரத்துகளைப் பயன்படுத்த ஊக்குவிக்கும் முறையும் உண்டு.** உந்துகளை நிறுத்திவிட்டு, **நகருக்குள் மிதியுந்துகளில் செல்லுதலை** சில நகர சபைகள் ஊக்குவிக்கின்றன.

இது போன்ற நடவடிக்கைகளுடன் மேலும் சில திட்டங்களை கையாளுதல் மூலம் சாலை நெரிசலைக் கட்டுப் படுத்தலாம். காலையிலும், மாலையிலும் பணியாளர்களும், தொழிலாளர்களும் இலகுவாகப் போகவும், வரவும் ஏற்ற வகையில், அதற்குரிய **கால எல்லையுள் பெரும் பார வண்டிகளின் உள் நுழைவைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.** வேண்டின், **மக்கள் அடங்கிய இரவில் அவை ஏற்றுமதி, இறக்குமதிகளைச் செய்யும்படி கட்டளையிடலாம்.** உள்நகருக்குள் நுழையும் உந்துகளுக்கு ஆயம் (தெருவரி) அறவிடும் முறையும் பல நகரங்களில் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. பள்ளிகளும் அலுவலகங்களும் ஆரம்பிக்கும் நேரங்களை முன்பின்னாக நகர்த்துவதும் பயனளிக்கும்.

நடுநகரப் பகுதிகளுக்குள் உள்ள தொழிலகங்களையும், ஏராளமான பணியாளர் **பணியாற்றும் நிறுவனங்களையும், புறநகரிலுள்ள துணை நகரங்களுக்கு மாற்றலாம்.** இதனால், நகரம் விரிவடைந்து மக்கள் அடர்த்தி குறையும் போது போக்குவரத்து நெரிசலும் குறையும். **பொதுமக்கள், பொதுப் போக்குவரத்து வசதிகளைக் கூடிய மட்டும் பயன்படுத்தத் தூண்டும்** பரப்புரைகளை மேற்கொண்டு, மக்கள் மனதில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் நெரிசலைக் குறைக்க முடியும்.

போக்குவரத்து நெரிசலை குறைக்கும் முயற்சிகள் வெற்றி பெறுமானால் பொருளாதாரம் முன்னேறுவதுடன், பொதுமக்களின் வாழ்க்கைத் தரமும் வீட்டில் குடும்பங்கள் ஒன்றுகூடி வாழும் மகிழ் நேரமும் சிறப்புறும் என்பது உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் 6 : பயிற்சிகள்

I) **பின்வரும் கேள்விகளுக்கு விடைதருக**

1) நகரங்களில் வாகன நெரிசல்கள் ஏற்பட இரண்டு காரணங்கள் என்ன?

..................................................................................................................................

..................................................................................................................................

2) சாலைநெரிசலைக் குறைக்க யார் உதவுதல் வேண்டும்?

..................................................................................................................................

3) சாலை நெரிசல் எப்படி மனித வலுவை வீணடிக்கின்றது?

..................................................................................................................................

..................................................................................................................................

4) போக்குவரத்து நெரிசலை தடுக்க தனியார் வாகன உரிமையாளர்கள் என்ன செய்ய வேண்டும்?

..................................................................................................................................

..................................................................................................................................

5) எந்த நேரத்தில் சாலை நெரிசல் நிகழ்கின்றது?

..................................................................................................................................

..................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**II) பின்வரும் தமிழ் சொற்களுக்கு ஏற்ற ஆங்கிலப் பதங்கள் தருக.**

1) போக்குவரத்து - ..........................................................................................
2) பொதியுந்து - ..........................................................................................
3) உந்துருளி - ..........................................................................................
4) தரிப்பிடம் - ..........................................................................................
5) ஸ்தம்பிதம் - ..........................................................................................
6) தொழிலாளர் - ..........................................................................................
7) இலட்சம் - ..........................................................................................
8) நடவடிக்கை - ..........................................................................................
9) ஓட்டுநர் - ..........................................................................................
10) எச்சரிக்கை - ..........................................................................................

**III) சில ஆங்கில சொற்களை ஒலிபெயர்த்தே தமிழிலில் எழுதலாம். மக்களின் பெயர்கள், ஊர்ப்பெயர்கள், விலங்குகளின் பெயர்கள் முதலியன இவ்வகைப் பெயர்கள் ஆகும். பின்வரும் சொற்களை ஒலிபெயர்க்கவும்**

**(ஒலி F= ஃப்)**

| | |
|---|---|
| 1) Churchill :.................................... | 2) Robin :.................................... |
| 3) Milton :.................................... | 4) Electron :.................................... |
| 5) Fax :.................................... | 6) New York:.................................... |
| 7) Telex :.................................... | 8) Chef :.................................... |
| 9) Paris :.................................... | 10) Germany :.................................... |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**IV) க்ங், ச்ஞ், ட்ண், த்ந், பம், ற்ன் இச்சோடி இன எழுத்துக்கள் பெரும்பாலும் அடுத்து அடுத்து வருகின்றன**

எ-கா: பங்கு, சங்கு, பட்டணம், பந்து, அப்பம், பன்றி

**ஒவ்வொரு சோடி எழுத்துக்களையும் கொண்ட இரு சொற்கள் எழுதுக**

1) க்ங் அ)........................................ ஆ)........................................

2) ச்ஞ் அ)........................................ ஆ)........................................

3) ட்ண் அ)........................................ ஆ)........................................

4) த்ந் அ)........................................ ஆ)........................................

5) ப்ம் அ)........................................ ஆ)........................................

6) ற்ன் அ)........................................ ஆ)........................................

**V) பின்வரும் பந்தியை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க**

"பண்டைக் காலத்தில் மக்கள் தொழிற்படி குலங்களாகப் பிரிந்து வாழ்ந்தனர். ஒரு தொழிலைச் செய்யும் பெற்றோரின் பிள்ளைகள் அதே தொழிலில் பயிற்சி பெற்றனர். இதனால் தொழில்வழிக் குலங்கள் தோன்றின. வருவாய் மிக்க தொழில் செய்தோர் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். இன்று கல்வி எல்லோர்க்கும் கிடைப்பதால் கல்வியில் முன்னேறுபவர் தாம் விரும்பிய தொழிலில் ஈடுபட வாய்ப்புண்டு. இதனால் சமுகப் பெயர்வு (social mobility) ஏற்பட்டு நாம் எல்லோரும் ஓர்குலம் என்ற தமிழரின் உயர்ந்த மனப்பாங்கை எம்மில் ஏற்படுத்தியுள்ளது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VI) பின்வரும் பழமொழிகளை விளங்குமாறு வசனங்களில் வைத்து எழுதுக

1) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்

2) எறும்பூரக் கல்லும் குழியாகும்

3) யானையும் அறுகம்புல்லில் சறுக்கும்

4) பொறுத்தார் அரசாள்வர்

5) பொற்குடம் உடைந்தாலும் பொன்னாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VII) சரியான சொல்லைத் தேர்ந்து கோடிட்ட இடத்தை நிறைவு செய்க
ஆவல், பட்டறிவு, மாசுபடுதல், செய்தியாளர், மறுசுழற்சி, ஒப்படை, திடுநேர்கை, வாகனம், இணையத்தளம், சுற்றாடல்

| | | | |
|---|---|---|---|
| 1) Environment | :...................................... | 2) Experience | :........................................ |
| 3) Assignment | :...................................... | 4) Pollution | :........................................ |
| 5) Recycle | :...................................... | 6) Accident | :........................................ |
| 7) Reporter | :...................................... | 8) Wagon | :........................................ |
| 9) Internet | :...................................... | 10) Desire | :........................................ |

VIII) கீழ் வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் வரும் கேள்விகளுக்கு தமிழில் விடை எழுதுக.

Man has explored the space, the thick forest and the highest mountains. One part of the world still not explored is the deep sea. Some have explored the sea mainly to find sunken treasures. In 1927 a diver named William Beebe wanted to explore deeper than anyone had ever gone before. He was interested in studying the plants and animals of the deep-sea. Two problems to be solved were the high pressure of water which is 15 pounds per square inch for every 34 feet and the air needed for breathing. In 1927 he invented the bathysphere. It was a hollow metal ball. It weighed more than 5000 pounds. He went down 3028 feet in the bathysphere. He saw many living things that had not been seen before.

1) ஆரம்ப காலத்தில் ஆழ்கடல் சென்றவர்களின் நோக்கம் யாது?

..............................................................................................................................

2) ஆழ்கடல் மூழ்குவோர் எதிர்கொள்ள வேண்டிய தொல்லைகள் எவை?

..............................................................................................................................

3) ஆழ்குமிழ் எவ்வாண்டில் செய்யப்பட்டது ?

..............................................................................................................................

4) ஆழ்குமிழில் எவ்வளவு தூரம் வில்லியம் கீழே சென்றார்?

..............................................................................................................................

5) ஆழ்கடலில் வில்லியம் கண்டது என்ன?

..............................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுவேலை

I) நோயுற்ற நண்பருக்கு தேற்றும் கடிதம் ஒன்று எழுதுக (100 சொற்கள்)

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

II) பின்வரும் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்குச் சொற்களாக எழுதுக.

1) குடுத்திட்டன் :..........................................................

2) வந்திட்டுப்போ :..........................................................

3) பொண்ணு :..........................................................

4) பார்த்துக்கணும் :..........................................................

5) குடுத்தேன் :..........................................................

6) நேரமாச்சு :..........................................................

7) படிச்சன் :..........................................................

8) ஓடிப்போட்டன் :..........................................................

9) எந்திரு :..........................................................

10) எங்கிட்டு இருக்கு :..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் - 7

## தமிழரின் விளையாடல்கள்

**பொழுது போக்கிற்காக மட்டும் அன்றி, நல வாழ்விற்கும் விளையாடல்கள் மூலம் உடற்பயிற்சியில் ஈடுபடுவது இன்றியமையாதது** என்பதை தமிழ் மக்கள் அறிந்து இருந்தனர். பண்டைய தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகள் மூலம் அதனை நாம் நன்கு உணரலாம். கிரேக்க நாட்டில் ஆரம்பித்த ஒலிம்பிக் பந்தயங்களில் இடம்பெறும் ஆட்டங்கள் இன்று பிரபலமாக இருந்த போதிலும், பண்டைய காலங்களில் இருந்து தமிழராலும் பல விளையாட்டுக்கள் ஆடப்பட்டு வருகின்றன.

**ஆண்பாலாரின் புறக் கடமைகட்கும் உடல் வலிவுக்கும், பெண்பாலாரின் அன்றாட கடமைகட்கும், உடல் மென்மைக்கும் ஏற்றவாறு தமிழரின் ஆடல்கள் அமைந்திருந்தன.** பண்டைய விளையாட்டுக்களில் பல இன்றும் உற்சாகத்துடன் பொழுதுபோக்கிற்காகவும் ஊர் மக்களிடையே போட்டிக்காகவும் விளையாடப்படுகின்றன. இவ்விளையாட்டுக்கள் **தமிழ் மக்கள் வாழ்வுடன் கலந்து இருந்தமையை பல பழைய தமிழ் இலக்கியங்களைப் படிக்கும் போது அறியலாம்.** தமிழர் விளையாட்டுக்களில் பல உபகரணங்கள் எதுவுமின்றி விளையாட முடியுமென்பது சிறப்பாகும்.

தமிழரது பல விளையாட்டுகளில் குறிப்பிடத்தக்கது **ஏறு தழுவுதல்** என்பதாகும். இதனை ஜல்லிக் கட்டு என்றும் மஞ்சு விரட்டல் என்றும் கூறுவார்கள். கொழுத்து, திமில் (hump) பெருத்த கூரிய கொம்புடைய, சினம்மிகுந்த காளையைத் தனித்துநின்று, ஆயுதமின்றி அடக்குவதே, ஏறுதழுவுதல் ஆகும். இந்த விளையாட்டில் கலந்து கொள்ளவும், பார்த்து மகிழவும், ஆர்வத்துடன் தூர இடங்களிலிருந்தும் வந்து மக்கள் குழுமுவார்கள். தமது உயிரையும் மதியாது இளைஞர்கள் பங்கு பற்றும் இவ்விளையாட்டு முல்லை நில ஆயர்களுடையது என அறிகின்றோம். ஆநிரை கவர்தல், மீட்டல் போன்ற போர் முயற்சிகளுக்கு உரிய பயிற்சியாக இது உதவியது. இன்றும் தமிழ் நாட்டில் பல கிராமங்களில் இது பெரும் விழாவாக இடம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சடுகுடு** விளையாட்டு இரண்டு அணியினரால் விளையாடப்படுவது ஆகும். ஓரணியின் எல்லைக்குள் மற்ற அணியைச் சேர்ந்தவன் சடுகுடு என்று விடாமல் சொல்லிக்கொண்டே ஊடுருவ முயல்வான். அப்படி நுழைய வருபவனை நுழையவிடாது, வளைத்துப் பிடிக்க, எல்லைக்குரிய அணி முயலும். அவர்களை வெற்றிகொண்டு, நுழைந்தவன் பிடிபடாமல் வெளியே வரவேண்டும். இதுவும் போரோடு தொடர்புடைய விளையாட்டே. எதிரியின் நாட்டினுள் நுழைவதற்கும், எதிரியிடம் அகப்படாமல் தப்புவதற்குமான பயிற்சியே இந்த விளையாட்டாகும்.

**கிளித்தட்டு** எனப்படும் விளையாடல் பலர் சேர்ந்து இரு குழுக்களாக ஆடும் மிகச் சிறந்த உடல் வலுவிற்கான விளையாட்டாகும். முன்னோக்கி ஓடும் ஒருவனை (காய்) எதிரி மறிப்பான். மறிப்பவனை ஏமாற்றும் பொருட்டு ஓடுபவன் பக்கவாட்டில் இடம் வலமாக உச்சுவான். அவ்வாறு உச்சுபவன் திடீரென்று நிலத்தில் காலால் உதைத்து, மறிப்பவனைத் தடுமாறவைத்து, வெளியேறி ஓட முனைவான். அவன் பாயும்போது அடிபட்டால் அணி ஆட்டமிழக்கும். இவ்விளையாட்டில் கிளியாக சுற்றி ஓடும் வீரனிடமிருந்தும் அடிபடாது ஓடுதல் வேண்டும். அடிக்கோட்டைத் தாண்டியவர் மீண்டும் முன்னோக்கிச் சென்று முன் கோட்டைத் தாண்டின் பழம் அதாவது வெற்றி கிடைக்கும். அவ்வாறு முன்செல்கையில் பின்னோக்கி வருபவரின் கட்டத்துள் காயும் பழமும் வரினும் அணி ஆட்டமிழக்கும், இதே போன்று **கபடி** ஆட்டமும் கால்களும், உடலும் முறுக்கேறி வலிமைபெறவும் கவனத்தினைச் சிதறவிடாது கருமமே கண்ணாக இருப்பதற்கும் சிறந்த பயிற்சியாக இன்றும் ஆடப்படுகின்றது.

**சிலம்பாட்டம்** என்பது நீண்ட கம்புகொண்டு சுழற்றி விளையாடும் ஒரு விளையாட்டாகும். அண்ணளவாக இரண்டு மீற்றர் நீளமுள்ள ஒரு கம்பைக் கையில் வைத்துச் சுழற்றி, எதிரியைத் தாக்குவதும், எதிரியிடமிருந்து தன்னைத் தற்காப்புச் செய்வதும் இந்த விளையாட்டின் நோக்கமாகும். சிறந்த சிலம்பாட்ட வீரன், தன்னை நோக்கி எதிராளியால் வீசி எறியப்பட்ட பொருளையும் சிலம்பினால் தடுக்கும் வல்லமை கொண்டிருப்பான்.

**மற்போர்** ஆயுதங்கள் இன்றி உடல் வலிமையால் வெற்றிகொள்ளும் விளையாட்டு ஆகும். பண்டைய நாட்களில் இந்திரவிழாவின்போது, தமிழகத்தில் மற்போர் போட்டிகள் நடந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. **வாள்வீச்சு, ஈட்டியெறிதல், அம்பெய்தல்** போன்ற விளையாட்டுகளையும் அனைவரும் விளையாடினர். இவ்விளையாட்டுகள் கையை வலிவுபெறச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் விளையாட்டுகளாகும். **குதிரை ஏற்றம், யானைஏற்றம் வாள்வித்தை, வேல்வித்தை, வில் வித்தை** போன்ற பயிற்சிகள் குருகுலங்களில் இளமையிலேயே பயிற்றப்பட்டன.

பெண்களின் உடல் மென்மைக்கும், அன்றைய இல்லறக் கடன்களுக்கும் பொருந்திய வகையில் எல்லாப் பராயத்துப் பெண்களும் விளையாடினர் என்பது தெரிகிறது. பெண்கள் குரவை, சாழல், பந்தாட்டம், பாண்டி போன்ற விளையாடல்களையும் விளையாடினர். வீட்டில் அம்மியில் அரைத்தல், திருகையில் தானியங்களை திரித்தல், தேங்காய் துருவல், முறத்தில் கொளித்தல் முதலிய வேலைகளும் பெண்களின் உடல் அமைப்பினை திடமாய் வைத்திருக்க உதவியது. உரலில் உலக்கை கொண்டு பாடிப்பாடி இடிப்பது ஒரு விளையாட்டாகும். இது அரிசி குற்றல், மாவிடித்தல், சுண்ணமிடித்தல் போன்ற வேலைப் பயிற்சிக்காகத் தோன்றியிருக்கலாம்.

**குரவை என்பது பெண்கள் குழுவாக ஆடும் ஓர் ஆட்டம். இது இன்று கும்மி என்று அழைக்கப்படுகிறது.** இவ்வாட்டங்களின் போது பெண்கள் பாடல்கள் பாடி ஆடும் வழக்கம் இருந்தது. குமரிப் பெண்கள் இவ் வகையான விளையாடல்களை ஆடியதாகச் சிலப்பதிகாரம், குற்றாலக் குறவஞ்சி போன்ற இலக்கியங்கள் கூறுகின்றன.

ஆறு குளம் கடல் உள்ள இடங்களில் வாழ்ந்த ஆண்களும் பெண்களும் **நீச்சல்** செய்து, புனல் விளையாட்டில் ஈடுபடுவதும் வழக்கமாக இருந்தது.

**நோயின்றி நலவாழ்வு பெறுவதற்கு உடல் வலிவு வேண்டும்.** அதற்கு விளையாட்டுக்களும் உடற்பயிற்சிகளும் இன்றியமையாதவை. ஆதலால் தற்காலத்தில், ஓர் இடத்திலேயே இருந்துகொண்டு மூளையால் வேலை செய்யும் ஆண்களும் பெண்களும் உடற்பயிற்சிக்காக தமது ஓய்வு நேரத்தில் விளையாட்டுத் திடல் சென்று விளையாடுவார்கள். பலர் நவீன மேலை நாட்டு விளையாட்டுக்களை நாடுவதனையும் உடற்பயிற்சி ஏதனங்களைப் பயன்படுத்துவதனையும் காணலாம். மாறிவரும் உலகச் சூழலுக்கு ஏற்ற வகையில் இன்று தமிழர் மத்தியில் உதைப் பந்தாட்டம், துடுப்பாட்டம், கூடைப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், கைப் பந்தாட்டம் போன்ற பல நவீன விளையாட்டுக்களும் இடம் பெறுகின்றன. இன்று ஆண்களுக்கு நிகராக பெண்களும் பல விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் 7 : பயிற்சிகள்

I) **பின்வரும் கேள்விகளுக்கு விளையாட்டுப் பாடத்திலிருந்து விடை எழுதுக**

1) விளையாட்டுக்களினால் ஏற்படும் நன்மைகள் யாவை?

........................................................................................................................................................

2) இன்று அலுவலகங்களில் வேலை செய்வோர் எவ்வழியில் உடற்பயிற்சி பெறுகின்றனர்?

........................................................................................................................................................

3) உடற்பயிற்சியால் உடலின் எப்பகுதிகள் நன்னிலை அடைகின்றன?

........................................................................................................................................................

4) பண்டைய தமிழர் ஆடிய மூன்று விளையாட்டுக்கள் எவை?

........................................................................................................................................................

5) பெண்கள் ஆடிய மூன்று விளையாட்டுக்கள் எவை?

........................................................................................................................................................

6) ஆண்கள் ஆடிய ஆட்டங்கள் எந்நோக்கத்தை நிறைவேற்ற உதவின?

........................................................................................................................................................

7) உபகரணங்கள் இல்லாது ஆடக்கூடிய விளையாட்டுக்கள் எவை?

........................................................................................................................................................

8) பெண்கள் உடற்பயிற்சி பெற உதவிய வீட்டு வேலைகள் எவை?

........................................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II) **பின்வரும் சோடிப் பதங்களை ஒரே வசனத்தில் வருமாறு சொற்றொடர் அமைக்க**

1. **பெண்கள், கும்மி எ-கா. கும்மி பெண்கள் மட்டும் ஆடும் ஒரு நடனமாகும்.**

2. பல விளையாட்டுக்கள் , இருகுழுக்கள்

..............................................................................................................................................................

3. தசை, நரம்பு

..............................................................................................................................................................

4. கிளித்தட்டு, உபகரணம் இல்லாது

..............................................................................................................................................................

5. சிலம்பாட்டம், கம்பு

..............................................................................................................................................................

III) **பின்வரும் சொற்களை சந்தி பிரித்தெழுதுக**

1) அறிவகம் - ..............................................................................................

2) நோயின்றி - ..............................................................................................

3) உடற்பயிற்சி - ..............................................................................................

4) இன்றியமையாதது - ..............................................................................................

5) முறுக்கேறி - ..............................................................................................

6) சிலம்பாட்டம் - ..............................................................................................

7) நூற்றாண்டு - ..............................................................................................

8) பந்தாட்டம் - ..............................................................................................

9) பங்காற்று - ..............................................................................................

10) வலுவற்றோர் - ..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV) **பின்வரும் தமிழ் சொற்களுக்கு ஏற்ற ஆங்கிலப் பதங்கள் தருக.**

1) உச்சுதல் ..........................................
2) துடுப்பு ..........................................
3) இலக்கு ..........................................
4) ஆடுதிடல்: ..........................................
5) உடற்பயிற்சி ..........................................
6) வலைப்பந்து..........................................
7) மற்போர் ..........................................
8) குத்துச்சண்டை ..........................................
9) உதை பந்து ..........................................
10) அணிகள் ..........................................

V) **பின்வரும் வசனங்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புக**

1) உலகம் ..........................................வடிவம் உடையது.
2) தாமரை வந்தாள். இவ்வசனத்தில் ஒரு..........................................பெயரான தாமரை ஒரு.......................................... இன் பெயராக வருகின்றது.
3) உரலின் குழியுள் தானியத்தை இட்டு..........................................யால்..........................................
4) உடற்பயிற்சி..........................................களை வலுவடையச் செய்யும்.
5) விளையாட்டு உடல் ..........................................தருவதோடு மன.......................................... .யையும் தருகின்றது.

VI) **இருபொருள் தரும் பின்வரும் சொற்களின் இரு கருத்துக்களையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் தருக**

1) திரை : .......................................... ..........................................

.......................................... ..........................................

2) குலை : .......................................... ..........................................

.......................................... ..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) மாலை : ........................................ ........................................

........................................ ........................................

4) கலை : ........................................ ........................................

........................................ ........................................

5) உடை : ........................................ ........................................

........................................ ........................................

**VII) பின்வரும் கூற்றுக்களை ஆங்கிலத்துக்கு மொழி பெயர்க்க.**

1) கற்பவை கசடு அறக் கற்க.

................................................................................

2) தீயினால் அழிக்க முடியாத செல்வம் கல்வியே.

................................................................................

3) எண்ணும் எழுத்தும் இரு கண்களுக்கு ஒப்பானவை.

................................................................................

4) கொடுத்தாலும் குறையாத செல்வம் கல்வி.

................................................................................

5) காய்ச்சினும் பால் சுவையில் குன்றாது.

................................................................................

**VIII) கலந்துரையாடல் இன்று மக்கள் விரும்பி விளையாடும் அல்லது ரசிக்கும் மூன்று விளையாட்டுகள் பற்றி பின்வரும் தலைப்புக்களில் கலந்துரையாடுக**

1) விளையாட்டுத் திடலின் அமைப்பு
2) ஆட்டக்காரர்களின் எண்ணிக்கை
3) எவ்வாறு ஆடப்படுகின்றது
4) வெற்றி தோல்வி எவ்வாறு தீர்மானிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வீட்டுவேலை

I) நீர் விரும்பும் ஒரு விளையாட்டை விபரித்து எழுதுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II) உலகப் படம்




**உலகப் படத்தைப் பார்த்து கீழ்வரும் கேள்விகளுக்கு விடைதருக**

1) படத்தில் தரப்பட்ட ஏழு கண்டங்கள் எவை?

.....................................................................................................................

2) பூ மத்தியகோடு எக்கண்டத்தை இரண்டாகப் பிரிக்கின்றது?

.....................................................................................................................

3) எக்கண்டம் நீரினால் சூழப்பட்டுள்ளது?

.....................................................................................................................

4) அன்ராட்டிக் எத்துருவத்தில் உள்ளது?

.....................................................................................................................

5) தமிழர் அதிகமாக வாழும் பத்து நாடுகள் தருக

.....................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் - 8

## மனித வாழ்வில் அறிவியல்

**சமுதாயத்தின் வளர்ச்சிப் படிகளில் அறிவியல் வகிக்கும் பங்கு சாலப் பெரியது.** நவீன அறிவியல் மனிதரின் வாழ்வில் தொடர்ச்சியாகப் பல புதுமைகளை அறிமுகப்படுத்தி வருவதனை நாம் அறியலாம். **பண்டைக்கால சமூகங்களில் தீ, சில்லு, கல், கொம்பு ஆயுதம்** என்பன மக்கள் வாழ்விற்கு உதவின. தொடர்ந்து இடம் பெற்ற புதிய புதிய கண்டுபிடிப்புகள், பல சமுதாய மாற்றங்கட்கு காலாக அமைந்து மனிதனின் அன்றாட நடவடிக்கைகளுடன், தவிர்க்க முடியாதபடி பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. கடந்த காலங்களில் பல அழிவுச் சக்திகளையும் அறிவியல் மூலம் சமூகங்கள் எதிர்கொண்ட போதும், தீமைகளைத் தவிர்த்து மனித வாழ்வில் நன்மைகளைப் பெருக்குவதற்கே பெரும்பாலான அறிவியல் வல்லுனர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

மத்திய காலத்தில் பல அறிஞர்கள் தோன்றி மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார்கள். மதகுருமாரின் கட்டுப்பாட்டில், அடக்கப்பட்டிருந்த அறிவியல் 18ம் நூற்றாண்டில் படிப்படியாக சீர்திருத்தம் பெற்றது.. அறிவியல் வளர்ச்சியின் காரணமாக, பல புதிய ஆராய்ச்சிகளும் கண்டு பிடிப்புக்களும் மக்களின் கண்மூடித்தனமான நம்பிக்கைகள் தவறானவை என அறியவும் வழி வகுத்தன.

அச்சிடும் முறை 1454ம் ஆண்டில் 'கூடன்பெர்க்' (G.J.Gutenberg) என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டதால் நூல்கள் பெருமளவில் அச்சிடப்பட்டு, மக்களிடையே அறியாமை இருள் நீங்கி, அறிவு பரவ ஆரம்பித்தது. முதலில் சீனாவில் மர அச்சு முறையில் பதிப்பித்த முறை அறிவியல் வளர்ச்சியால் இன்று பல படிகளைத் தாண்டி முப்பரிமாண அச்சடித்தல் முறையில் நூல்கள் வெளியாகின்றன. இவற்றால் மனிதனின் சிந்தனை விரிவு பெற்று பரந்த மனப்பான்மை கொண்டவனாக வாழ முடிகின்றது.

மக்களின் வாழ்க்கை முறையில் மின்சக்தியை வசப்படுத்தியதும், மின் குமிழ்களைப் பாவனைக்குக் கொண்டுவந்ததும், கணக்கில் அடங்கா வசதிகளை ஏற்படுத்தி உள்ளது. நீராவிச் சக்தியைக்கொண்டு பல பாரிய எந்திரங்களை இயக்கியதனைத் தொடர்ந்து, நிலக்கீழ் எண்ணைமூலம் இயங்கும் இயந்திரங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரைவாகனங்கள், பறக்கும் விமானங்கள் என்பன மனிதனின் கனவுகளைத் தோற்கடிக்கும் சாதனைகளாக அமைகின்றன. விண்வெளி ஆராய்ச்சிகளால் **1969ம் ஆண்டு, மனிதன் சந்திரனுக்கு விண்கலனில் பயணம் செய்து வர முடிந்தது.** அண்மையில் நாசா (NASA) செவ்வாய் கிரகத்திற்கு விண்கலத்தினை ஏவி அதன் மூலம் பல ஆய்வுகள் செய்ய முடிந்தது. தொடர்ச்சியாக செய்மதிகள் மூலம் மற்றைய கிரகங்களைப் பற்றியும் பிரபஞ்சத்தைப் பற்றியும் மேலும் விபரமாக ஆராய முடிகின்றது.

**அறிவியலின் வளர்ச்சியால் கண்டறியப்பட்ட தொடர்பு சாதனங்கள் மக்கள் வாழ்வில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது**. 1870 ஆம் ஆண்டு 'Alexander Graham Bell' என்பவரால் தொலைபேசி கண்டறியப்பட்ட போது அது மின்கம்பி இணைப்புக்கள் ஊடாக செயல்பட்டது. பின்னர் மின்குறிப்பு அலைகளை உபயோகிக்கும் கம்பி இல்லா தொலைபேசி பாவனைக்கு வந்தது. இன்றோ தொலைத் தொடர்பாடல் செயற்கை மதிகள் மூலம், செயல்படுகின்றது. தற்போது இணையத்தில், ஒலியூடான தொலைபேசிகள் அகன்ற அலை இணைய இணைப்புக்களைப் பிரயோகிக்கின்றன.

இன்று கணினியின் உபயோகம் பல துறைகளில் பயன்படுகின்றது. இதன்வழியாக 'டிம் பெர்நேர்ஸ் – லீ' ( Tim Burners Lee ) என்பவரால் 1994 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட **வையக வியாபக வலை** ( World Wide Web :www ) மிகவும் முக்கியம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இணையத் தளத்தின் பாவனை மூலம் உலகம் சுருக்கப் பட்டு விட்டது. மின் அஞ்சல்கள் மூலமும், முகம் பார்த்து பேசும் வசதி கொண்ட தொலை பேசி மூலமும் உலகின் ஒவ்வொரு கோடியிலும் இருந்து கொண்டே ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளுகின்றனர். ஏறக்குறைய இருபத்தைந்து வீதத்திற்கு மேலான மக்கள் இணையத்தளப் பாவனையில் ஈடுபடுகின்றனர். கணினி மூலம் நாளிதழ்களும் புத்தகங்களும் வெளியிடும் முறைகளும் விரிவும், விரைவும் பெற்றுள்ளது.

எமது வாழ்வில் பயன் படுத்தும் பல கருவிகள் மின்னணு (Electronics) பொறியியல் முறையில் உற்பத்தியாக்கப்படுகின்றன. அவற்றில் கைத்தொலை பேசிகள், தொலைக்காட்சித் திரைகள். வங்கி அட்டைகள் போன்ற பல பொருட்களில் மின்நுண்மங்கள் (micro chips) உபயோகிக்கப்படுகின்றன. இவை கண்டறியப் பட்டதனால் வர்த்தகத் துறையில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அத்துடன் பொழுதுபோக்கு, போக்குவரத்து, பாதுகாப்பு, குற்றத்தடுப்பு போன்ற பல வேறு துறைகளிலும் பல பொறிகள் பயன்படுகின்றன. இவற்றினை உற்பத்தி செய்யும் வர்த்தக நிலையங்கள் பல கோடி பெறுமதியான பன்னாட்டு வணிகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுகின்றன பலருக்கு வேலைவாய்ப்புகள் அளிப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரங்கள் வளர வழி வகுக்கின்றன.

**அடுக்களையில் இருந்து அலுவலகம் வரை உபயோகிக்கும் பல பாவனைப் பொருட்கள் இன்றைய மனிதரின் அன்றாட வாழ்விற்கு இன்றி அமையாதுள்ளன.** மக்களின் நேரத்தை மட்டும் அன்றி பணத்தையும் மிச்சம் பிடிப்பதனால் இப் பொருட்களின் தேவை அதிகரித்துக் கொண்டே போகின்றது. இதனால் படிப் படியாக மக்களின் நடவடிக்கைகளில் நவீன அறிவியலின் பயன்பாடு அதிகரித்துக் கொண்டே போகின்றமை தவிர்க்க முடியாத அம்சமாக உள்ளது.

மனிதன் படிப் படியாக எந்திரங்களுக்கு அடிமையாகின்றான் என்று குறைபடுவோரும் உண்டு. **ஆக்கபூர்வமாக அறிவியல் பயன்பட வேண்டுமானால், கடந்த காலங்களைப் போல உலகப் போர்களினாலும் விபத்துக்களினாலும் மக்கள் அழிவது தவிக்கப்படல் வேண்டும்.** அறிவியலை மனிதரின் முன்னேற்றத்திற்கு மாத்திரம் உபயோகிப்பதில் உலக நாடுகள் இணக்கத்திற்கு வருவது அவசியமானது.

அறிவியலின் பல பிரிவுகள் பல நூற்றாண்டு காலமாக கல்விக் கூடங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் ஆரம்பிக்கப்பட்டு பயிற்றுவிக்கப் படுகின்றன. கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியல், உயிரியல், சமூகவியல் ஆகிய பெரும் பிரிவுகளாக கற்கை நெறிகள் இன்றைய அறிவியலில் அடங்கி உள்ளன. நுண்ணிய ஆய்வுக்கு உட்படும் அறிவியலின் வளர்ச்சி கற்கை நெறிகளில் புதிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. அறிவியல் வளர்ச்சியால் இன்று மேலும் பல பல உள் பிரிவுகளாக கற்கை நெறிகள் வகுக்கப்பட்டு, உலகம் எங்கும் உள்ள பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் ஆழமாகப் பயிலக் கூடியதாக உள்ளது. ஆய்வுக்கூடங்களில் தொடர்ந்து இடம் பெறும் ஆய்வுகள் மனிதரின் வாழ்வின் சகல அம்சங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்திய வண்ணமே உள்ளன.

பண்டு தொட்டு சமுதாய முன்னேற்றத்தின் பாதை பாரம்பரிய முறையிலான கல்வியில் தங்கி இருந்தது. அதன் காரணமாக படிப் படியாக வளர்ந்து வரும் அறிவியல் கல்விக்கான தேவை எமது சமுதாயத்தின் இடையறாத எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது. அதன் தளத்தில் வளரும் புதிய அணுகு முறைகள் கொண்ட அறிவியல் வளர்ச்சி இன்றைய வாழ்க்கை முறையில் அதிக செல்வாக்கினைச் செலுத்தும் பாங்கு தவிர்க்க முடியாததாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் 8 : பயிற்சிகள்

1) **பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக**

1) ஆதி மனிதன் வேலையை இலகுவாகச் செய்ய உபயோகித்த சாதனங்கள் எவை?

..........................................................................................................................................

2) எந்த நூற்றாண்டில் அறிவியல் கண்டுபிடிப்புக்கள் மனிதருக்கு உதவத் தொடங்கின?

..........................................................................................................................................

3) நீராவியின் சக்தியா அல்லது மின்சக்தியா எந்திரங்களை இயக்க முதல் பயன்படுத்தப்பட்டது?

..........................................................................................................................................

4) தொலைபேசியை எவர் கண்டுபிடித்தார்?

..........................................................................................................................................

5) வாகனங்களை இயக்குவதற்குப பயன்படும் இரண்டு சக்திகள் எவை?

..........................................................................................................................................

6) இணையவலையினால் நாம் அடையும் நன்மைகள் என்ன?

..........................................................................................................................................

7) காற்று, நீர், சூரிய சக்தி மற்றய சக்திகளைவிட ஏன் மேலானது?

..........................................................................................................................................

8) ஒரு காலத்தில் நாம் பயன்படுத்த முடியாது அழிந்துபோகக்கூடிய சக்தி தரும் பொருள் யாது?

..........................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II) **பின்வரும் வாக்கியங்களை வினா வாக்கியமாக மாற்றுக.**

**எ-கா: தம்பி இன்று பள்ளிக்குப் போகவில்லை.**
**தம்பி இன்று பள்ளிக்குப் போகவில்லையா?**

1) வள்ளுவர் புலால் உண்பதை தவிர்க்கும்படி வற்புறுத்துகிறார்.

..........................................................................................................................................

2) ஏழு கிலோ தாவர உணவை ஆட்டுக்குக் கொடுத்தால் ஆட்டிலிருந்து ஒரு கிலோ இறைச்சியையே நாம் பெறுகின்றோம்.

..........................................................................................................................................

..........................................................................................................................................

3) மரக்கறி உணவு உண்பதால் உலகில் உணவுப் பற்றாக் குறையைப் போக்கலாம்.

..........................................................................................................................................

..........................................................................................................................................

III) **மரபுச் சொற்பிழை திருத்தி எழுதுக.**

1) யானை அலறியதைக் கேட்ட குதிரை கத்தியது. குருவிகள் கூவின.

..........................................................................................................................................

2) அருளன் புல்லாங்குழலை இராகத்துடன் ஊதினான்.

..........................................................................................................................................

3) தறியில் சேலை பின்னலாம்.

..........................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV) பின்வரும் சோடி வாக்கியங்களை கலவை வாக்கியமாக (ஒரே வாக்கியமாக) எழுதுக.

**எ-கா: தங்கை அழுதாள். அம்மா தங்கையை அரவணைத்தாள்.**

**அழுத தங்கையை அம்மா அரவணைத்தாள்.**

1) பாட்டி அரிசியை களைந்தாள். உலையில் அரிசியைப் போட்டார்.

......................................................................................................................................

2) அருண் நண்பர்களுடன் போட்டியில் கலந்தான். அருண் வேகமாக நீந்தினான்.

......................................................................................................................................

3) பட்டாசு வெடித்தோம். நாங்கள் தீபாவளி கொண்டாடினோம்.

......................................................................................................................................

## V) பிறமொழிச் சொற்களை நீக்கி ஏற்ற தமிழ்ச் சொற்களை அமைத்து எழுதுக

1) தோட்டத்தில் நான் மல்லிகைப் புஷ்பங்களை கொய்து என் அம்மாவுக்கு சிரசில் சூடக் கொடுத்தேன்.

......................................................................................................................................

......................................................................................................................................

2) கந்தோரில் வேலை செயும் குமாஸ்த்தாக்களுக்கு ஒரு வருஷத்தில் 14 நாட்கள் லீவு கொடுக்கப்படும்.

......................................................................................................................................

......................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VI) **பின்வரும் சந்திப் பிரிப்புகளில் சரியானதன் அருகே சரி இடுக.**

1) தென்மேற்கு = தென் + மேற்கு ( ) தெற்கு + மேற்கு ( ) தெற் + மேற்கு ( )

2) மூவுலகம் = மூன்று + உலகம் ( ) மூ + உலகம் ( ) மூவு + உலகம் ( ).

3) பூங்கொத்து = பூ + கொத்து ( ) பூம் + கொத்து ( ) பூங் + கொத்து ( )

4) இன்றியமையாதது = இன்றி + அமையாதது ( ) இன்றிய + அமையாதது ( )

இன்றியமை + ஆதது ( )

VII) **கீழ்காணும் சொற்றொடர்களில் சந்திப் பிழை நீக்கி எழுதுக.**

1) அந்த காலத்தில் பாரதியாரது சொற்பொழிவு இல்லா கூட்டங்கள் நிகழ்வது அரிது.

.............................................................................................................................................

.............................................................................................................................................

2) கடல் கரையில் சிறுவர் பந்தடித்து விளையாடினர். ஒரு நாய் பந்தை தூக்கி சென்றது.

.............................................................................................................................................

VIII) **பின்வரும் சொற்றொடர்களில் வேற்றுமை உருபுகளை அமைத்து எழுதுக.**

1) தந்தை மகன் ............................... அறிவுரை கூறினார். மகன் அறிவுரை............................... ஆர்வத்............................... கேட்டான்.

2) ஒரு தந்தை மகன்............................... செய்யும் உதவிக்கு கைம்மாறு தந்தை ............................... பிற்காலம்............................... அவர்............................... ஆதரிப்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுவேலை

I) 'அறிவியல் மக்களுக்கு உதவினும் அது அழிவையும் தரும்.'

இக் கூற்றை ஆதரித்து ஒரு சிறு கட்டுரை எழுதுக.

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

II) பின்வரும் சொற்றொடர்களை வாசித்து விளங்கியபின் கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற சொல்லை தேர்ந்து எழுதுக.

வெற்றி எனதென தளராது முயன்றால் வெற்றி உமதாகும்.

பற்றுடன் உறுதிகொண்டு துணிந்து கருமம் செய்வீர்.

துணிவுடன் காலை முன்வைப்பின் வெற்றிநிலை தவறாது.

ஐயம் போக்கி என்றும் நம்பிக்கையை வளர் உவப்பாய்.

தயங்கித் தடுக்கி விழுந்ததால் விழிப்புடன் எழுவாய்.

வல்லமை கொண்டு தோல்வியை புறம் கொள்.

நேர் வழி நடக்கத் திடமாய்த் துணிவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With determination : ..........................................................................................................

Success : ..........................................................................................................

With a firm desire : ..........................................................................................................

Slip : ..........................................................................................................

Hope : ..........................................................................................................

Will not be missed : ..........................................................................................................

With foresight : ..........................................................................................................

Firmly : ..........................................................................................................

Failures : ..........................................................................................................

Happily : ..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் - 9

## குற்றவியல் தடுப்பு நடவடிக்கைகள்

மானிட இனம் சமூகங்களாக வாழத் தொடங்கிய காலம் தொட்டே குற்றவியல் தடுப்பு நடவடிக்கைகள் இடம் பெற்ற வண்ணம் இருக்கின்றன. குற்றச்செயல்கள் பல்வேறு சூழ்நிலைகளில் நடைபெறுகின்றன. வாழும் வகை தெரியாமல், **வறுமையின்** காரணமாக, பிறர் பொருள் மீது கொண்ட **பேராசை** காரணமாக, **முரட்டுத்தனமான மனப்போக்கு** காரணமாக, **வஞ்சம் தீர்க்கும், பழிவாங்கும்** எண்ணத்தால், **தவறான ஆசைகளின்** பேரால், எண்ணித் தெளிந்து **சீர்தூக்கிப் பாராத** செயல்களால், கீழ்த்தரமான **பாலியல் ஆசைகளினால்** எனப் பல்வகையான ஏதுக்களால் குற்றச் செயல்கள் நடைபெறுகின்றன.

எது குற்றநடவடிக்கை என்பதன் விளக்கம் காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டே போகின்றது. எது **விலக்கப்பட்டுள்ளதோ, எது செய்யத் தகாதது என்று தடை செய்யப்பட்டுள்ளதோ, அதைச் செய்வது குற்றம் எனலாம்.** செய்வது குற்றம் என, தெரியவந்தால் தண்டனை கிடைக்கும் என்று தெரிந்தும், சிலர் குற்றங்கள் செய்கின்றனர். தண்டனை பெறுவோர் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு தம் இனிய வாழ்வை நாசமாக்குகின்றனர். சிலகுற்றவாளிகள் திரும்பத்திரும்ப குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமது வாழ்நாளில் பெரும்பகுதியைச் சிறையிலேயே கழிக்கின்றனர். இன்று குற்றங்கள் தடுக்கப்பட வேண்டும் என்பதற்காக நீதிமன்றம் மூலம் தண்டனைகள் அளிக்கப்பட்டபோதிலும், குற்றச் செயல்கள் தொடர்ந்து இடம் பெறுகின்றன.

**தமது விருப்பங்களை எப்படியாவது எம் முறையைக் கையாண்டும் நிறைவேற்றலாம் என எண்ணி நீதி நெறிகளை மீறிச் செயல்படும்போது குற்றச் செயல்கள் இடம் பெறுகின்றன. திருந்தாத மனங்களின் தேவைகள் நிறைவேறாதபோது, குற்றம் நிகழ்கிறது** என்றால், அந்த மனங்களைத் திருத்த முயல வேண்டும். இயல்பான தேவைகள், நுகர்வுகள் கிடைக்காதபோது ஒருவர் குற்றவாளியாகிறார் என்றால், அவரது ஏற்றுக்கொள்ளத்தக்க தேவைகள் அரசின் சமூக சேவை மையங்களின் கண்காணிப்புடன் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

குடிமக்களின் வாழ்வு அமைதியாகவும், முன்னேற்றமாகவும் நிலைபெறுவதற்குக் குற்றவியல் தடுப்பு நடவடிக்கைகள் அவசியமானது. குற்றங்கள் தவிர்ப்பது சம்பந்தமான கல்வியை சிறாரிலிருந்தே தொடங்கல் வேண்டும் என்பதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல அறிஞர்கள் வலியுறுத்துகின்றார்கள். அத்தகைய கல்வி இளையோரின் உள்ளங்களை நிரப்புவதால், குற்றச் சிந்தனைகள் தோன்றும் எண்ணங்கள் மாற வாய்ப்புண்டு. **அகவைக்கு ஏற்ற வகையில் மனமாற்றத்தை ஏற்படுத்தும் கற்கை நெறிகளை அறிமுகப்படுத்த வேண்டும்.**

அறியாமை குற்றத்திலிருந்து விடுதலை பெற வழி செய்யாது எனவும் குற்றத்தின் பரிசு தண்டனை என்பதையும் தெளிவாக விளக்குவதில் கல்விக் கூடங்களும், சமூகமன்றுகளும், இறையியல் சார்ந்தோரும், பல்கலைக் கழகங்களும் ஒன்றிணைந்து செயற்படல்வேண்டும். **இன்றைய இளையோரே நாளைய சமுதாயத்தினராவர். எனவே சமூகத்தின் தளமாகக் கருதப்படும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் தமது குழந்தைகட்கு நன்மை, தீமை என்பவற்றின் பொருளை விளக்கி நல்வழி காட்டுவதைத் தமது தலையாய கடமையாகக் கொள்ளவேண்டும்.**

பொது மக்கள் தமது இன விழுமியங்களையும், பண்பாட்டுச் சிறப்புக்களையும் அறிந்து ஒழுகும்போது குற்றச் செயல்கள் இடம் பெறுவது தவிர்க்கப்படுகின்றது. நாட்டின் சகல பிரசைகளும் தாம் ஒரு மதிப்பு வாய்ந்த சமூகத்தின் அங்கம் எனும் உரிமையில் நம்பிக்கையும், அதனைக் காப்பாற்றும் உறுதியும் கொண்டவராக வாழ்தல் வேண்டும். பல நூற்றாண்டுகளுக்குமுன் எழுதப்பட்ட வள்ளுவரின் குறளும் அவ்வையாரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி ஆகிய நூல்களும் தரும் ஒழுக்கமுறைகளைக் கடைப்பிடிக்கும் மன உறுதி கொண்டோர் குற்றவியல் செயல்களை ஊக்கப்படுத்த மாட்டார்கள்.

குற்றத்தடுப்பிற்காகச் செயல்படும் சிறைச்சாலைகள் மந்தைகளைக் கட்டுப்படுத்தும் இடங்கள்போல் இருத்தல் ஆகாது. அவை கண்டிப்பும், தண்டனையும் கொண்ட வெறுக்கத்தக்க நடுவங்களாக இயங்கக்கூடாது. குற்றங்கள் தண்டிக்கப்படல் வேண்டும். ஆனால் **குற்றவாளி முதலில் மனிதனாக மதிக்கப்படல் வேண்டும். தண்டனைக் காலத்தில் அவர்கள் திருந்திய மனிதர்களாக மாறும் வகையில் வழிநடத்தப்படல் வேண்டும்.** குற்றவாளிகள் தீயவர்கள் அல்லர் என்ற பார்வையுடன் நடத்தப்படல் வேண்டும். **அன்பும், பரிவும் காட்டி, குற்றவாளிகளின் உள்ளத்தில் அன்பு தோன்றவைக்கும் இல்லங்களாகச் சிறைக் கூடங்கள் அமைதல் வேண்டும்**

குற்றவாளியைத் துன்புறுத்தி, அவருடைய மனதில் வெறுப்பை வளர்த்துப் பழிவாங்கும் உணர்வை வளர்க்கும் சிறைக் கூடங்கள் குற்றவாளிகள் மனம் திருந்தும் வாய்ப்பினை வழங்காது. **எனவே சிறைச்சாலைகளில் வேலைசெய்யும் சகல பணியாளர்களுக்கு குற்றவாளிகளுடன் மனோதத்துவ அடிப்படையில் உதவும்படியான உளவியல் பயிற்சிகள் அளிக்கப்படவேண்டும்.** தண்டனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவிப்போரை கீழ்த்தளச் சமுதாயத்தினர் எனவும், தவறானவர்கள் எனவும் கருதும் பொதுவான மனப்பான்மை மாறுதல் வேண்டும். வன்முறைகளைப் பயன்படுத்திக் குற்றவாளிகளைத் திருத்தலாம் என்பதும் தவறான கருத்தாகும். எனவே வன்முறையின்றி குற்றம் புரிந்தோர் தமது தவற்றினை உணர்ந்து, திருந்த வைப்பதே சிறந்த குற்றத்தடுப்பு நடவடிக்கை ஆகும்.

குற்றம் புரிந்தோர் மீளவும் தவறான வழிக்குப் போகாதவாறு எல்லா நாடுகளிலும் அவர்களுக்காகச் சீர்திருத்தப் பள்ளிகள் நிர்வகிக்கப்படுகின்றன. ஆனால் அச் சீர்திருத்தப் பள்ளிகள், குற்றவாளிகளின் உறைவிடம்போல் இருப்பது மனிதாபிமானமுள்ள செயல் அன்று. **மனம் திருந்தி தண்டனைக் காலம் முடிந்ததும் கண்ணியமாக வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ற பயிற்சிகளை அங்கு பயிற்றுவது ஏற்றதாகும்.** அதன் மூலம் அவர்கள் மீண்டும் குற்றச் செயல்களை நாடாது நல்ல குடிமக்களாக மனம் திருந்தி வாழ வழி செய்யும்.

இளையோரை மட்டுமன்றி வளர்ந்தவர்களையும் கவரும் இன்றைய மின்னியல் கலாச்சாரத்தின் தவறான வழிகாட்டல்களைத் தடை செய்தல் குற்றத்தடுப்பு நடவடிக்கையாக அமைகின்றது. **உலகெங்குமுள்ள வர்த்தகர்கள் அவர்களால் விற்பனை செய்யப்படும் வன்முறையைப் பாராட்டும் விளையாட்டுக் கருவிகளையும், இணையத்தளங்களையும் கட்டுப்படுத்துவதும் கண்காணிப்பதும் முக்கியமானதாகும்.** அம் முயற்சியில் அரச நிறுவனங்கள் முனைப்பாக ஈடுபடுதல் மூலம் தவறான வழிகாட்டல் பரவுவது தடுக்க வழிசெய்யும்.

சமுதாயத்தில் **குற்றச்செயல்களையும், வன்முறைகளையும் ஊக்குவிக்கும் திரைப்படங்களும் ஊடகங்களும் தடைசெய்யப்படுதல் வேண்டும்.** இன்றைய ஊடகத்தின் பெருக்கத்தினால் தவறான முன்மாதிரிகளை பின்பற்றி தமது நல் வாழ்க்கையை இழக்கும் பலரை நாம் அறிகின்றோம். ஊடகங்கள் சமூக நன்மையினைப் பேணும் அறநெறிகளைக் கைக் கொள்ள வேண்டும். அரசாங்கங்கள் குற்றவியல் தடுப்பு நடவடிக்கையாக, சமுதாய நலனைப் பேணும் தணிக்கைச் சபைகளையும், நெறிப்படுத்தும் சட்டங்களையும் நிறுவியுள்ளது.

இவ்வாறான பல குற்றவியல் தடுப்பு நடவடிக்கைகளை அரசாங்கங்கள் மேற்கொள்வதால் மட்டும் எதிர்பார்க்கும் பயன்கள் உடனடியாக விளையப்போவதில்லை. சமூக முன்னேற்ற ஆர்வம் கொண்ட பெற்றோர், ஆசிரியர் நிறுவனங்களும், நீண்ட கால நல்நோக்கு கொள்கையுடன் திகழ்வது மிக முக்கியமானதாகும். அதே சமயம் **ஒவ்வொரு சமுதாய அங்கத்தவரும் தன்னலம் பேணும் அதே சமயத்தில், பொது நலனைப் பாதிக்கா வண்ணம் சமூக நலனில் அக்கறை கொண்டவர்களாகச்** செயற்படின் குற்றம் குறைந்த சமுதாயத்தை உருவாக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் 9 : பயிற்சிகள்

I) **பின்வரும் கேள்விகளுக்கு விடைதருக**

1) குற்றங்கள் நிகழ்வதற்கு அடிப்படைக் காரணங்கள் எவை?

.............................................................................................................................

2) சிறைச்சாலை எவ்வாறு குற்றங்களை தடுக்க முடியும்?

.............................................................................................................................

3) குற்றம் இழைப்போர் தாமாக திருந்த என்ன செய்ய வேண்டும்?

.............................................................................................................................

4) சிறைக்கைதிகளை எவ்வாறு நடத்த வேண்டும்?

.............................................................................................................................

5) இணையத் தளங்கள், தொலைக்காட்சி, போன்றன குற்றச் செயல்களுக்கு எவ்வாறு தூண்டுகின்றன?

.............................................................................................................................

6) பாடசாலைகளில் நிகழும் மிரட்டல்களை தடுக்க யாது செய்தல் வேண்டும்.

.............................................................................................................................

7) சமூகத்தில் குற்றங்கள் நிகழ்வதற்கு அடிப்படைக் காரணங்கள் என்ன?

.............................................................................................................................

8) குற்றத் தடுப்பில் பெற்றோரின் பங்கு என்ன?

.............................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II) பின்வரும் பந்தியை மொழிபெயர்த்து தமிழில் எழுதுக.

Be cheerful. Make others to smile, but do not indulge in too much humour. Avoid wounding the feelings of others by involving them in your jokes. In all your conversations avoid using words which you will not like your father or mother hear you say. When conversing with others listen to the others view and get the best out of their talks. Do not thrust your views on others.

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

III) பின்வரும் சொற்களை பயன்படுத்தி வசனம் அமைக்க

1) உறுதி: ..........................................................................................................

2) உழவர்: ..........................................................................................................

3) சோதனை: ..........................................................................................................

4) விடுமுறை: : ..........................................................................................................

5) விழிப்புணர்ச்சி: ..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV) பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக.

1) மங்கையர் அணியும் ஆறு ஆபரணங்களின் பெயர்களை எழுதுக.

..........................................................................................................................................

2) நாம் உண்ணும் புரதம் நிறைந்த உணவுகளை எழுதுக.

..........................................................................................................................................

3) மக்கள் விரும்பாத ஐந்து குற்றச் செயல்களை எழுதுக.

..........................................................................................................................................

4) நாம் பயன்படுத்தும் ஐந்து தானியங்களின் பெயர்களைத் தருக.

..........................................................................................................................................

## V) பின்வரும் சொற்கள் இரு கருத்துக்களை உடையவை. அவற்றைக் கண்டு பிடித்து எழுதுங்கள்.

( அகரமுதலியை உபயோகிக்கலாம் )

1. கூழ் : ................................................ ................................................

2. பிடி : ................................................ ................................................

3. நகை : ................................................ ................................................

4. சமயம் : ................................................ ................................................

5. ஒளி : ................................................ ................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VI) **கீழே தரப்பட்ட சொற்கூட்டங்களுக்குப் பதிலாக உபயோகிக்கக்கூடிய ஒரு சொல் தருக.**

**எ-கா: கார், பேருந்து, பாரவண்டி, முச்சில்லி -> வாகனங்கள்**

1) மான், ஆடு, சிங்கம். கழுதை -> ........................

2 கழுகு, மைனா, கொக்கு, ராபின் -> ........................

3) கீரை, கரட், தக்காளி, வெண்டிக்காய் -> ........................

4) சட்டை, பாவாடை, சேலை, ஜக்கெற் -> ........................

5) சந்திரன், பூமி, செவ்வாய், வியாழன் -> ........................

VII) **கை என்ற சொல்லை முதல் எழுத்தாக வைத்து ஐந்து சொற்களை எழுதி அவற்றை உபயோகித்து வசனங்களும் அமைக்க.**

........................

........................

........................

........................

........................

........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுவேலை

**I) நீர் பார்த்து ரசித்த திரைப்படம் ஒன்றைப்பற்றி எழுதுக (பத்து வரி)**

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

**II) பின்வரும் சிறு வசனங்களை ஏற்ற உரிச்சொல் அல்லது அடைமொழி உபயோகித்து நீண்ட வசனமாக மாற்றுக**

எ-கா: அம்மா கடையில் புடவை வாங்கினார்.

எனது அம்மா பட்டணம் சென்று சிறந்த புடவைக் கடையில் தனக்கும் அக்காவுக்கும் அழகான பட்டுப்புடவை வாங்கினார்.

1) மழை பெய்து வயல்கள் நீரால் நிரம்பின.

..........................................................................................................

2) நான் கோயிலுக்குச் சென்றேன்.

..........................................................................................................

3) பாடசாலையில் பெற்றோர் தின விழா நடந்தது.

..........................................................................................................

4) சூரியன் உதித்தான்.

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் - 10

## திருக்குறள் – பொருட்பால் (Wealth)

திருவள்ளுவரால் ஆக்கப்பட்ட திருக்குறள், அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவுகளை உடையது. அவை, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று அழைக்கப்படுகின்றன. திருக்குறளில் மொத்தம் 133 அதிகாரங்கள் உள்ளன. அதிகாரத்திற்கு 10 பாடல்கள் வீதம், மொத்தமாக 1330 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலும், இரண்டு அடிகளை மட்டுமே உடையதாக இருக்கிறது. இந்த நூல் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### அதிகாரம்-39: இறைமாட்சி (Grandeur of Government)

1. படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

(படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்று கூறப்படும் ஆறு அங்கங்களையும் உடையவனே அரசருள் ஆண் சிங்கம் போன்றவன். )

Warriors, worthy citizens, wealth, wise council, warm friends
vantage forts are making of a leader among Kings.

2. அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு.

(அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை ஆகிய இந்த நான்கு பண்புகளும் குறைவுபடாமல் இருத்தலே அரசனுக்கு இயல்பாகும்.)

Courage, generosity, wisdom and zeal
are natural four attributes of a king.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு.

(காலம் தாழ்த்தாத தன்மை, கல்வியுடைமை ஆகிய இந்த மூன்று பண்புகளும் நிலத்தை ஆளும் அரசனுக்கு நீங்காமல் இருக்க வேண்டியவை.)

Alertness, knowledge and bravery are
essential accomplishments of a ruler.

4. அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா
மானம் உடையது அரசு.

(ஆட்சி முறைக்கு உரிய அறத்தில் தவறாமல், அறமல்லாதவற்றை நீக்கி, வீரத்தில் குறைபடாத மானத்தை உடையவனே சிறந்த அரசன் ஆவான்.)

A brave noble king refrains from vice
Full of virtue and enterprise.

5. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.

(பொருள் வரும் வழிகளை மேன்மேலும் இயற்றலும் வந்த பொருள்களைச் சேர்த்தலும், காத்தலும், காத்தவற்றை வகுத்துச் செலவு செய்தலும் வல்லவன் அரசன்.)

The able king gets stores and guards
And spends them for people's safeguards.

6. காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.

(காண்பதற்கு எளியவனாய், கடுஞ்சொல் கூறாதவனாய் இருந்தால், அந்த மன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்ட நாட்டை உலகம் புகழும்.)

The land prospers where the king is
Easy to see, not harsh for words.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு.

(இனிய சொற்களுடன் தக்கவர்க்குப் பொருளை உதவிக் காக்கவல்ல அரசனுக்கு இவ்வுலகம் தன் புகழோடு தான் கருதியபடி அமைவதாகும்.)

The world commands and acts his phrase
Who sweetly speaks and give his grace.

8. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப்படும்.

(நீதிமுறை செய்து குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன், மக்களுக்குத் தலைவன் என்று தனியே கருதி மதிக்கப்படுவான்.)

He is the Lord of men who does
Sound justice and saves his race.

9. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.

(குறை கூறுவோரின் சொற்களைச் செவி கைக்கும் நிலையிலும் பொறுக்கின்ற பண்பு உடைய அரசனது குடை நிழலில் உலகம் தங்கும்.)

Under his shelter thrives the world
Who bears remarks bitter and bold.

10. கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி.

(கொடை, அருள், செங்கோல்முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்கு போன்றவன்.)

Bountiful grace, justice, care and protection of citizens
are qualities of a light among rulers.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம்- 40: கல்வி (Education)

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

(கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்கவேண்டும். அவ்வாறு கற்ற பிறகு கற்ற கல்விக்குத் தக்கவறு நெறியில் நிற்கவேண்டும்.)

Learn lore worthy of learning with clarity and
live by their norms of virtue.

2. எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு.

(எண் எனப்படும் விஞ்ஞானமும் எழுத்து எனப்படும் இலக்கியமும் சிறப்பான உயிர் கொண்டவர்களின் கண்கள் என்பர்.)

Arts and sciences are the eyes for the humans
to live a life of fullness.

3. கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு
புண்உடையர் கல்லா தவர்.

(கண்ணுடையவர் என்று உயர்வாகக் கூறப்படுகின்றவர் கற்றவரே. கல்லாதவர் முகத்தில் இரண்டு புண் உடையவர் ஆவர்.)

Learned have eyes to the mind to see the truth,
vision of the ignorant is blind sore.

4. உவப்புத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

(மகிழும்படியாகக் கூடிப் பழகி (இனி இவரை எப்போது காண்போம் என்று) வருந்தி நினைக்கும்படியாகப் பிரிதல் புலவரின் தொழிலாகும்.)

The art of meeting with joy and part
with thought is the gift of the learned.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

(செல்வர்முன் வறியவர் நிற்பதுபோல் (கற்றவர் முன்) ஏங்கித் தாழ்ந்து நின்றும் கல்வி கற்றவரே உயர்ந்தவர். கல்லாதவர் இழிந்தவர்.)

Like poor before rich they yearn.
For knowledge: the low never learn.

6. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.

(மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும். அதுபோல், மக்களுக்குக் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.)

As deep you dig the sand spring flows
As deep you learn the knowledge grows.

7. யாதானும் நாடாமல் ஊராமால் என்ஒருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

(கற்றவனுக்குத் தன் நாடும் ஊரும் போலவே, வேறு எதுவாயினும் நாடாகும், ஊராகும். ஆகையால், ஒருவன் சாகும்வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்?)

All lands and towns are learner's own
Why not till death learning go on?

8. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

(ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் ஒருவனுக்கு ஏழு பிறப்பிலும் உதவும் தன்மையுடையதாகும்.)

The joy of learning in one birth
Exalts man upto his seventh.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

(தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக்கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் (அக்கல்வியையே) விரும்புவர்.)

The learned foster learning more
On seeing the world enjoy their lore.

10. கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை.

(ஒருவனுக்கு அழிவு இல்லா சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வி தவிர மற்றப் பொருட்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல.)

Learning is wealth none could destroy
Nothing else gives genuine joy.



விக்டோரியா மகாராணியார்,
கண்விழித்ததும் முதலில்
படித்த நூல் திருக்குறள்

(நன்றி: தமிழ்நாடு அரச பாட நூல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் 10 : பயிற்சிகள்

I) பின்வரும் கேள்விகளுக்கு விடைதருக

1) திருக்குறளின் மூன்று பெரும் பிரிவுகள் எவை?

..........

2 ) இறைமாட்சி அரசர்களுக்குரிய சிறப்புக்களைத் திருக்குறள் கூறுகின்றது. இக்காலத்தில் உங்கள் நாட்டில் இவை யாருக்குரியவை?

..........

3) திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் உண்டு? ஒவ்வொரு அதிகாரத்திலும் எத்தனை குறள்பாக்கள் உண்டு?

..........

4) குறள் என்ற காரணப் பெயர் என்பதன் விளக்கம் யாது?

..........

5) திருக்குறள் தரும் அரசாள்பவர்களுக்கு இருக்க வேண்டிய பல சிறப்புக்களில் ஆறு சிறப்புக்களை எழுதுக

..........

6) எண் எழுத்து என்று எவற்றினை வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?

..........

7) 'அறிவு' ஏன் மணற் கேணிக்கு உவமிக்கப்படுகிறது?

..........

8) தமிழராகிய நாம் திருக்குறளை உலகறிய யாது செய்யவேண்டும்?

..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II) **பின்வரும் சொற்களை பிரித்து எழுதுக**

1) இந்நான்கும் -........................................ 2) துணிவுடைமை - ........................................

3) கடுஞ்சொல்லன் - ...................................... 4) செங்கோல் - ........................................

5) கசடற - ........................................ 6) இவ்விரண்டும் - ........................................

7) எக்கற்றும் -........................................ 8) மலைக்கோவில்- ........................................

III) **பின்வரும் சொற்களை பயன்படுத்தி வசனம் அமைக்க**

1) உறுதி: ..........................................................................................................................

2) உழவர்: ..........................................................................................................................

3) சோதனை: ..........................................................................................................................

4) விடுமுறை: : ..........................................................................................................................

5) விழிப்புணர்ச்சி: ..........................................................................................................................

IV) **அ, இ, உ இம் மூன்றும் சுட்டெழுத்துக்கள்.**

**எ-கா: அவன் இவன் உவன்**

**பின்வரும் சுட்டெழுத்துக்களை தரப்பட்ட சொற்களுடன் சேர்த்தெழுதுக**

1) இ+மூன்றும் =........................................ 2) அ+நாள் = ........................................

3) அ+ஆறு =........................................ 4) இ+மரம் = ........................................

5) உ+உலகு =........................................ 6) இ+சங்கிலி = ........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V) உண்மை. இது 'மை' யில் முடியும் ஒரு சொல். முதல் இரண்டு எழுத்துக்களையும் மாற்றி கருத்துள்ள 10 சொற்களை தருக

எ-கா: வறுமை

..............................................................................................................................

..............................................................................................................................

VI) பின்வரும் சொற்றொடர்களில் கீறிட்ட இடங்களை நிரப்புக. தமிழில் பெரியவர்களை அழைக்கும்போது அல்லது குறிக்கும்போது உயர்திணைப் பன்மை வினை பயன்படுத்தவேண்டும்.

எ-கா: அண்ணா நேற்று வந்தார். இது மரியாதைப் பன்மை எனப்படும். (Honorific plural)

1) இன்று அப்பா அயலூரிலிருந்து..............................................(வா).

2) அக்கா தொடருந்தில் வருவதாகத் தொலைபேசியில்.........................................( கூறு).

3) இன்று மாலை நாங்கள் எல்லோரும் கடற்கரைக்கு மகிழுந்தில் ..............................(போ).

4) குழந்தைகள் தண்ணீரில் கால்களை நனைத்து..................................................(விளையாடு).

5) எங்கள் நாய் சிறுவர்களைப் பார்த்துக்..............................................( குரை)

VII) பின்வரும் சொற்றொடர்களை ஆங்கிலத்தில் தருக.

1) கசடு அறக் கற்க. கற்றபின் நிற்க அதற்குத் தக.

..............................................................................................................................

2) தீயினால் அழிக்கமுடியாத செல்வம் கல்வியே.

..............................................................................................................................

3) அஞ்சாமை, அறிவு, ஊக்கம், ஈகை ஒரு தலைவனுக்கு அவசியம்.

..............................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VIII) வா என்ற வினையை கீழே காட்டியவாறு வைத்து வசனங்கள் அமைக்க.
வா, வந்தான், வருவாள், வந்த, வந்து. வருகிற, வருவித்தான், வருக
எ-கா: வா = அம்மா என்னை "வா கடைக்குப் போவோம்" என்று அழைத்தாள்

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

## வீட்டுவேலை

I) தமிழில் ஐந்து பெரும் காப்பியங்கள் (ஐம்பெரும்) உள. இவை பெண்களின் அணிகலன்களை அடிப்படையாகக் கொண்டு பெயரிடப்படும். அவையாவன: சிந்தாமணி (நெற்றிப்பட்டம்), குண்டலம் (காதணி), மேகலை (ஒட்டியாணம்), வளையல், சிலம்பு. இவற்றுடன் தொடர்புகொண்ட காப்பியங்கள். சீவகசிந்தாமணி, குண்டலகேசி, மணிமேகலை, வளையாபதி, சிலப்பதிகாரம். இணையத்தில் Silapathikaaram என்ற சொல்லைத் தேடி அதில் நீர் வாசிப்பதை ஆங்கிலத்தில் சுருக்கமாக எழுதுக.

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II) ஆங்கிலச் சொற்களை தமிழாக்கும்போது பின்வரும் மூன்று வழிகளில் செய்யலாம்.

1) ஏற்ற தமிழ் சொல்லைப் பயன்படுத்தலாம்.
   எ-கா: angle = கோணம்
2) ஒலிபெயர்க்கலாம் அதாவது ஒலிக்குமாறு எழுதுதல்
   Elizabeth = எலிசபெத்
3) ஒலிபெயர்ப்பை தமிழ் இலக்கணமுறைப்படி மாற்றி சொல்லை அமைக்கலாம்

   tavern = ரவர்ன் = தவறணை    English= இங்கிலீஷ் = ஆங்கிலம்

III) பின்வரும் பந்தியிலுள்ள எழுத்துப் பிழை, இலக்கணப் பிழை, தமிழில் எழுதிய ஆங்கிலச் சொற்கள் ஆகியவற்றை திருத்தி எழுதுக.

சின்ன வயதில இருந்தே எனக்கு கம்ப்யூட்டர் மேலே ஆர்வம அதிகம். இணையத்தளங்கள் மூலமா நிறைய விஷயங்கள் கத்துக்கிட்டன். எட்டுப் படிக்கையில சீனியர் மாணவரிட்ட கேட்டு வெப் டிசையினிங் கத்திட்டன். தினமும் மூணு மணி இணையத்தளத்தில் வேலை செய்றன். புதுசா மார்க்கட்டில் வர்ற செல்போன் லேப்டாப் முதலியவற்ரை வாங்கிப் பயன்படுத்தி அவற்றின் நெகடிவ் பொசிடிவ் தன்மைகளை இணையத்தளத்தில் வெளியிடுவன்.

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் - 11

## போதைப் பொருட்களின் தீங்கு

உபயோகிப்பவர்களுக்கு தற்காலிக மயக்கத்தையும், **சுய நினைவு உணர்வையும் மழுங்கச் செய்து மிதப்பு உணர்வைத் தரும் பொருட்களைப் போதைப் பொருட்கள் என்பர்**. பல்வேறு வர்த்தகப் பெயர்கள் கொண்ட மதுபான, புகையிலை வகைகள், கெரோயின் (Heroin), கொக்கேயின் (Cocain), மேதடோன் (Methadone), எல்.எஸ்.டி. (L.S.D.), எக்ஸ்டசி (Ecstacy), கனாபிஸ் (Cannabis), மர்ஜுவானா (Marjuvana) போன்றவை குறிப்பிடக்கூடிய போதைப் பொருட்களாகும். இவற்றுள் பலவற்றின் உற்பத்தியும் விற்பனையும் சட்ட பூர்வமாகத் தடை செய்யப்பட்டவையாகும். ஆரம்பத்தில் இவற்றுள் சில மருத்துவ தேவைகளுக்காகவே உபயோகிக்கப்பட்டன. சட்டபூர்வமாகச் சந்தைப் படுத்தப்படும் மதுபானங்கள் மகிழ்வுக்காக பருகப்படினும், **அளவுக்கு மிஞ்சினால் அவையும் உடல் நலத்திற்கு தீங்கை விளைவிக்கும்.** பாதகமான விளைவுகளைத் தரும்.

இத்தகைய போதைச் சரக்குகள், பொதுமக்களுக்கு விளங்காத பெயர்களுடனும், வெவ்வேறு வடிவங்களுடனும், பெரும்பாலும் மறைமுகமாக விற்பனை செய்யப்படுகின்றன. சமூக எதிரிகள் சட்டங்களை மீறி போதைப் பொருள் விற்பனையால் பல கோடி பணத்தை பெறுகின்றனர்.

ஆப்கானிஸ்தானிலும், இலத்தீன் அமெரிக்க நாடுகளான பேரு, பொலிவியா, கொலம்பியா, மெக்சிக்கோ போன்ற நாடுகளிலும் போதைப்பொருள் உற்பத்திசெய்யப்படும். இப் பொருட்கள் திருட்டுத்தனமாகக் கைதேர்ந்த கடத்தல் வலையங்கள் மூலம் பரப்பப்பட்டு, உலகு எங்கணும் சமூக விரோதிகளால் விற்கப்படுகின்றன.

இப்பொருட்களை நுகர்பவர்கள் தம்மை அறியாமலே அவற்றிற்கு அடிமைகள் ஆகின்றனர். தற்காலிகப் பேரின்ப மிதப்பு அனுபவத்தினைப் பெறுவதன் மூலம், தமது கடமைகளிலிருந்தும், உரிமைகளிலிருந்தும் விடுபட்டு மயங்குவதை, இன்பம் என்று எண்ணும் மாய வலைக்கு உட்படுகிறார்கள். **விளையாட்டு வீரர்களும் பாடகர்களும் தாம் வெற்றிபெறும் நோக்குடன் தமது ஆற்றலை தற்காலிகமாக ஊக்கும் டெஸ்ரொஸ்ரோன் (testosterone) எக்ஸ்ரசி முதலிய ஸ்ரிரோயிட் மருந்துப் பொருட்களை உபயோகிக்கின்றனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் இச்செயல்கள் தவறான முன் உதாரணங்களாகி, இளம் சிறார்கள் வழி தடுமாறக் காரணமாகின்றன.

**படிப்படியாக மனச்சோர்வு, மன அழுத்தம், கடுஞ்சினம், மறதி, பொய் கூறல், திருடுதல்** போன்ற பல்வேறு உளப் பாங்கான தீங்குகளுக்கு போதைப் பொருட்களைப் பாவிப்பவர்கள், ஆளாகின்றனர். மேலும், **பசி இன்மை, தூக்கம் இன்மை, உடல் நிறையும், உணவு நாட்டமும் குறைதல், வாந்தி, சுவாசக் கோளாறு,** போன்ற பல உடல்ரீதியான தீங்குகட்குத் தம்மைத் தாமே அறியாமல் ஆட்படுத்தி வருத்திக் கொள்கிறார்கள். இவர்கள் தம்மையும் தம்மைச் சார்ந்தவர்களையும் வருத்தித் தமது வாழ்க்கையைத் துன்ப மயமாக்குகிறார்கள். மேலும் போதைப் பொருளுக்கு மீளா அடிமைகளாகித் திருந்த முடியாது, நோயாளிகளாகி நடைப் பிணமாகின்றனர்.

இன்றைய சுய கட்டுப்பாடு குறைந்த இளைஞர்கள் மத்தியில், வெகு விரைவாகப் பரவி வரும் தீமை பயக்கும் ஒரு கலாச்சாரமாகப் போதைப் பொருள் பாவனை காணப்படுகிறது. பாடசாலைகள், சமூக நிறுவனங்கள் மூலம், தீங்கினைத் தவிர்த்து வாழும் நெறிகளை அறிந்து பின்பற்றுதல், மக்களின் நல்வாழ்விற்கு வழிவகுக்கும்.

தமது சூழலில் தடை செய்யப்பட்ட பொருட்களின் விற்பனையும் பாவனையும் இடம் பெறும் போது அது காவல்துறையின் வேலையென பாராமுகமாக இருக்கும் மக்களின் மனப் பான்மை மாறுதல் வேண்டும். பொது மக்கள் இவ்வாறான செயல்பாடுகளைத் தடுக்கும் பொருட்டு காவல்துறைக்கு தம்மால் முடிந்தவரை ஒத்துழைப்புக் கொடுத்தல் வேண்டும்.

ஏழ்மை, வேலைவாய்ப்பு இன்மை, அறியாமை போன்றவற்றால், பலர் போதைப் பொருள் உற்பத்தியிலும், விற்பனையிலும் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படும் நிலை ஏற்படுகிறது. இத்தகைய சமுதாயப் பின்னடைவுகளை அடையாளம் கண்டு அவற்றினை நீக்கும் வழிகளை செயற்படுத்தல் மிக அவசியம்.

உலக நாடுகள் பலவும், கடுமையான சட்டங்களையும், போதைப்பொருளுக்கு அடிமைப்பட்டவர்களை திருத்தும் நிலையங்களையும் நடைமுறைப் படுத்துகின்றன. சட்டங்கள் ஆக்குவது மட்டும் பலனளிக்காது. பொதுமக்களுக்குப் போதைப்பொருள் பற்றிய விழிப்புணர்வுகளை ஊட்டும் செய்திகளை, யாவரும் எளிதில் விளங்கும் முறையில் நவீன ஊடகங்கள் மூலம், மேலும் பிரபலம் அடையச் செய்தல் அரசினதும், சமூகத் தலைவர்களதும், சமூக சேவையாளர்களதும், சிந்தனையாளர்களதும் தலையாய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் 11 : பயிற்சிகள்

1) **பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக**

1) போதைப் பொருட்களை ஏன் சிலர் உபயோகிக்கின்றனர்.?

........................................................................................................................

2) விளையாட்டு வீரர் ஸ்ரிரோயிட் மருந்துகளை ஏன் உபயோகிக்கின்றனர்?

........................................................................................................................

3) போதைப்பொருள் பாவனையைத் தடுக்க யாது செய்யவேண்டும்?

........................................................................................................................

4) பாடசாலைக்கருகில் போதைப்பொருள் விற்பதைக் கண்டால் நீர் யாது செய்தல் வேண்டும்?

........................................................................................................................

5) சில போதைப் பொருட்களின் பெயர்களைத் தருக.

........................................................................................................................

6) மருத்துவத்தில் பயன்படும் ஆனால் போதைப்பொருளாகவும் பாவிக்கப்படும் இரண்டு மருந்துகளின் பெயர்கள் தருக.

........................................................................................................................

7) அளவுக்கு மிஞ்சினால் போதைப்பொருளாகக் கருதப்படும் பொருட்கள் எவை?

........................................................................................................................

8) புகையிலையினால் விளையும் மிகக்கொடிய தீங்கு யாது?

........................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II) **பின்வரும் சொற்றொடர்களை ஏற்றவிடத்தில் எழுதி சொற்றொடர்களை நிறைவு செய்க.**

**இயக்குநர், கமக்காரன், பொறிஞர், ஜனாதிபதி, தலைமைச் சமையல்காரர், பிரதம மந்திரி**

1) நிலத்தைப் பண்படுத்தி பயிர் செய்பவர்..................................................

2) இயந்திரங்களின் தொழில்நுட்பத்தை அறிந்து செயாலாற்றுபவர்..............................

3) சினிமாவில் நடிகர்களை நடிக்கப் பழக்குபவர்..................................................

4) ஒரு நாட்டின் தலைவராக சேவை செய்பவர்..................................................அல்லது

......................................................

5) ஒரு ஒட்டலில் உணவு தயாரிப்புக்கு தலைவராக இருப்பவர் ......................................

III) **கீழேதரப்பட்ட தற்கூற்று வசனங்களை பிறர்கூற்றாக மாற்றி எழுதுக.**
**தற்கூற்று ஒருவர் தானே சொல்வது. (Direct speech) ஒருவர் சொன்னதை இன்னொருவர் எடுத்துக் கூறுவது பிறர்கூற்று. (Indirect speech) தற்கூற்றுப் பகுதியை பின்வருமாறு மேற்கோள் "............" குறியிட்டு காட்டல் வேண்டும்**
**எ:கா: "நான் இன்று கோவிலுக்குப் போகிறேன்" என்றாள் சியாமளா.**
**பிறர்கூற்று --- சியாமளா இன்று கோயிலுக்குப் போவதாகச் சொன்னாள்.**

1) "நான் இன்று தமிழ் பள்ளிக்குப் போகமாட்டேன்" என்றான் தம்பி.

..........................................................................................................................

2) சாந்தி தன் சிநேகிதி பொன்னிக்கு "என் வகுப்பு மாணவர்களுடன் திங்கள்கிழமை துறைமுகம் பார்க்கப் போகிறேன்" என்று கூறினாள்.

..........................................................................................................................

3) "நான் சென்றவாரம் நூலகத்தில் ஒரு கதைப் புத்தகத்தை எடுத்தேன்" எனச் சொன்னான் கண்ணன்.

..........................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV) **சரியான விடையைக் குறிக்கும் அடைப்புக்குறியுள் சரி இடுக.**

1) போதை என்பது

( ) உடல் தசையை வளர்ப்பது ( ) மிதப்பு உணர்வைத் தருவது

( ) மருந்தால் ஏற்படும் தீய விளைவு

2) மருந்தாகவும் போதைப் பொருளாகவும் பயன்படுவது.

( ) மோர்∴பின் ( ) கொக்கெயின் ( ) புகையிலை

3) ஊசிகளைப் பகிர்ந்து போதைப்பொருளை ஏற்றுவதால் ஏற்படும் தீய விளைவு

( ) மறதி ( ) கயரோகம் ( ) எயிட்ஸ் நோய்

4) போதைப்பொருள் உற்பத்தியில் ஈடுபடும் ஒரு நாடு

( ) ஜெர்மனி ( ) அப்கானிஸ்தான் ( ) சிங்கப்பூர்

V) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற தமிழ் சொற்கள் தருக

1) Elated feeling ..................................................
2) Mental depression ..................................................
3) Sleeplessness ..................................................
4) Determination ..................................................
5) Law and order ..................................................
6) Marketing ..................................................
7) After effects ..................................................
8) Middle class ..................................................
9) Social responsibility ..................................................
10) Social injustice ..................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VI) **பின்வரும் சொற்றொடரில் ஒரு முறைக்கு இரு சொல்லை மாற்றி நான்கு வசனங்கள் எழுதுக.**

**எனது அப்பா நேற்று விமானத்தில் லண்டனுக்குச் சென்றார்.**

**எ.கா: எனது அப்பா இன்று பேருந்தில் லண்டனுக்கு சென்றார்.**

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

VII) **பின்வரும் பழமொழிகளின் கருத்துக்களை ஆசிரியரின் உதவியுடன் ஆராய்க.**

1) பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை
2) கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை.
3) அழுத பிள்ளை பால் குடிக்கும்.
4) சுவர் இருந்தாலே சித்திரம் எழுதலாம்.
5) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

VIII) **பின்வரும் சொல்லில் முதல் எழுத்தில்லை. ----ட்டம் இதில் முதல் எழுத்தை வைத்து கீழே கேட்கப்பட்ட கருத்துக்கமைவான சொல்லை எழுதவும்.**

**எ.கா: பழங்களை வைத்துக் கொடுக்க உதவுவது. தட்டம்**

1) ஒரு உருவத்தின் பெயர். ....................................................
2) சதுரங்க பலகையில் காண்பது ....................................................
3) ஒரு தொழிலை செய்யமுன் தீட்டுவது ....................................................
4) வழக்கறிஞர் படிப்பது ....................................................
5) வட்டத்தை இரண்டாகப் பிரிப்பது ....................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுவேலை

I) **பாற்கட்டி (பனீர்) குழம்பு செய்யும் முறை.**

**செய்முறை ஒழுங்குமாறித் தரப்பட்டுள்ளது. சரியான ஒழுங்கைக் குறிக்கும் எழுத்துகளை கீழே தரப்பட்ட பெட்டிகளில் எழுதுக.**

A) பனீர் துண்டுகளை கலவையில் பிரட்டி ஊறவிடவும்.

B) சட்டியில் எண்ணைவிட்டு சூடாக்கவும். எண்ணை காய்ந்தபின் இரண்டு நறுக்கிய வெண்காயமிட்டு வதக்கவும்

C) கடைசியில் கொத்தமல்லி தழையை இட்டு அழகுசெய்து பரிமாறவும்.

D) பாற்கட்டியை சிறு துண்டுகளாக வெட்டவும்

E) லெமன் சாறு, இஞ்சி விழுது, துண்டாக வெட்டிய பச்சை மிளகாய், நசித்த உள்ளி, நறுக்கிய கொத்தமல்லி தழை. அரை தேக்கரண்டி மிளகாய் பொடி ஆகியவற்றை கலந்து ஊறல் கலவை ஆக்கவும்,

F) மேசைக்கரண்டி கட்டித்தயிர், 125 ml பால், சிறிதளவு மஞ்சள் தூள் சேர்த்து இளஞ் சூட்டில் 5 நிமிடம் அவிய விடவும் .

G) பனீர் கலவையை சேர்த்து 5 நிமிடம் இளஞ்சூட்டில் வேகவிடவும்

( ) : ( ) : ( ) : ( ) : ( ) : ( ) : ( )

II) **உங்கள் வீட்டின் அருகே உள்ள சந்தியில் சிலர் நின்று பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பதை காண்கிறீர். இதுபற்றி அருகிலுள்ள காவல்துறை அதிகாரிக்கு ஒரு கடிதம் எழுதுக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் - 12

## செய்தி அறிக்கை எழுதுதல்

பத்திரிகைகளில் வரும் செய்திகள் நிருபர்களால் பல வழிமுறைகளைக் கையாள்வதன் மூலம் சேகரிக்கப்படுகின்றன. தலத்தில் நேரடியாகவும், பேட்டிகள் மூலமும் சேகரிக்கப்பட்ட செய்திகளை எழுதுவதில் தயக்கம் இருக்காது. ஆனால் அவற்றில் உண்மையான செய்தி எது, தவறான செய்தி எது, என்ற வேறுபாட்டை நன்கு தெரிந்தபின்னரே செய்தி அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும். **என்ன, எப்போது, எங்கே, எவர், ஏன், எப்படி, என்ற ஆறு வினாக்கட்கு** ஏற்ற விடைகளைக் கொண்டு இருத்தல் செய்தியின் இலக்கணம் என்று கூறலாம்.

செய்தி எழுதும்போது **நாம் ஒருதலைப் பட்சமான கருத்துக் கொள்ளாமல்,** பல அம்சங்களைக் கருத்தில் கொண்டு **நடு நிலையில் இருந்து எழுதுதல்** அவசியம். செய்தியின் தரம், தேவை, முக்கியத்துவம், நம்பகத் தன்மை, மூல ஆதாரம் போன்ற அம்சங்கள் முக்கியமாகக் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும். செய்தி அறிக்கை எழுதும் ஊடகப் பணியில் பயிற்சி பெற விரும்புவோர், செய்தி எழுதுவதன் முன்னர் நல் நோக்கங்களைப் புரிந்துகொண்டு செயலாற்றுதல் அவசியம். செய்தி அறிக்கை எழுதும் போது ஊடகப் பணியில் ஈடுபடுவோர் குறிப்பாக **விளக்கம், பொருட்செறிவு, தவறின்மை** ஆகிய நான்கு முக்கிய அம்சங்களைத் தமது கருத்தினில் கொண்டு செயற்படவேண்டும்.

**நோக்கம்** குறிப்பாக மக்களின் பொழுது போக்குக்காகவும், சமுதாய நலனுக்ககவும், மனித வாழ்க்கையின் மேம்பாட்டுக்காகவும் சமூக ஒற்றுமைக்காகவும் நற்செயல்களை ஊக்குவிக்கவும் செய்திகள், கட்டுரைகள் எழுதப்படல் நன்று. **ஊடகங்களில் உணர்சிகளைத் தூண்டி சமூகத்திற்கு குந்தகம் விளைவிக்கும் செய்தி அறிக்கைகளைப் பிரசுரிக்க முன்னர் அவை ஏற்படுத்தக்கூடிய சாதக பாதகமான விளைவுகள் பரிசீலிக்கப்படல் வேண்டும்.** சமுதாயத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தத் தூண்டும் விடயங்களைத் தவிர்க்கக் கூடிய முறையில் எழுதுதல் பத்திரிக்கையாளர் பேணவேண்டிய தருமமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கம் (clear)**: வாசிப்பவர்கட்கு எளிதில் புரியும்படியாக பொதுமக்களின் பாவனையில் உள்ள சொற்களைப் பிரயோகித்தல் வேண்டும். நடைமுறையில் உள்ள சொற்பதங்களினைக் கொண்ட செய்திகளை வாசிக்கும் போது வாசிப்போர் மத்தியில் உள்ளங்களில் தெளிவான உணர்வு தோன்றுதல் வேண்டும். கடும் பதங்களையும் வழக்கிழந்த சொற்களையும் தவிர்ப்பது நன்று.

**பொருட் செறிவு (concise)**: செய்தி எப்போதும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் தன்மை கொண்டதாக எழுதப்படல் வேண்டும். வாசிக்கும்போது வாசகர்களின் மனதில் வேறு வினா அல்லது குறை எழாதவாறு செய்தி கூடியளவில் பூரணமாக இருத்தல் யாவருக்கும் திருப்தி அளிக்கும். வாசகர்கள் அறிக்கைகள் வாசிப்பதில் அதிக நேரத்தினை செலவிட விரும்பமாட்டார்கள். எனவே பொருட் செறிவு கொண்ட, குறைந்தளவு சொற்களைக் கொண்டு கூடிய விபரங்களை விளக்குதல் வேண்டும்.

**நம்பகத்தன்மை (correctness)**: வெளியிடும் செய்தி சாரம் பிழை இன்றிச் சரியானதாக இருப்பது முக்கியமானதாகும். சட்ட ரீதியான தகுந்த ஆதாரம் இன்றிச் செய்தி தயாரித்து வெளியிடுதல் தவறானதாகக் கருதப்படும். தவறான செய்திப் பிரசுரத்தின் மூலம் யாருக்காவது ஏதாவது ஊறு ஏற்படின் ஊடகவியலாளர் நீதிமன்றத்தினால் தண்டனைக்கு ஆளாகவும் நேரிடலாம். எனவே செய்தி எழுதுபவர்கள் முறையாகச் சிந்தித்து, சரியான ஆதாரம் கிடைத்த பின்னரே தமது அறிக்கையை வெளியிடல் முக்கியமானதாகும்.

**உள்ளூர் செய்திகள், வெளியூர் செய்திகள், அரசியல் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், காலநிலைச் செய்திகள்** எனப் பல வகையான துறைகளில் செய்திகளை ஊடகங்கள் பிரசுரிக்கின்றன. செய்தி எழுதுவோர் அந்த அந்தத் துறைகளில் தகுந்த தேர்ச்சி பெற்று இருப்பது சிறப்பானது. செய்தி சேகரிக்கும் போது அவற்றின் நம்பகத் தன்மையைச் சீர்தூக்கிப் பார்த்த பின்பு, ஊடக தர்மத்திற்கு ஏற்ப செய்திகளின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் அறிக்கையை எழுதலாம்.

**நகர்ப்புறத்தில் வாழ்பவர்கள் பெரும்பாலும் விளம்பரங்கள், வணிகச் செய்திகள், அரசியற் செய்திகள், செலாவணிச் செய்திகள்** போன்றவற்றுக்குக் காட்டும் அக்கறையை, புலன்களை ஈர்க்கும் செய்திகளுக்குக் காட்டமாட்டார்கள். ஆனால், **நாட்டுப்புறங்களில், உள்ளூர்களில் வாழும் மக்கள் நகர்ப்புறத்தார் போலன்றி, புலன்களைக் கவரும் செய்திகளில் அக்கறை காட்டுவர்.** புலன்களைக் கவரும் செய்திகள் திடுநேர்கை, காதல், காவலர் நடவடிக்கை, அவலச் செய்திகள் போன்றவற்றிற்கு முதன்மை அளிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களின் தரம் பல தரப் பட்டதாக இருப்பதனால் யாவருக்கும் பொதுவான முறையில் செய்தியறிக்கை எழுதப்படுவது வழக்கம். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது செய்திகள் ஒரு சமநிலையைப் பேணும் விதத்தில் பிரசுரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிரசுரங்களின் தரத்தினை வாசகர்கள் குறைத்து எடை போடும் விதத்தில் மொழித் தவறுகளுடன் பிரசுரங்கள் இருத்தல் ஆகாது.

(கற்பனை செய்து எழுதப்பட்ட மாதிரிச் செய்திகளைக் கீழே காணலாம்.)

**தமிழ் முரசு - லிவர்பூல். மக்களை அச்சுறுத்தும் மர்மக் காய்ச்சல் - தடுப்பூசி போட வேண்டுகோள்.**

இம்முறை வின்ரர் போதியளவு பூம்பனி பொழியாமை காரணமாகப் புதிய காய்ச்சல் ஒன்று பரவி வருவதாக நலவாழ்வுத் துறையினர் அஞ்சுகின்றனர். இக்காய்ச்சல் இதுவரை யாரையும் பலிகொள்ளவில்லை. எனினும், பாரிய நலக்குறைவை ஏற்படுத்தி உள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன. இதற்கான தடுப்பூசி நடுவங்கள் மாநகர மருத்துவ மனைகள்தோறும் திறக்கப்பட்டுள்ளன. அனைவரும் காலம் தாழ்த்தாமல் முன்னேற்பாடாகத் தடுப்பூசி ஏற்றிக்கொள்வது நல்லது என்று நலவாழ்வுத்துறை அறிவித்துள்ளது.

♦♦♦♦♦♦♦♦

**கொண்டாட்டம் திண்டாட்டமாய் முடிந்தது**

நேற்றிரவு புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் லிவர்பூல் மூழ்கியிருந்தபோது ஊரெங்கும் நிகழ்ந்த வானவேடிக்கைகள் கண்ணையும் கவர்ந்து, விண்ணையும் கலக்கின. ஏற்கனவே, ஆர்வ மிகுதியில் இருந்த இளைஞர் சிலர் மதுபானங்களை அருந்தி மகிழ்வோடு ஆரவாரமாகத் தெருக்களில் நடனமாடினர். புத்தாண்டு பிறந்து, வாண வேடிக்கைகள் ஊரெங்கும் மின்ன, அவர்கள் களிப்பில் தெருவில் வருவோர் போவோரைக் கட்டியணைத்து முத்தமளித்தனர். அவர்களில் ஒருவன் இந்த ஆரவாரக் கொண்டாட்டத்தில் அடையாளம் தெரியாமல் இரு கன்னிப் பெண்களை அணைத்து முத்தமளித்துவிட்டான். அப்பாடா! விழுந்ததே அடி கன்னம் புளிக்க அவன் தான் தவறாகச் செய்யவில்லை என்று எவ்வளவோ மன்றாடிப் பார்த்தான். அப்பெண்கள் விடுவதாய் இல்லை. பின்னர் தெருவால் சென்ற முதியோர் சிலர் தலையிட்டு விடுவித்தனர். போதுமடா போதும் என்று போனான் அந்த இளைஞன்.

**(உள்ளூர்ச் செய்திகள் - செய்தியாளர் தமிழ்வாணி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் 12 : பயிற்சிகள்

I) **கீழே தரப்பட்ட கேள்விகளுக்கு விடை தருக.**

1) செய்திகள் சேகரிக்கும் இரண்டு வழிமுறைகள் என்ன?

..........................................................................................................................................

2) செய்திகள் வெளியிடுமுன் முக்கியமாக கவனிக்கவேண்டியது என்ன?

..........................................................................................................................................

3) செய்திகளை ஒருபட்சமாக வெளியிடலாமா?

..........................................................................................................................................

4) செய்திகளின் வகைகள் எவை?

..........................................................................................................................................

5) நாட்டுப்புற மக்கள் விரும்பும் செய்திகள் எவை?

..........................................................................................................................................

6) நகர மக்கள் எத்தகைய செய்திகளை விரும்புவர்?

..........................................................................................................................................

7) செய்திகள் தயாரிக்கும்போது கவனிக்கவேண்டிய மூன்று அம்சங்கள் எவை?

..........................................................................................................................................

8) சமூகத்தில் குழப்பங்களை ஏற்படுத்தக்கூடிய செய்திகளை எப்படி எழுதுவது நல்லது?

..........................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II) **பின்வரும் தமிழ் சொற்களுக்கு ஏற்ற ஆங்கிலச்சொற்கள் தருக.**

1) தினசரிப்பத்திரிகை : .................................... 2) வார சஞ்சிகை:....................................

3) பத்திரிகை ஆசிரியர்: .................................... 4) செய்தியாளர் :....................................

5) தலையங்கம் : .................................... 6) விளம்பரம் :....................................

7) சர்வதேச செய்திகள்:.................................... 8) வாசகர் கடிதம்: ....................................

9) வெளியிடுதல் : .................................... 10) ஆசிரியர் தலையங்கம்: ............................

III) **பின்வரும் வசனங்களைத் திருத்தி எழுதுக.**

1) ஆசிரியர் செய்திகளைச் சேகரிக்கும் முரைகளை விழக்கினார்.

..........................................................................................................................

2) மகன் தந்தையிடம் பணம் கேட்டாள்.

..........................................................................................................................

3) கலிலியோ உலகம் உறுன்டை வடிவாணது எண்டு கூறினார்..

..........................................................................................................................

4) பிள்ளைகள் மோளம் அடிச்சு தாழம் போட்டு ஆடுராக.

..........................................................................................................................

5) நான் பட்னம் போயிற்று நாலு நாளில வந்துட்டன்,

..........................................................................................................................

IV) **பின்வரும் சொற்களை வருணனைச் சொற்கள் அமைத்து வசனங்கள் எழுதுக.**

எ-கா: மயில்: ஒரு அழகான மயில் தோகையை விரித்து ஆடக் கண்டேன்,

நண்பன், சோலை, கோபுரம், சாலை

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V) உங்கள் பாடசாலையின் முன் தெருவில் வாகனங்கள் இரைச்சலுடன் விரைவாகச் செல்லுகின்றன. இதுபற்றி தினமலர் பத்திரிகை ஆசிரியருக்கு கடிதம் எழுதுக.

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

VI) நான்மணிக்கடிகை

மனைக்கு விளக்கம் மடவாள் மடவாள்
தனக்கு தகைசால் புதல்வர் மனக்கினிய
காதல் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கும்
ஓதின் புகழ்சால் உணர்வு

அருஞ்சொல் விளக்கம்

நான்கு + மணி + கடிகை = நான்கு மணிகளைக் கொண்ட அணிகலன்
விளக்கம்= ஒளி : மடவாள்= பெண் : தகைசால்= திறமையுள்ள
காதல் புதல்வர்= அன்புள்ள பிள்ளைகள் ; ஓதின்= கூறின்
உணர்வு= நற்பண்புகள்

ஒவ்வொரு பாட்டும் நான்கு அறிவுரைகளைக் கொண்டதால் நான்மணிக்கடிகை காரணப் பெயராக நூலுக்குக் கொடுக்கப்பட்டது.

இப் பாட்டில் வரும் நான்கு அறிவுரைகள்

1) வீட்டுக்கு ஒளி தருபவள் பெண்

2) தாய்க்கு பெருமை தகைசால் பிள்ளைகள்

3) மனதுக்கு இனிய அன்புள்ள பிள்ளைகளுக்கு கல்வியே பெருமை

4) படித்த பிள்ளைகளுக்கு பெருமை தருவது நற்பண்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) பாட்டில் வரும் அசைகளைப் பிரித்து எழுதுக.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

ஆ) பாட்டில் வரும் நான்கு அறிவுரைகளை ஆங்கிலத்தில் எழுதுக.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

VII) கீழே தரப்பட்ட விளம்பரத்தை வாசித்து அதன்கீழ் வரும் கேள்விகளுக்கு ஆங்கிலத்தில் விடை தருக.

**வீடு வாடகைக்கு**

விக்டோரியா வீதி , இலக்கம் 27 இலுள்ள மாடிவீடு

ஜூன் மாதம் தொடங்கி வாடகைக்கு விடப்படும்.

அறைகள் 4: கழிப்பறைகள் 2: வாடகை மாதம் $1200

விபரங்களுக்கு அழையுங்கள்: செல்வம் ராஜன், TP: 123 456 7890



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்விகள்**

1) வீடு வாடகைக்கு விடுபவரின் பெயர் என்ன?

........................................................................................................................

2) வீட்டு வாடகை மாதம் எவ்வளவு?

........................................................................................................................

3) வீட்டிலுள்ள அறைகள் எத்தனை?

........................................................................................................................

4) வீட்டிலுள்ள கழிப்பறைகள் எத்தனை?.

........................................................................................................................

5) வீட்டு முகவரி என்ன?

........................................................................................................................

VIII) **பின்வரும் ஆங்கில வசனங்களைத் தமிழில் தருக.**

1) Children should drink two cups of milk each day.

........................................................................................................................

2) Thulasi may go to Germany during the summer holidays.

........................................................................................................................

3) I can dance better than Mala.

........................................................................................................................

4) I do well in maths but I cannot draw well.

........................................................................................................................

மேலே தரப்பட்ட வசனங்களில் வேணும், வேண்டும், முடியும், கூடும் என்ற பதங்கள் should, may , can என்ற சொற்களை மொழிபெயர்க்க நீங்கள் உபயோகித்திருப்பதைக் கவனியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுவேலை

**I) பின்வரும் வசனங்களை ஆங்கிலத்தில் தருக**

1) ஒருவன் உணவில்லை என்று அழுகிறான். ஆனால் செல்வந்தன் பசியில்லையே என்று வருந்துகிறான்,

........................................................................................................................................

2) செவ்வாய் வியாழன் நாட்களில் பாடசாலை ஆறு மணிக்கு ஆரம்பமாகும்.

........................................................................................................................................

3) உடல் நிறையைக் குறைக்க மாச்சத்தும் கொழுப்பும் குறைவாகவுள்ள உணவை உட்கொள்ளவேண்டும்.

........................................................................................................................................

4) தமிழ் ஒரு செம்மொழி (Classical Language) இன்னொரு மொழியிலிருந்து தோன்றாத மொழியே செம்மொழியாகும்

........................................................................................................................................

**II) "த" இல் தொடங்கும் ஐந்து பெயர்ச்சொற்களைக் பயன்படுத்தி ஐந்து வசனங்களை எழுதுக**

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் - 13

## புறநானூற்றில் தமிழர் பண்பாடு

பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னமே ஏற்றத்துடன் வாழ்ந்த தமிழர் பண்பாட்டின் சுவடுகள் பல தமிழ் இலக்கியங்கள் மூலம் புலப்படுகின்றன. காலத்தால் பழமை வாய்ந்து, சங்க காலத்தில் தோன்றியதாகக் கூறப்படும் இலக்கியங்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் பதினெட்டு தொகை நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் அடங்கும் ஒரு பகுதியாகிய எட்டுத்தொகையில் புறநானூறும் ஒன்றாகும். சங்க காலத்தினைச் சேர்ந்த தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலும், மக்களின் வாழ்க்கை முறைகளே பாடல் பொருட்களாக அமைந்துள்ளதனை நாம் காண்கின்றோம். தமிழகத்தில் வாழ்ந்த பல புலவர்களால் பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் பாடப்பட்ட புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களின் தொகுப்பு என்பதால், சங்கத்தமிழ் நூல்களில் ஒன்றாகப் புறநானூறு என்னும் பெயர் கொண்டு போற்றப்படுகின்றது. இதனைப் பாடியவர்கள் மாத்திரம் அன்றித் தொகுத்தோரும் வேறு பட்ட காலங்களைச் சேர்ந்தவர்களாவர்.

அக்காலத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகள் அகம், புறம் என்னும் இரு பிரிவுகளாகப் பாடப்பட்டு அக்கால இலக்கியங்களில் இடம் பெறுகின்றன. மனதில் எழும் காதல், அன்பு ஆகிய உணர்வுகளை அகத்திணைப் பாடல்கள் கூறுகின்றன. அது போன்று புறத்திணைப் பாடல்களில் **வீரம் புகழ் அறம்** போன்ற அரிய பண்புகள் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளன. புறநானூற்றுப் பாடல்களில் நாம் கணியன் பூங்குன்றன் என்னும் புலவரின் சிறப்பான ஒரு பாடலை அவற்றில் ஒன்றாகக் குறிப்பிடலாம். இப் பாடல் தமிழரின் உயர்ந்த, பரந்த மனப்பாங்கை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. உலகளாவிய ரீதியில், மக்கள் அனைவருக்குமே ஏற்ற பாடலாக அமைவது இப்பாடலின் சிறப்பு எனலாம். தமிழரின் உன்னதமான பண்பாட்டைப் பிரதிபலிக்கும் அவரது பாடலை நாமும் படித்துச் சுவைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர் தர வாரா**
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புகுவதும் அன்றே வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னாது என்றலும் இலமே மின்னோடு
வானம் தண்துளி தலை, ஆறாது
கல் பொருது இரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படுஉம் புணை போல் ஆருயிர்
முறை வழிப் படுஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆதலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனிலும்இலமே.

**(கணியன் பூங்குன்றன், புறநானூறு, 192)**

**All land home, all men kin.**
**Evil and good are not from others**
nor pain and its abating,
Death is not new,
and we do not rejoice thinking life is sweet,
If there is something hateful,
even less do we find it cause for grief,
Through the vision of the able ones

we have come to know that hard life takes its course,
as if it were a raft upon the water of a mighty river
roaring as it ever flows on rocks,
swollen because cold drops pour from flashing sky
and so we do not wonder at those big with greatness
And still less do we dispise the small

**(Translated by Prof. George Hart)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருஞ்சொல் விளக்கம்:** கேளிர்- உறவினர்; நோதல் – துன்பம்; முனிவு – வருத்தம்; ஆறாது – அமையாது; கல் – மலை; மல்லல் – வலிமை; புணை – தெப்பம்; திறவோர் – அறிவில் சிறந்தோர்.

எல்லா ஊர்களும் நம் ஊரே. மக்கள் யாவரும் உறவினர்களே. எமக்கு ஏற்படும் நன்மையும் கேடும் எம்மால் அன்றி, பிறரால் உண்டு பண்ணப்படுவன அன்று.

நன்மை, தீமை, நோதல், தணிதல், வாழ்தல், சாதல், பெரியோர், சிறியோர், என்ற வேறுபாடுகளைப் பாராட்டி சாதாரண மக்கள் தாமே தமக்குள் வேறுபாடுகளை வளர்த்துத் துன்பப்படுவர். துன்ப இருளுக்கு வெளிச்சம் கொடுப்பதுபோல் மேலே காணும் பாடல் அமைகிறது.

வாழ்க்கையில் வேதனைகள் தொடர்வதும், விலகுவதும் அவரவர் கையில் உண்டு என்பதை நயம்பட இக் கவிதையில் விளக்குகிறார்.

பிறந்த உயிர்கள் இம்மண்ணில் வாழ்ந்து மறைதல் புதிதல்ல. இன்பம் ஒன்றுக்காகவே வாழ்க்கை என்பதும் துன்பம் வரும்போது வாழ்வை வெறுப்பதும் உயரிய செயல் அல்ல என்பதையும் புலவர் அறிவுறுத்துகின்றார்.

ஆற்றோடு போகும் தெப்பம் போல, உயிர்கள் தமக்கு விதிக்கப்பட்ட வழிப்படியே ஒழுகுவர். வாழ்க்கையானது ஒவ்வொருவரின் இயல்புக்கு ஏற்ற முறைப்படியே அவரவர் செயல் திறங்களின் வெளிப்பாடு அமையும். **இதனை அறிவு கொண்ட சான்றோர்களின் அனுபவங்கள் வாயிலாக அறிந்து தெளிந்ததனால்** பெரியவர்களைப் பார்த்து நாம் மலைப்பது இல்லை. அதனினும் மேலாக, ஒரு போதும் சிறியோரைப் பார்த்துப் பரிகசிப்பது இல்லை. இவ்வாறு கூறப்படும் உயர்ந்த பண்பாட்டினைக் கொண்டோராகத் தமிழ் மக்கள் வாழ்ந்தனர் என இக் கவிதை மூலம் விளங்கிப் பெருமை கொள்ள முடிகின்றது.

தற்காலத்தில் விஞ்ஞானத் தொழில்நுட்பத்தால் உலகம் சுருங்கி, உலகக் கிராமமாக உருவாகியுள்ளது. அவ்வாறு முன்னேற்றமான முறையில் உலகம் ஒன்றுபட விரையும் போது மனிதமனம் விரிவடைந்தால்தான், மனிதாபிமானம் என்னும் ஒரு குடைக்கீழ் நல்வாழ்வு உண்டு. ஆனால், இன்று உலகம் முழுவதும் இன, மத, மொழி, கலாசார வேறுபாடுகளால் சுயநலவாதிகள் தமக்கிடையே பூசல்களை தோற்றுவிக்கின்றனர். சுரண்டலினால் திரண்டிருக்கும் அதிகார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கத்தினர் ,தாம் தொடர்ந்து ஆட்சியில் நிலைத்து இருக்க, குறுகிய மனப்பான்மை கொண்ட, பிரிவினை வாதிகளுக்கு மறைமுகமாக ஊக்கம் கொடுகின்றனர். மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படும் பிரிவினை வாதங்களால் உலக நாடுகள் பலவற்றில் போர் நிலைமைகள் உருவாகின்றன. அதனால் உலக அமைதிக்குப் பங்கம் வரும் அபாயம் தோன்றுகின்றது. சமுதாயத்தினர் அமைதியாக வாழ்வதற்கு சமாதானத்தின் முக்கியம் பற்றி மீண்டும் மீண்டும் வற்புறுத்த வேண்டிய அவசிய தேவை எழுந்துள்ளது.

தனது பரந்த சமூகப் பார்வையால் கண்ட இந்த உண்மையினை, **இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த புலவரான கணியன் பூங்குன்றன், காலத்தால் அழியாப் பாடலாகப் பாடியுள்ளார்.** எனது ஊர், எனது உறவினர் என்ற எல்லையைத் தாண்டி, பரந்த நோக்கில் இப்பாடல் பாடப்படுள்ளது. **இனப் பற்று, மொழிப்பற்று, நாட்டுப் பற்று ஆகியவற்றைத் தாண்டி மனிதநேயம் எனும் பெரு நோக்கு இப் பாடலில் பிரகாசிக்கின்றது.**

இப் பாடல் சமாதானமான, ஒற்றுமையான உலகத்தை விரும்பிய தமிழரின் பரந்த பண்பாட்டினைப் பிரதிபலிப்பதாகவும், அவர்களது வாழ்வில் இழையோடிய விழுமியங்களை விளக்குவதாகவும் அமைந்துள்ளது. தமிழர் மத்தியில் அன்று காணப்பட்ட இதனைப்போன்ற உன்னதமான பண்பாடுகள் கொண்ட சமுதாய நிலையினைப் **பல்லாண்டு காலத்தின் பின் இலண்டனில் வாழ்ந்த சேர் தாமஸ் மூர் என்பவர் யூத்தோபியா (utopia -1516) என்ற தமது நூலில் கற்பனை செய்து எழுதி இருப்பதன்னை அறியலாம்.**

இந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்த தமிழ் மக்கள் தற்போது ஐம்பதுக்கும் மேலான நாடுகளில் புதிய பண்பாட்டுச் சூழலில் வாழ்கின்றனர். பழமை வாய்ந்த இலக்கியங்களைத் தேடிப் படிப்பதனால் அவர்கள் தமது மூதாதையரின் பாரம்பரியம் மிக்க பண்பாட்டின் சிறப்பினை அறிய முடியும். பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னரே சிறப்பாக வகுக்கப்பட்ட அதன் பெருமையைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் தமிழரின் சீர் பூத்த செம்மையை உலகம் எல்லாம் நயந்து போற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் 13: பயிற்சிகள்

**1) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1) சங்க இலக்கியம் எத்தனை வருடங்களுக்கு முற்பட்டது?

......................................................................................................................................................

2) வீரம், புகழ், அறம் போன்ற கருத்துக்களைக் கூறுவது புறநானூறு, அதேபோல் அகநானூறு எதைக் கூறுகிறது?

......................................................................................................................................................

3) புற நானூறு எத்தனை பாடல்களைக் கொண்டது?

......................................................................................................................................................

4) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் நூல்களின் சிறப்பு என்ன?

......................................................................................................................................................

5) புறநானூறு சங்க இலக்கியத்தின் தொன்மைக்கு ஏன் சான்றாக விளங்குகின்றது?

......................................................................................................................................................

6) 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் புறநானூற்றுப் பாடலை இயற்றியவர் யார்?

......................................................................................................................................................

7) மேற்குறிப்பிட்ட பாடலில் புலவர் எவற்றையெல்லாம் வலியுறுத்துகின்றார்?

......................................................................................................................................................

8) பாட்டின் முதல் இரு வரிகளையும் ஆங்கிலத்தில் தருக.

......................................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II) ஒத்த சொல் எழுதுக.

1) ஆண்டுகள் : ..................................... 2) தொன்மை: .....................................

3) சான்று: ..................................... 4) புலவர் : .....................................

5) வேறுபாடு : ..................................... 6) ஊர் : .....................................

7) வினா: ..................................... 8) பதில்: .....................................

## III) சொற்களைப் பிரித்து எழுதுக.

1. உருவாகியுள்ளது = ..................................... + .....................................
2. இம்மண்ணில் = ..................................... + .....................................
3. ஒன்றுக்காகவே = ..................................... + .....................................
4. புறநானூறு = ..................................... + .....................................
5. இரண்டாயிரம் = ..................................... + .....................................

## IV) பின்வரும் சொற்களைத் தன்மையிலும், பலர்பாலிலும் அமையும்படி அட்டவணையை நிரப்புக.

| சொற்கள் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| எ-கா: பாடு | பாடினோம் | பாடுகிறோம் | பாடுவோம் |
| சாப்பிடு | | | |
| தூங்கு | | | |
| விளையாடு | | | |
| சமை | | | |
| ஓடு | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V) பெயரெச்சம், வினையெச்சம் பொருள் முடியாத வினைச்சொல் எச்சவினை எனப்படும். இது இருவகைப்படும்

1. பெயரெச்சம் : எச்சவினை பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிவது.

எ-கா : ஓடிய பிள்ளை. இதில் ஓடிய என்பது பெயரெச்சம். அதைத் தீர்மானிப்பது பிள்ளை (பெயர்ச்சொல்)

2. வினையெச்சம் : எச்சவினை வினைச்சொல்லைக் கொண்டு முடிவது.

எ-கா : சிரித்து மகிழ்ந்தான். இதில் சிரித்து என்பது வினையெச்சம். அதைத் தீர்மானிப்பது மகிழ்ந்தான். (வினைச்சொல்)

பின்வருவனவற்றுள் பெயரெச்சம், வினையெச்சம் என்பவற்றை கண்டு எழுதுக.

1. அவன் மரத்திலிருந்து விழுந்த பழத்தை, எடுத்து உண்டான்.
2. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
3. கமலா பாட்டுப் பாடி மகிழ்ந்தாள்.
4. சாப்பிட்ட உணவு மிகவும் சுவையாக இருந்தது.
5. விமலன் அடம்பிடித்து நிலத்தில் விழுந்து உருண்டான்.
6. நான் அதிகாலையில் எழுந்து படித்தேன்.
7. பாரம் ஏற்றிய வண்டி மெதுவாக ஓடியது.
8. ஆடிய மயில் கூவிப் பறந்தது.

| பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VI) பின்வரும் பழமொழிகளில் விடப்பட்ட சொற்களை, தரப்பட்ட சொல் தொடர்களைப் பயன்படுத்தி நிரப்பி எழுதுக.

திரண்டால் மிடுக்கு: அகத்தின்: சிலையில்: கல்லாதது: அளவுக்கு மிஞ்சினால் : பால்: வாழ்வு

1). அழுத பிள்ளை .................................................... குடிக்கும்.

2). அடம்பன் கொடியும் ....................................................

3). ....................................................அமிர்தமும் நஞ்சு.

4). இளமையிற் கல்வி ....................................................எழுத்து.

5). ஒன்று பட்டால் உண்டு .....................................................

6). கற்றது கைமண்ணளவு ....................................................உலகளவு.

7). ....................................................அழகு முகத்தில் தெரியும்.

VII) ஆறாம் கேள்வியில் நிறைவு செய்த பழமொழிகளில் மூன்றின் பொருளை விளக்கும் மூன்று வசனங்கள் எழுதுக.

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

VIII) LOVE என்னும் சொல்லுக்கு தமிழில் பல சொற்கள் உண்டு. கீழே தரப்பட்ட எழுத்துக்களில் தொடங்கும் Loveஐ குறிக்கும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக. (அகரமுதலியையும் உபயோகிக்கலாம் ) அ, ஆ, கா, ப, பா, பி, வி

....................................................................................................

....................................................................................................

....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுவேலை

I) தமிழர்களின் பண்பாடுகள் பல. அவற்றில் ஒன்றைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

II) தமிழ் மொழி பற்றி பாரதியார் எழுதியுள்ள பாடல்களில் ஒன்றை வாசித்து, பொருள் அறிந்து, மனனஞ் செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் - 14

## தண்ணீர்

எமக்கு **நீர், வளி, மண் ஆகிய இன்றியமையாத மூன்று வளங்களை இயற்கை வழங்குகின்றது.** அவற்றில் ஒன்றான நீரினால், **உலகின் மேல் பரப்பில் 71 பங்கு** நிறைந்துள்ளது. நீரின் பரவல், தரம், பற்றி நீரியல்(Hydrology) நிபுணர்கள் அறியத் தருகிறார்கள். **ஐதரசனும் ஆக்சிசனும் அடங்கிய வேதிப் பொருளையே நீர் என்கின்றோம்.** திரவ நிலையில் இருக்கும் போது நீர் எனவும், திட நிலையில் இருக்கும் போது உறைபனி எனவும், வாயு வடிவில் இருப்பதனை நீராவி எனவும் கூறுகின்றோம். **மொத்த நீரில் 97 வீதம் கடல் நீராகவும், 2 வீதம் பனிப்படிவாகவும், 1 வீதம் நிலக்கீழ் நீராகவும் உளது. ஆக 0.02 வீதம்தான் எமது அன்றாட பாவனைக்கு உதவும் நன்னீராக (fresh water) ஆறு, குளம், ஏரி, நீரூற்று என்பவற்றிலிருந்து கிடைக்கின்றது.**

நீரின்றி உயிரினங்கள் நீண்ட நாள் வாழமுடியாது. இதை எமது மூதாதையர் நன்கு அறிந்திருந்தனர். நீரின் இன்றியமையாமையை தமிழ் மறை என்று போற்றப்படும் திருக்குறளில், வான்சிறப்பு பற்றிக் கூறும் அதிகாரத்தில் வள்ளுவர் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் கூறியிருக்கின்றார்.

குறள் 12 இல்

**துப்பார்க்கு துப்பாய துப்பு ஆக்கித், துப்பார்க்குத்**
**துப்புஆய துஉம் மழை** அதாவது

உணவு உண்பவர்களுக்கு நல்ல உணவை ஆக்குவதற்கும், உணவை உண்பவர்க்கு உணவாகவும் பயனாகுவது மழையே.

குறள் 13 இல்

**விண் இன்று பொய்ப்பின், விரிநீர் வியனுலகத்து**
**உள்நின்று உடற்றும் பசி.** அதாவது

வானிலிருந்து மழை பெய்யாது பொய்த்துவிடுமானால் பெருங் கடலால் சூழப்பட்ட உலகில் வாழும் உயிர்களை பசி நீடித்து நின்று துன்புறுத்தும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரின் உடல் சராசரியாக அறுபத்தியாறு வீதம் நீரால் ஆனது. எமது உடலின் வளர்ச்சி மாற்றம், சிதைவு மாற்றம் போன்றவைக்கு நீர் மிகவும் அவசியம். நாம் உண்ணும் நீர் கலந்த உணவுடன் ஏறக்குறைய இரண்டு லீற்றர் தனி நீரும் அருந்துதல் வேண்டும் என உடலியல் வல்லுநர் கூறுகின்றனர். இரைப்பையில் **கரைப்பானாக செயல்படும்** நீரில் உணவு கலந்து கூழாகியபின்னரே உடலுக்கு வேண்டிய சத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன. உணவுச் சமிபாடு முடிந்தபின் உண்டாகும் வெல்லப்பொருட்கள் அமினோவமிலங்கள், கொழுப்பு, விற்றமின்கள், தாது வகைகள் முதலியன நீரில் கரைந்த நிலையிலேயே குடற்சுவரால் உறிஞ்சப்படுகின்றன. **உடற்கலங்களில் உணவு பயன்படுத்தப்படும்போது கழிவுகளும் தோன்றும். நீரில் கரைந்த திண்மக் கழிவுகள் சிறு நீரோடும் வியர்வையோடும் வெளியேற்றப்படும், வாயுக் கழிவுகள் குருதியிலிருந்து பரவி வெளிச் சுவாசத்தோடு வெளியேறும்.**

**உடலின் வெப்பத்தைச் சீராக வைத்திருக்கவும்** நீர் உதவுகின்றது. உடலில் நீர் குறையுமானால் தலை இடி, தசை நோ, மூட்டுக்களில் நோ போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். எமது உடல் **சிறுநீர், வியர்வை, மலம், சுவாசம் என்பவற்றினூடாக தினம் ஏறக்குறைய மூன்றரை லீற்றர் நீரை வெளியேற்றுகின்றது. இதை ஈடு செய்வதற்காகவும் நாம் போதியளவு நீரை உட்கொள்வது அவசியம்.**

நாம் அருந்தும் செயற்கையான பழச்சாறு போன்ற வர்த்தகத்திற்காக உற்பத்தி செய்யப்படும் குடிபானங்கள் நீர்த்தேவையை பூரணமாக ஈடு செய்யா. சந்தைப்படுத்தப்படும் பல பானங்களில் அதிக அளவு நிறம், சர்க்கரை வேதியல்கனிமங்கள் போன்ற தீங்கு தரும் கழிவுகள் உண்டு என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குடிபானங்களை அதிகமாக அருந்துவோர் அதை ஈடு செய்ய எட்டுக் கிண்ணத்திலும் கூடுதலாக நீரை அருந்துதல் அவசியம்.

உடற் சுத்தம், வாய்ச் சுத்தம், உடைச் சுத்தம் ஆகியவற்றுக்குப் பயன் படுவதுடன் தீ அணைப்புக்காகவும், தொழிற்சாலைத் தேவைகளுக்கும், விவசாயத்திற்கும் அதிக அளவு நீர் தேவைப்படுகின்றது

தூய நீரே உடலுக்கு வேண்டுமாதலால் பல வழிகளைக் கையாண்டு நீரினை தூய்மைப்படுத்துகின்றனர். வடிகட்டல் மூலமும், காய்ச்சி வடித்தல் மூலமும், வேதியல் முறைகள் மூலமும் நீர் தூய்மைப்படுத்தப்படுகின்றது. அத்துடன் கடலில் நிறைந்து இருக்கும் உவர்நீரை இராசாயன முறையில் உப்பு நீக்கம் செய்து நல்ல நீராக மாற்றுகின்றனர். இம் முறையினை, நன்னீர் அரிதான வரட்சி மிகுந்த பாலை நிலம் கொண்ட பல அரேபிய நாடுகள் பயன்படுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய உலகில் பல மில்லியன் தொகைக்கு மேலான மக்கள் தூய்மைப்படுத்தப்படாத நீரையே அருந்துகின்றனர். **தொற்றடைந்த நீரினால் பல வியாதிகள் வளர்முக நாட்டு மக்களைப் பாதிக்கின்றது. இந்த நிலைமை வரும் காலத்தில் மேலும் அதிகரிக்கலாம்** எனவும் கூறப் படுகின்றது.

**சூழல் நீர் மாசடையாது பாதுகாத்தல் மிகமிக அவசியம்.** வீட்டுக்கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள், விவசாயத்தில் பயன்படுத்தும் இரசாயனப் பசளைகள், களைகொல்லிகள், பூச்சிகொல்லிகள் போன்றவற்றுடன் அணுமின்னுலைகளின் கழிவுகளும் சூழல் நீரை மாசுபடுத்துகின்றன. பல தீங்கு விளைவிக்கும் கிருமிகள் நீரில் கலந்து காவப்படுவதன் மூலம் நோய்கள் பரவும் அபாயம் உள்ளது. இதைத் தவிர்ப்பது மக்களினதும் அரசாட்சியினரதும் தவிர்க்க முடியாத கடமையாகும்.

உலகில் மக்கள் தொகை பெருகிக்கொண்டே போகின்றது. ஆனால் வளங்கள் பெருகமாட்டா. வரும் காலங்களில் மக்களின் நுகர்வின் அதிகரிப்பினால் நன்னீரின் பற்றாக்குறை ஏற்படுவது நிச்சயம். இன்று உலகில் உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருட்களுக்காகவும், நிலக்கீழ் கனிமங்களுக்காகவும், நாடுகளுக்கிடையே போட்டியும் பூசல்களும் இடம் பெறுகின்றன. வருங்காலத்தில் நன்னீருக்காகவும் போட்டியும் போரும் நிகழக்கூடும். அந்த நிலை ஏற்படின் இலவசமாகக் கிடைக்கும் நீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படக் கூடிய அபாயம் ஏற்படலாம்.

புராதன காலங்களில் மரபுசார் முறைகளைப் பின்பற்றி மக்களின் தேவைக்கான நீரைச் சேமித்து வைப்பதற்காக, பண்டைய காலம் தொட்டு அணைகளும் குளங்களும் மன்னர்களால் கட்டப்பட்டன. இக்காலத்தில் எல்லா நாடுகளும் பல நவீன திட்டங்களைக் கையாண்டு **நீரைச் சேமிக்கவும் விநியோகிக்கவும் வழிவகைகள் செய்கின்றன.** தற்போது பல நகரங்களில் நீர்ப் பயன் பாட்டிற்காக பொது மக்கள் கட்டணங்கள் செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

வருங்காலத்தில் வாழப்போகும் எமது சந்ததியினருக்காக நாம் நீர் நிலைகளை மாசு சேராது பாதுகாக்கவும், நீரை வீணாக்காது பயன்படுத்தவும் வேண்டிய நெறி முறைகளை அறிந்து கடைப்பிடிக்கக் கடமைப்பட்டு இருக்கின்றோம். நாம் வாழும் மண்ணையும், சுவாசிக்கும் வளியையும் மாசுபடுத்தாது பேணவேண்டிய எமது பாரிய கடமையை எண்ணிச் சிந்திப்போம்! செயற்படுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் 14: பயிற்சிகள்

## I) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1) உயிர் வாழ்வதற்கு மிகத் தேவையானதும் இலவசமாகக் கிடைப்பதுமான மூன்று பொருட்கள் எவை?

..............................................................................................................

2) 100 கிலோ நிறையுள்ள மனிதனில் எத்தனை கிலோ நீராகும்?

..............................................................................................................

3) உலகில் நன்னீர் எங்கு கிடைக்கின்றது?

..............................................................................................................

4) நாம் குழாய்த் தண்ணீரை விட வேறு எவ்வழிகளில் நீரை எடுக்கின்றோம்?

..............................................................................................................

5) நீரை அசுத்தப்படுத்தும் பொருள்கள் எவை?

..............................................................................................................

6) மிக எளிய முறையில் தூய நீரைப் பெறும் வழி யாது?

..............................................................................................................

7) வருங்காலத்தில் தூய நீர் பற்றாக்குறை ஏற்படக்கூடிய பிரதான காரணம் யாது?

..............................................................................................................

8) திருக்குறளில் சொல்லப்பட்ட விண்பொய்ப்பின் என்பதன் கருத்து யாது?

..............................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II) பின்வரும் சொற்களை சந்தி பிரித்து எழுதுக.

1) தண்ணீர் : ..............................................................................................

2) மண்ணீர்: ..............................................................................................

3) ஆற்றங்கரை ..............................................................................................

4) நீர்மேலெழுந்து ..............................................................................................

5) மாசடைந்தநீர் ..............................................................................................

6) கத்திவெட்டு ..............................................................................................

## III) பின்வரும் இரட்டைக்கிழவி சொற்களை வைத்து வசனம் ஆக்குக.

1) சலசல 2) மடமட 3) விறுவிறு 4) புறுபுறு 5) படபட

1)..............................................................................................

2)..............................................................................................

3)..............................................................................................

4)..............................................................................................

5)..............................................................................................

## IV) பின்வரும் சொற்களை சொல் + வேற்றுமை உருபு எனப் பிரித்து எழுதுக.

**எ-கா: கற்றாரை = கற்றார் + ஐ**

1) கத்தியின் ..............................................................................................

2) தாயாரால் ..............................................................................................

3) மாதவிக்கு ..............................................................................................

4) கூலிக்காக ..............................................................................................

5) வீட்டில் ..............................................................................................

6) வீட்டிலிருந்து ..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) நமது ..............................................................................................

8) எங்களுடைய ..............................................................................................

9) ஊரின்கண் ..............................................................................................

10) எம்மிடம் ..............................................................................................

**V) கடல் நீர் எப்படி எமக்கு நன் நீராகக் கிடைக்கின்றது என்பதைப் பின்வரும் குறிப்புக்களைப் பயன்படுத்தி எழுதுக?**

கடல் நீர்....................................................... சூரியவெப்பம்.......................................................................

நீர் ஆவியாக....................................................... மேலெழுந்து....................................................சிறு

நீர்த்துளி.......................................................முகில்.......................................................................குழிர்ந்து

....................................................... மழைத்துளி....................................................................... மழை

....................................................... தரையில் விழும்.

**VI) பின்வரும் சொற்றொடர்களை ஆங்கிலத்தில் மொழிமாற்றுக.**

1) புவியிலுள்ள நீரில் 97 விழுக்காடு உப்பு நீராகும், 2 வீதம் உறைனீராகும், மீதி 1 விழுக்காடே நன்னீர்.

..............................................................................................................................................................

2) எமது உடலில் 66 விழுக்காடு நீராகும்.

..............................................................................................................................................................

3) நீர் திண்ம, திரவ, வாயு ஆகிய மூன்று நிலைகளில் காணப்படும்.

..............................................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VII) தொழிற்பெயரும் வினையால் அணையும் பெயரும்.

இவை ஒரு வினைச்சொல்லில் இருந்து பிறக்கும் பெயர்ச்சொற்களாகும்.

தொழிற்பெயர் திணை, பால், இடம் முதலியவற்றைக் காட்டா.

வினையாலணையும் பெயர் காலம், திணை, இடம் முதலியவற்றைக் காட்டும்.

எ-கா: பாடுதல், சிரிப்பு, சிரித்தல், அழுகை - தொழிற்பெயர்

பாடுகிறவன், பாடினவன், பாடுபவள் - வினையாலணையும் பெயர்

ஐந்து தொழிற்பெயர்களையும் ஐந்து வினையாலணையும் பெயர்களையும் தருக.

| | தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|---|
| 1). | ........................................ | ........................................ |
| 2). | ........................................ | ........................................ |
| 3) | ........................................ | ........................................ |
| 4) | ........................................ | ........................................ |
| 5) | ........................................ | ........................................ |

VIII) பின்வரும் பந்தியை வாசித்தபின் அதில் கூறப்பட்ட உண்மைகளை ஆசிரியருடன் சேர்ந்து தமிழில் கலந்துரையாடுக.

Average price of water you receive in the pipe is less than a penny for a gallon (Four liters) of water. Where as one gallon of bottled water is more than 140 cents or pence and one gallon of soda is more than 300 cents.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுவேலை

**I) பின்வரும் பந்தியை வாசித்தபின் அதன் கீழ்வரும் கேள்விகளுக்கு விடை தருக.**

The drinking water your Utility delivers to your tap is tested and monitored regularly for more than 100 contaminants and meets the requirements of about 90 regulations for water safety and quality. The bill every house owner receives for water pays not only the cost of water but also for water treatment, regular tests and monitoring and for the storage facilities and the network of distributing pipes, pumps and meters that delivers the water to your home every day. The cost also covers the wages of the workforce that maintains the water monitoring and the supply.

1) நகரங்களில் விநியோகிக்கப்படும் நீர் எத்தனை சட்டத் தேவைகளுக்காக சோதிக்கப்படுகின்றது?

..............................................................................................................................................

2) நீர் எதற்காகச் சோதனை செய்யப்படுகின்றது?

..............................................................................................................................................

3) மக்களிடம் நீருக்காக அறவிடப்படும் பணம் எதற்காகச் செலவிடப்படுகின்றது?

..............................................................................................................................................

4) மக்களுக்கு விநியோகிக்கும் நீர் மிகத் தூயது என்று கூறலாமா?

..............................................................................................................................................

**II) நீரை வீணாக்காது பயன்படுத்த நாம் கையாள உதவும் ஐந்து வழிமுறைகளை எழுதுக**

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் – 15

## சமுதாயத்தில் இனவெறி

மனிதர்கள் சிறு குழுக்களாக வாழ முற்பட்ட காலங்களில் இருந்து தமது உறவுகளினதும், உரிமைகளினதும் பாதுகாப்புக்காகப் போராடவேண்டி இருந்தது. குழுக்கள் இனங்களாகப் பெருகி, பிரதேச வாரியாக வாழும் சூழ்நிலையில் அவர்களுக்கு இடையே தலைமைகள் வேண்டி இருந்தது. இந்நிலையில் வேறுபட்ட இனங்களுக்கு இடையே ஊடாட்டங்கள் இடம் பெறும்போது பண்பாட்டு முரண்கள் தவிர்க்க முடியாது காணப்பட்டன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவரவர்கள் தத்தமது இனத்தின் மேல் கொண்ட பற்று தீவிரம் அடையும் போது அது கண் மூடித் தனமான வெறி ஆகின்றது.

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு, இன வேற்றுமை காரணமாக ஆசிய ஆபிரிக்க, அமெரிக்க, அவுஸ்திரேலிய நாட்டுப் பூர்வீகக் குடிகளை ஐரோப்பிய வல்லரசுகள் வதைத்த வரலாற்றை யாவரும் அறிவர். இன்றோ ஐரோப்பிய நாடுகள் சனநாயகத்தையும் (Democracy மக்கள் ஆட்சி) மனிதநேயத்தையும் போற்றிப் பேணுகின்றன.

கடந்த இரு நூற்றாண்டுகளில் சமுதாயங்களில் ஏற்பட்ட கல்வி அறிவுப் பெருக்கமும் குறிப்பாக இணையத்தளப் பயனும் **சாதி, மத, நிற பேதங்களை அகற்றி** மனித நேயத்துடன் வாழத்தூண்டுகின்றன. இருப்பினும் இன, மத, நிற வெறி இல்லாத நாடு இல்லை என்பது வேதனைக்குரிய உண்மையாகும்.

பிரித்தானிய ஆட்சியின் கீழ் கண்ணியத்தோடும், மதிப்போடும் வாழ்ந்த பல நாடுகள் சுதந்திரம் அடைந்த பின், நிலை கெட்டுத் தரம் கெட்டு இன, மத வாதங்களால் சீரழிந்து போவதை நாம் காண்கின்றோம். தாம் மாத்திரம் வாழ்வதற்காகவும், பிறர் பொருளைக் கவர்வதற்காகவும், அரசியல்வாதிகளும் சர்வாதிகாரிகளும் **இனப் பற்று, மதப் பற்று, நாட்டுப் பற்று என்ற போர்வைகளில் மறைந்துகொண்டு, மற்றைய இனத்தை அழிக்க முயல்கின்றனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அன்பே சிவம்' என்றும், 'தர்மம் சரணம் கச்சாமி' என்றும் 'சகோதரத்துவம்' 'மன்னிப்பே மகிமை' என்றும் போற்றிய சமயங்கள் வாழும் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் இனவெறியோடு மதத்தையும் கலந்து பயங்கரவாதம் தாண்டவமாடுவதைப் பார்க்க முடிகிறது.

ஆபிரிக்காவிலே எல்லோரும் (Negroid) நீக்கிரோ இனத்தவர்களாய் இருந்தும், கொங்கோ, சூடான் போன்ற பல நாட்டினர், தங்களுக்குள்ளே குழுப் பகைமைகொண்டு இன அழிப்பில் ஈடுபடுகின்றனர். அயர்லாந்திலும் இஸ்லாமிய நாடுகளிலும் இனமதக் குழுக்களுக்கிடையே உள்நாட்டுக் கலவரங்கள் நிகழ்கின்றன.

சிறுபான்மையினராக வாழும் மக்கள் தாம் சமூக மேம்பாடு பெறும் நோக்கத்துடன் கடுமையான உழைப்பாளிகளாக இருப்பது வழக்கம். அவர்கள் பல துறைகளிலும் முன்னேறி பிரதான இடம் பெற்று இருப்பர். இவர்களால்தான் சமூகத்தில் தமது வாய்ப்புக்கள் குறைகின்றன என, இயலாமையும், பொறாமையும் உடைய குறுகிய மனப்பான்மை கொண்ட பெரும்பான்மையினர் இனவெறியைத் தூண்டி ஆதாயம் பெறுகின்றனர். சில அரசாங்கங்கள் நேரடியாகவே இத்தகைய சமூக விரோத சக்திகளுக்கு ஆதரவாகச் செயல் படுகின்றன.

இன்று பெரும்பாலான வளர்ச்சி அடைந்த நாடுகளில் இனவெறி அச்சமின்றி மக்கள் வாழ முடியும். இந்நாடுகளில் இன வேறுபாடு காட்டுதல் குற்றமாகும். **பெரும்பாலான நாகரிகமும் நல்லுணர்வும் மிக்க மக்கள் மாந்த நேயத்துடன் அனைவரையும் அணைத்து, மதித்து வாழ்கின்றனர். புறத்தே காணும் தோற்றத்தினை விட்டு மனிதரின் அகத்தின் அழகுக்கு அதிக மதிப்பு அளிக்கின்றனர்.** கல்வியறிவு கொண்டவர்கள் சகிப்புத்தன்மையுடன் சமூக அமைதியை விரும்பி வாழ்கின்றனர்.

மானிட விழுமியங்களின் உச்சத்தைத் தேடும் இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் இவ்வாறு இனவெறிச் செயல்கள் நிகழ்வது, உலக மாந்தர் ஒவ்வொருவரும் நாணத்தக்கது. **'யாதும் ஊரே யாவரும் கேளிர்', ' அரிது அரிது மானிடராதல் அரிது' 'ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்' போன்ற பண்டைத் தமிழரின் பரந்த தத்துவம் விளக்கப்படல் வேண்டும். சமயங்களின் மூலக்கருத்தான அன்புடைமையைப் போற்றும் தத்துவங்களை யாவரும் அறிந்துபோற்றும்படி செய்தல் வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் **பண்பாட்டுக் கல்வியையும், பல்சமயக் கல்வியையும் இளமையிலே கற்பித்தல் மூலம் இனங்களுக்கு இடையில் சகோதர உணர்வினை ஏற்படுத்த முடியும்.** இன்றைய நல்லாட்சிசெய்யும் நாடுகளில் கல்வித்திட்டத்தில் இனவேற்றுமை கொண்ட பதங்களைப் பாவித்தல் கூடத் தவறு எனக் கருதப்படுகின்றது. பாடசாலைகளில் சிறார்கள் வேறுபாடின்றி ஒற்றுமையாகக் கற்பதற்கான சூழல் அமைந்துள்ளது. கல்வி மட்டுமல்லாது உலக ஊடகங்கள், தொலைக்காட்சிகள் அனைத்தும் உலகின் நலம் பேணி, மாந்தநேயத்தைத் தங்களது குறிக்கோளாகக் கருத்தில் கொண்டு கடமையாற்றுவதன் மூலம் இனவெறியையும், இனங்கட்கு இடையேயுள்ள முரண்பாடுகளையும் தவிர்க்கலாம்.

மாந்தநேயத்திற்கு எதிரான கொடுமைகள் இடம்பெறுவதற்கு **குறுகிய அரசியல் நோக்கம்கொண்ட சில நாடுகள் பின்னணியில் இருந்து, மறைமுகமாக ஊக்கம் கொடுக்கின்றன.** இவை நிறுத்தப்படும்வரை இனவெறி தாண்டவம் ஆடுவதைத் தடுக்க முடியாது. வன்செயல்கள் பகிரங்கமாக இடம் பெறும்போது வல்லரசுகள் பாராமுகமாக இருப்பதும், மறைமுகமாக உதவிகள் செய்வதும் இனவெறி கொண்ட வன்செயலாளரை ஊக்கப்படுத்துவதாக அமைகின்றது. சமாதானத்தினை விரும்பும் உலக நாடுகள் ஒன்று சேர்ந்து பயங்கரவாத ஆட்சிகளை நீக்குவது மிகவும் அவசியம்.

**இன்று உலகம் பல்லினக் கலாச்சாரத்துள் புதைந்துள்ளது. எனவே, மாந்தர் ஒற்றுமை ஒன்றே உலகில் சுபீட்சத்தினை ஏற்படுத்தும் என்பதைப் பரப்புரை செய்தல்வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்பாடு மக்களிடையே வேரூன்ற வேண்டும்.** குறுகிய அரசியல் லாபம் கருதாது, உள்ளங்களில் அன்பைப் பெருக்கவும், மானிடப் பண்பாட்டை மேம்படுத்தவும் ஏற்ற நடவடிக்கைகளை சகல சமூக தாபனங்களும் குறிப்பாக மதத் தலைவர்களும் எடுப்பார்களாயின் இனவெறி அற்ற நாளைய உலகைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் 15: பயிற்சிகள்

1) **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1) எக் காரணிகள் இனவெறியைத் தூண்டுவனவாக அமைகின்றன?

........................................................................................................................

2) இனவெறிக்கு தோல் நிறம் மாத்திரம் காரணம் இல்லை என்பதை உதாரணத்துடன் விளக்குக.

........................................................................................................................

3) மதங்கள் அன்பைப் போதித்தபோதும் மதத்தைப் பின்பற்றுவோர் சண்டையிடுவதன் காரணம் என்ன?

........................................................................................................................

4) விலங்குகளுக்கு இடையே தன்னினவெறிப் போராட்டங்கள் உண்டா?

........................................................................................................................

5) நாம் ஒருவரின் வெளித் தோற்றத்தைக் கணிப்பிடுவது ஏன் தவறாகும் ?

........................................................................................................................

6) கல்விக்கூடங்கள் இனவெறியை அகற்ற யாது செய்தல் வேண்டும்?

........................................................................................................................

7) ஊடகங்கள் எவ்வாறு இனவெறியை அகற்ற உதவமுடியும்?

........................................................................................................................

8) இனவெறி, "அன்பே கடவுள்". "அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது" இக்கூற்றுகளை ஆங்கிலத்தில் தருக.

........................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II) கீழே தரப்பட்ட முற்றுப்பெறாத சொற்றொடர்களை நீங்கள் விரும்பியவாறு நிறைவு செய்க.

1) ஒரு ஊரில்....................................................................................................

2) எனக்கு எப்பொழுதும்.......................................................................................

3) நாம் விலங்குகளிலிருந்து..................................................................................

4) ஆண்களும் பெண்களும்....................................................................................

5) எனது பாட்டி....................................................................................................

III) பின்வரும் வசனங்களை எதிர்மறை வசனங்களாக மாற்றி எழுதுக.
நான் நேற்று பள்ளிக்கூடம் சென்றேன்.
எ.கா: நான் நேற்று பள்ளிக்கூடம் செல்லவில்லை.

1) தம்பி சென்ற கிழமை சங்கீதம் படித்தான்.

.......................................................................................................................

2) செல்வன் நன்கு படித்ததனால் சித்தியடைந்தான்.

.......................................................................................................................

3) அரசியல்வாதி சொன்னபடி எங்களைச் சந்தித்தார்.

.......................................................................................................................

4) ஒவ்வொருவரும் தம்கடமையை செய்தாலே நாடு முன்னேறும்.

.......................................................................................................................

5) கந்தன் வெற்றி பெறுவதற்கு விரைவாக ஓடினான்.

.......................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV) ன, ந, ண ஆகிய எழுத்துக்கள் சற்று வேறுபாடுடைய ஒலிப்பு உடையதால் மயங்கொலிகள் எனப்படும். ஒவ்வொரு எழுத்தும் கொண்ட மூன்று சொற்கள் தருக

1) ந= ........................ ........................ ........................

2) ன= ........................ ........................ ........................

3) ண= ........................ ........................ ........................

V) பின்வரும் சொற்களை வைத்து வசனம் அமைக்க

1) வெற்றி நடனம் 2) சிறந்த பெறுபேறு 3) நோய் ஏற்பட்டால்

4) நண்பர்கள் ஒன்றுகூடி 5) வீண்செலவு

1) ........................................................................

2) ........................................................................

3) ........................................................................

4) ........................................................................

5) ........................................................................

VI) பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி பத்து வசனங்கள் எழுதுக.

1) முயன்றால் முடியும் 2) நான் விரும்பும் தொழில்

........................................................................

........................................................................

........................................................................

........................................................................

........................................................................

........................................................................

........................................................................

........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.................................................................................................................................

.................................................................................................................................

VII) கீழுள்ள படத்தைப் பார்த்து அதில் காண்பவற்றை விபரிக்க.




(நன்றி ஹைலயிற்ஸ்)

1)..............................................................................................................................

.................................................................................................................................

2)..............................................................................................................................

.................................................................................................................................

3)..............................................................................................................................

.................................................................................................................................

VIII) கலந்துரையாடல்

இனங்களுக்கு இடையே ஒற்றுமையை கொண்டுவர நாம் செய்யக்கூடிய முயற்சிகளை மாணவர் ஆசிரியருடன் சேர்ந்து கலந்துரையாடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுவேலை

I) சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங் கிலுள்ள படி

**அருஞ்சொல் விளக்கம்**

சாற்றுங்கால்=சரியாகக் கூறின்

மேதினி= உலகம்

பட்டாங்கு = சிறந்த நூல்கள்

இப்பாட்டை சந்தி பிரித்து எழுதுக

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

II) கீழே கருத்துப்படி மாற்றி எழுதிய பாட்டை ஆங்கிலத்தில் தருக.

"பட்டாங்கிலுள்ளபடி சாற்றுங்கால் சாதி இரண்டொழிய வேறில்லை வழுவாத நீதி நெறிமுறையின் படி, இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர் ஆவார்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III) **கீழே தரப்பட்ட பந்தியில் ஆங்கில ஒலிப்பில் எழுதிய சொற்களையும் வேறு இலக்கணப் பிழைகளையும் திருத்தி எழுதுக.**

நான் அன்ரி வீட்டுக்குப் போனேன் வீட்டு கேற் பூட்டியிருந்தது. கோலிங் பெல்லை அழுத்தினேன் அங்கிள் வந்து கம் இன் என்று அழைத்தார். தம்பி மோனே எங்கட வூட்ட மறந்துட்டியோ? பொரினுக்கு போகப்போரியே? மம்மியின் ஹெல்த் எப்படி ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் - 16

## காஞ்சிபுரம் போனோம்

எமது விடுமுறையின்போது நானும் நண்பர்களும் ஒரு பிரசித்திபெற்ற இந்திய நகரத்திற்குப் பயணம் செய்ய ஆலோசித்தோம். சில நண்பர்கள் மும்பாய் நகர் செல்லவும், சிலர் கொல்கத்தா நகர் செல்லவும் விரும்பினர். ஈற்றில், **தமிழ்நாட்டின் புகழ்பெற்ற ஒரு பழம்பெரும் தலமாக விளங்கும் காஞ்சிப் பட்டணம்** செல்வதற்கு நானும் நண்பர்களும் ஒரு மனதாகத் தீர்மானம் செய்தோம்.

எமது பயணத்திற்கு முன்னேற்பாடாகத் தேவைப்படும் சுற்றுலா விபரங்களைக் கணினி மூலமும், அண்மையில் இருந்த நூலகத்தில் இருந்த நூல்கள் மூலமும் தேடி அறிந்தோம். பயணத்திற்கு வேண்டிய **கடவுச் சீட்டுக்கள், விசா அனுமதிகள், விடுதி ஒழுங்குகள்** என்பவற்றைத் தாமதமின்றிப் பெற்றுக்கொண்டோம். தவிர்க்க முடியாத தேவைகளைப் பூர்த்தி செய்வதில், நம்பகரமான ஒரு பிரயாண முகவரின் உதவி தேவைப் பட்டது. கணிசமான பணமும், சில நாட்களும் செலவான பின் பிரயாண ஒழுங்குகள் நிச்சயம் ஆயின.

குறித்த நாளில் விமானம் மூலம், சென்னை மீனம்பாக்கம் விமானத்தளத்தில் இறங்கி, சென்னை நகரில் ஏற்பாடு செய்திருந்த விடுதிக்கு வாடகை வண்டியில் சென்றடைந்தோம். எமது விமானப் பயணக் களைப்புத் தீர்ந்த பின், அடுத்த நாள் அதிகாலையில் பேருந்து மூலம் புறப்படலாம் எனத் தீர்மானித்தோம். தமிழ் நாட்டின் தலை நகரான **காஞ்சிபுரம் சென்னைப் பட்டணத்திலிருந்து தென் மேற்குத் திசையில் எழுபத்தாறு கிலோ மீற்றர் தொலைவில், பாலாற்றின் கரையில் அமைந்துள்ளது.**

"காஞ்சி நகரம் பற்றிப் பல பண்டைய இலக்கியங்களில் கூறப்படுள்ளது. பரிபாடல் எனும் நூல் தொண்டைமான் இளந்திரையன் எனும் மன்னன் ஏறக்குறைய ஈராயிரம் வருடங்களுக்கு முன்னர் காஞ்சியை ஆண்டதாகக் கூறுகின்றது. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சீன வரலாற்று ஆசிரியர் யுவான் சுவாங் புத்தபிரான் காஞ்சிக்கு வந்ததாக எழுதியுள்ளார்" என்று எம்முடன் பயணித்த தமிழ்நாட்டு வரலாற்று ஆசிரியர் கூறியதைக் கேட்டு வியந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மேலும் "மூன்றாம் நூற்றாண்டு முதல் பல்லவரின் ஆட்சிக் காலத்தில் தான் காஞ்சி பெரும் முன்னேற்றம் கண்டது. முதலாம் மகேந்திரவர்மன் எனும் பல்லவ மன்னன் காஞ்சியை பல்லவர்களின் தலை நகரம் ஆக்கினான். பல்லவ மன்னர்களின் பின்னர் ஆண்ட சோழ, நாயக்க மன்னர்களின் காலங்களில் அது மேலும் விரிவடைந்தது" என்ற வரலாற்று உண்மைகளையும் கூறினார்.


நாங்கள் காஞ்சியில் பயணித்த சாலைகள் யாவுமே பலவிதமான மோட்டார் வாகனங்களாலும், மக்களாலும் நிரம்பி வழிந்தன. காஞ்சியில் எங்கு பார்த்தாலும் நடைபாதை வியாபாரிகளும், மக்களும் கலந்த ஆரவாரமான நடமாட்டம் காணப்பட்டது. அப்பப்பா! காஞ்சிப் பட்டினத்தில் எங்கு திரும்பினாலும் கோயில்களும், கடைகளுமாக ஊரே விழாக்கோலம் கொண்டதுபோல இருந்தது. **இரு கைகளையும் தலைக்குமேல் வைத்து கோயில்களை வணங்கிய படியே ஊர் முழுவதும் வலம் வரலாம். இதனால் தமிழ் நாட்டின் பழமையான மரபுக்கு எடுத்துக்காட்டான காஞ்சிபுரத்தினை, கோவில் நகரம் எனப் பல நூல்களில் குறிப்பிடுவது மிகையாகாது.**



முதலில் நாம் காஞ்சிபுரத்தில் உள்ள கோயில்கள் எல்லாவற்றிலும் பழமையானது எனப்படும் **கைலாசநாதர்** கோயிலைத் தரிசிக்கச் சென்றோம். கம்பீரமாக அமைந்துள்ள **கைலாசநாதர் கோயில் இராசசிம்மன் எனும் பல்லவ மன்னனால் ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிறப்பாகக் கட்டப்பட்டதாகவும், பின்னர் அவனது மகனான மூன்றாம் வர்மனால் மேலும் அழகுபடுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.** கோயிலின் நடுவில் சிவலிங்க வடிவில் கைலாசநாதர் காட்சி அருளுகின்றார். எல்லாமாக ஐம்பத்தெட்டு கர்ப்பக் கிரகங்கள், சிவன், பார்வதி, கணபதி, முருகன் ஆகிய தெய்வங்களுக்காக நிர்மாணம் செய்யப்பட்டு இருப்பதனை அறிந்து ஆச்சரியம் கொண்டோம். வெளிச் சுற்றுச் சுவர், கோயில் மாடங்களைச் சேர்த்து இணைத்ததுபோலக் கட்டப்பட்டு இருந்தது. அந்தச் சுற்றுப் பிரகாரம் பல்லவ காலக் கட்டிடக்கலையின் திறமையைக் காட்டி நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்புறத்திலே சிங்கத்தின் தலைகளால் சுமக்கப்படுவதுபோன்று வடிவமைக்கப்பட்ட தூண்களாலான மண்டபங்கள் காணப்பட்டன. கோயிலின் வெளிப்பகுதி முழுவதிலும் கல்லில் செதுக்கப்பட்ட யாளி எனும் விலங்கின் சிற்ப வரிசை அமைந்துள்ளது. கோயிலின் சுவர்களில் எல்லாம் தமிழரின் சிற்பக்கலைக்குச் சான்றாகப் பல அழகான சிற்பங்கள் செதுக்கப்பட்டு இருந்தன.



அடுத்தநாள் காலையில் **வரதராசப் பெருமாள்** கோயிலைப் பார்க்கப் புறப்பட்டோம். இந்த ஆலயம் பத்தாம் நூற்றாண்டில் குலோத்துங்க சோழ மன்னனால் கட்டப்பட்டு பின்னர் ஆண்ட நாயக்க மன்னர்களால் பெருப்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. மிக்க அழகுடன் விளங்கும் **திருமாலின் நின்ற, இருந்த, கிடந்த மூன்று மூர்த்தங்களையும்,** மூன்று அடுக்குகளில் பிரதிட்டை செய்துகட்டப்பட்டுள்ளமை இக் கோயிலின் சிறப்பு ஆகும்.

அடாடா! கருங்கல்லில் பொழியப்பட்டுத் தொங்கிய சங்கிலிகளையும், தூண்களில் அமைக்கப்பட்ட சிற்பங்களையும் பார்த்து சுவைப்பதற்கு இரு கண்கள் போதாது. சுற்றிப் பார்ப்பதற்கு பல மணி நேரத்தினை எம்மை அறியாமலேயே செலவிட்டோம். மேலும், நூறு தூண்கள் கொண்ட கல் மண்டபத்தினையும் இக் கோயிலில் கண்டு வியந்தோம்.



அன்று மாலையில் **காஞ்சி காமாட்சி அம்மனின் ஆலய** தரிசனம் காணச்சென்றோம். இந்த ஆலயம் ஆறாம் நூற்றாண்டில் பல்லவ மன்னரால் கட்டப்பட்டதாக அறிந்தோம். பொற்றட்டினால் வேயப்பட்ட விதானத்தை உடைய இக்கோயிலின் சந்நிதியில் நின்று மக்கள் அம்மனை வணங்கிய காட்சியைக் கண்டோம் நுழைவாயிலின் வலது புறத்தே, கல்யாண மண்டபம் வியக்கத்தக்க வகையில் நிர்மாணிக்கப்பட்டமை மனதினைக் கவர்ந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஞ்சிபுரத்தின் வடக்குப் பகுதியில் ஐம்பத்து ஒன்பது மீற்றர் உயரமான வாசல் கோபுரத்தினை உடைய **ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோயில்** பார்ப்பதற்குப் புறப்பட்டோம். ஏறக் குறைய முப்பது ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. விஜயநகர மன்னர் காலத்தில் **கிருஷ்ண தேவராயரால்** கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.



**காஞ்சி மாநகரம் பட்டு நெசவுக்குப்** புகழ்பெற்றது. இந்த நகர மக்களில் எண்பது வீதமானோர் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ராஜராஜ சோழ மன்னன் பட்டு நெசவுசெய்வோரை இந்த நகரத்திற்கு வரவழைத்து இத்தொழிலை ஊக்குவித்தான் எனக் கூறப்படுகின்றது. இன்று பெரும்பாலானோர் தமது வீடுகளில் இருந்து கொண்டே, பட்டுத் தொழில் செய்கின்றனர். நாமும் எமது காஞ்சிப் பயணத்தின் நினைவாகச் சில பட்டு விற்பனைத் தலங்கட்குச் சென்று பார்வையிட்டோம்.



மேலும் பல விசேடமான தலங்கள் காஞ்சிபுரத்தில் இருந்தபோதிலும், எம்மால் யாவற்றையும் பார்க்க முடியவில்லை. அடுத்த தடவை அவற்றைப் பார்க்கலாம் என்று மனதினைத் தேற்றிக் கொண்டு, எமது இருப்பிடம் வந்து சேர்ந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் 16: பயிற்சிகள்

I) பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக

1) மாணவ நண்பர்கள் எங்கு ஏன் பயணம் செல்ல விரும்பினர்?

........................................................................................................................................

2) பயணம் செய்வதற்கு கட்டாயமாகத் தேவைப்படுவன எவை?

........................................................................................................................................

3) மாணவர் தரிசித்த மூன்று கோவில்கள் எவை?

........................................................................................................................................

4) காஞ்சிபுரம் எங்கே உள்ளது?

........................................................................................................................................

5) காஞ்சிபுரத்தை கோவில் நகரம் என்று ஏன் அழைக்கின்றனர்?

........................................................................................................................................

6) காஞ்சிபுரம் கோவில்கள் தவிர வேறெதற்குப் பெயர் பெற்ற பட்டினம்?

........................................................................................................................................

7) காஞ்சிபுரம் எந்தப் பல்லவ மன்னரால் தலை நகரமாக்கப் பட்டது ?

........................................................................................................................................

8) சென்னையில் மாணவர் வேறு எந்த இடங்களுக்குப் போனார்கள் ?

........................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II) **பின்வரும் சொற்களுக்கு ஏற்ற ஆங்கிலச் சொற்கள் தருக**

1) விமான நிலையம் ....................................................

2) பேருந்து ....................................................

3) சிரமபரிகாரம் ....................................................

4) நடைபாதை வியாபாரி ....................................................

5) பரபரப்பு ....................................................

6) ஆச்சரியம் ....................................................

7) கட்டிடக்கலை ....................................................

8) சிற்பம் பொழிதல் ....................................................

9) இரசித்தல் ....................................................

10) தரிசித்தல் ....................................................

III) **பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொற்களைத் தருக**

1) செதுக்குதல் ....................................................

2) தரிசனம் ....................................................

3) சாலை ....................................................

4) நகரம் ....................................................

5) வீரம் ....................................................

6) சான்று ....................................................

7) மூர்த்தங்கள் ....................................................

8) கடை ....................................................

9) கல்யாணம் ....................................................

10) வேதம் ....................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV) பின்வரும் பந்தியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக

## அறிவிப்பு

இயற்கையைப் பேணி இன்புற்று வாழ்வோம்

காடு வளர்ப்போம், கழிவெளி அழிப்போம்

நீர், நிலம் பேணில் நீர் பிணி தீர்வீர்

நம் சூழல் மாசடையின் நம் நலனும் மாசடையும்

உலகைப் பேண உறுதி கொண்டெழுக!

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

V) பின்வரும் சோடிச் சொற்களை வைத்து ஒரு வசனம் அமைக்க

1) நூலகம் , மௌனம் :........................................................................

........................................................................................................

2) சுவை , உறைப்பு :........................................................................

........................................................................................................

3) அரங்கேற்றம் , மிருதங்கம்:........................................................................

........................................................................................................

4) கோடைகாலம் , கடற்கரை :........................................................................

........................................................................................................

5) முன்னேற்பாடு, சுற்றுலா:........................................................................

........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VI) **தமிழில் இரண்டு சொற்களைச் சேர்த்து புதுக்கருத்துடைய சொல்லை ஆக்கலாம்.**

எ-கா: தினம்+ மலர் =தினமலர் ( பத்திரிகையின் பெயர் )

பின்வரும் சொற்களை விளக்குக

உமிழ்நீர், குத்துவிளக்கு, கைக்கூலி, செங்கோல், யோகாசனம்

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

VII) **எ, ஆ, இ, ஈ, உ இவ் எழுத்துக்களில் தொடங்கும் உமது எண்ணத்தில் தோன்றும் நற் போதனை சொற்றொடர்களை எழுதுக**

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

VIII) **பின்வரும் பந்தியை வாசித்து கீழே தரப்பட்ட கேள்விகளுக்கு தமிழில் விடை தருக.**

முற்காலத்தில் மன்னர் முரசு கொட்டி அல்லது தீயைக் கொளுத்தி செய்திகளை அனுப்பினர். சிலர் தூதனை அனுப்பினர். எழுதத்தொடங்கியபின் தூதுவன் மூலம் அல்லது புறா மூலம் எழுதிய ஓலையை அனுப்பினார்கள். போக்குவரத்துச் சாதனங்கள் வந்தபின் கடிதம் அனுப்பும் முறை ஆரம்பமானது. மார்கோனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெல்லும் வானொலியையும் தொலைபேசியையும் கண்டுபிடித்தபின் இலகுவாக செய்தி அனுப்பும் முறை நடைமுறைக்கு வந்தது. இன்று கம்பியில்லாச் செய்தித் தொடர்பும் இணையவலையும் பிரபல்யம் அடைந்துள்ளது

1) How was messages sent in the olden days?

..............................................................................................................................................

2) What progress allowed sending messages through messengers or courier doves?

..............................................................................................................................................

3) Who invented the radio and telephone?

..............................................................................................................................................

4) How are messages sent today?

..............................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுவேலை

I) நீர் சுற்றுலா சென்ற பயணத்தில் நீர் இரசித்த ஒரு காட்சி அல்லது செயற்பாட்டை சிறு கட்டுரையாக எழுதுக

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................


..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

II) கீழே தரப்பட்ட படத்தைப் பற்றி ஐந்து வசனம் எழுதுக



(நன்றி ஹைலயிற்ஸ்)

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் – 17

## நண்பனுக்கு ஒரு கடிதம்

15, இராணி வீதி,
இலண்டன்.
2012-09-18

அன்பின் நண்பன் அறிவழகனுக்கு,

நான் நலமே உள்ளேன் உனது நலம் எப்படி? உனது கடிதம் கண்டு பல மாதங்களாகி விட்டன. தொலைபேசியில் கதைப்பதனை விட, நீ எழுதும் கடிதத்தினை வாசிக்கும் இன்பம் தனியானது. படிப்பதற்கு நேரம் ஒதுக்குவது போல எழுதுவதற்கும் நாம் நேரம் ஒதுக்கிட வேண்டும் என விரும்புகிறேன்.

நீ இவ்வாண்டு **ஈற்று உயர்வகுப்புத் தேர்வு** எழுதவிருக்கிறாய் என நினைக்கிறேன். தேர்வில் நீ நல்ல வெற்றியடைவாய் என்பதில் எனக்கு ஐயமில்லை. நாம் மானுடரின் ஒப்பற்ற பெரும் செல்வம் கல்வியே என்பதை மனதில் வைத்திருந்து, காலத்தை வீணாக்காமல், படிப்பில் அக்கறையாய் இருத்தல் வேண்டும்.

உனது உயர் கல்வியை எத்துறை நோக்கித் தொடர்வது என்பதை, இப்போதே ஆழ எண்ணிச் செயற்படு. **இயல்பாகவே ஈடுபாடுள்ள துறையை மட்டும் தேர்ந்தெடுக்காமல், வாழ்வினை மேம்படுத்துவதாகவும், வேலைவாய்ப்புகள் மிகுந்ததாகவும் உள்ள துறையினைத் தேர்ந்து கற்கவேண்டும்** என எனது தந்தையார் கூறினார். அது போலவே உனது தந்தையாரும், பாடசாலை ஆசிரியரும் அதற்குரிய பல ஆலோசனைகளை முன் வைப்பார்கள் என நினைக்கின்றேன். யாவற்றையும் கேட்டு உனது அறிவுக்கும் ஆற்றலுக்கும் உகந்த, சிறந்த முடிவினை நீயே எடுப்பது நன்று. எமது எதிர் காலம் எமது கைகளில் தான் இருக்கின்றது என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை இருக்கின்றது.

எனக்கு அடுத்த ஆண்டு **பொதுத் தராதர உயர்தரத்தில்** சேர இடம் கிடைத்திருக்கிறது. எத்துறையை நான் முதன்மைப்படுத்திக் கற்கலாம் என்று ஆராய்ந்தபோது, அப்பாவும் எனக்கு நல்ல வழிகளைக் காட்டினார். எல்லாவற்றையும் ஆழ எண்ணினேன். இன்றைய வேலைவாய்ப்பு, **கணினி மென்பொருள் துறையில் மிகச் சிறப்பாக உள்ளது.** வருங்காலத்தில் உலகின் அனைத்து அசைவுமே கணினி மின்னியல், செயற்கைக்கோள் என்பவற்றாலேயே ஆளப்படும். இவை வாழ்வியல் தொடங்கி விண்ணியல், போரியல், வரைகலையியல் என உலகை ஆட்டிப்படைப்பதை நாள்தோறும் நாளிதழ்களில் வாசிக்கின்றோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, கணினித் துறையில் ஈடுபட வேண்டும் எனவும் என் மனதில் விருப்பம் உள்ளது. இருந்த போதும் எக்காலத்தும் பயனுள்ளதும், நாளைய உலகில் பெருமதிப்பு உடையதாகவும் உள்ளது உயிரியல். ஆகவேதான் எனது முதல் தெரிவாக உயிரியலை தேர்ந்துள்ளேன். உயிரியல் துறையில் **இயற்கை வேளாண்மைபற்றிக் கற்று விரிவுரையாளராக வர விரும்புகிறேன்.** எதிர்காலத்தில் உலகின் கவனத்தைக் கவரப்போவதும், மிகவும் தேவையாக அமையப்போவதும் இயற்கை வேளாண்மை என எண்ணுகின்றேன்.

எமது கல்வி எமது வாழ்வினைச் செம்மைப்படுத்தும் அதே நேரத்தில் நாம் விரும்பும் தொழிலையும் தேர்ந்து எடுக்கும் முறையில் அமையவேண்டும் என்பதே எனது விருப்பம். தற்காலத்தில் உலகு எங்கணும் வேலைவாய்ப்புக்கள் இல்லாத அதே நேரம், கல்வி கற்கும் வாய்ப்புக்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. மாணவர்கள் தாம் விரும்பும் துறையில் கற்பதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள். முயற்சி உடைய மாணவர்கள் பாராட்டும்படியான பெறுபேறுகளைப் பெற முடியும்.

நான் இரண்டு பாடசாலை விடுமுறைகளின் போது கனடா வந்துவிட்டேன். அடுத்த தடவை நான் பெற்றோருடன் பாரிஸ் செல்வதாக இருக்கின்றேன்.அங்கு எனது சிறிய தந்தையார் குடும்பத்துடன் வாழ்கின்றார். அங்கு பல விசேடமான இடங்களைப் பார்வையிடலாம் என அவர் எம்மை அழைத்துள்ளார். எனது தந்தையாருக்கு அவரது வேலைத்தலத்தில் விடுதலை கிடைப்பதனைப் பொறுத்தே எமது பயணம் அமையும்.

கடந்த வருட விடுமுறையின் போது கனடாவின் முக்கியமான இடங்களை எல்லாம் பார்த்ததை நான் மறக்கவில்லை. முதல் தடவை உன்னுடன் சென்று, நயாகரா நீர் வீழ்ச்சியினையும், சீஎன் கோபுரத்தின் உயரத்தையும் பார்த்த வியப்பு எனது மனதினை விட்டு ஒரு போதும் அகலாதே!

என்னைப் போலவே எனது பெற்றோரும் நீ எம்முடன் விடுதலையைக் கழிக்க வருவதனை இட்டு மகிழ்ச்சி அடைகின்றனர். தொலை பேசியில் கதைப்பதை விட, நீ வந்ததும் உன்னோடு நேரில் கலந்து உரையாடும் அனுபவமே வேறுதான்! உனது வரவை எண்ணிப்பார்க்கும் போதே மனம் குதூகலிக்கின்றது.

விபரமான உனது பதிலை விரைவில் எதிர் பார்க்கிறேன். யாவரும் பன்னலமும் பெற்று வாழ வாழ்த்துகிறேன்.

இவண்,
அன்பின் நண்பன்
தமிழ்வேள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் 17: பயிற்சிகள்

**I) பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக**

1) நீங்கள் வாசித்த கடிதத்தில் யார் யாருக்கு எழுதினார்கள்?

.......................................................................................................................................

2) கடிதம் எழுதும் போது முதலில் மேலே என்ன கட்டாயமாக எழுத வேண்டும்?

.......................................................................................................................................

3) நாங்கள் எழுதும் கடிதத்தில் ஆரம்ப வசனம் பெரும்பாலும் எதுவாக இருக்கும்?

.......................................................................................................................................

4) கனடாவில் வாழும் நண்பன் எந்த வகுப்பு படிக்கிறார்?

.......................................................................................................................................

5) கனடாவில் வாழும் நண்பன் எத்துறையில் ஆர்வம் கொண்டவர்?

.......................................................................................................................................

6) இலண்டனில் வாழும் நண்பன் எத்துறையில் படிக்க விரும்புகின்றார்?

.......................................................................................................................................

7) இலண்டன் நண்பன் மேற்படிப்பு முடிந்த பின் என்ன செய்ய வேண்டும் என ஆசைப்படுகின்றார்?

.......................................................................................................................................

8) தமிழ்வேள் கனடாவில் பார்த்து ரசித்த இரு இடங்கள் எவை?

.......................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II) **பின்வரும் வசனங்களை ஆங்கிலத்தில் தருக**

1) புதுமைபித்தன் தனது 42ஆவது அகவையில் இறந்தார் ஆனால் அக்குறுகிய காலத்தில் தமிழ் இலக்கியத்தில் தன் முத்திரையை பதித்துள்ளார்.

..........................................................................................

..........................................................................................

2) பொன்னகரத்தில் வாழ்ந்தவர்கள் வறுமையின் பிடியில் சிக்கித் தவித்தார்கள்.

..........................................................................................

3) முருகேசன் குடிபோதையில் பேச்சுமூச்சின்றி மயங்கிக் கிடக்கின்றான்.

..........................................................................................

4) தெருக்களில் குப்பைகள் சேர்வதைத் தடுக்க குப்பைகளை எறியாது அவற்றை குப்பைத் தொட்டிகளில் போடும் பழக்கம் நன்று.

..........................................................................................

III) **பின்வரும் பெயர்களில் பெண்பாலுக்குரிய விகுதிகளைத் தருக.**

திருமதி, சீமாட்டி, தமிழிச்சி, செல்வி, வீட்டுக்காரி, மச்சினி, வந்தனள்

.............................................. ..............................................

.............................................. ..............................................

.............................................. ..............................................

IV) **மேலே தரப்பட்ட பெண்பால் சொற்களுக்கான ஆண்பாலுக்குரிய சொற்களை எழுதுக**

.............................................. ..............................................

.............................................. ..............................................

.............................................. ..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**V) பின்வரும் வசனத்திலுள்ள சொற்பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும் திருத்தி எழுதுக**

1) புதுமைப்பித்தன் எளுதிய கதைகளில் மனிதவாள்வில் காணப்படும் குரைகளை சாடுகிறாள்

.......................................................................................................................................

2) ஆரிலும் சாவு னூரிலும் சாவு என்பது தமிழ் மொளியில் உள்ள பளமொளிகளில் ஒண்ணு

.......................................................................................................................................

3) சூலல் மாசுபடுதலைப் பத்தி நாப்பது சொற்கள் கெண்ட கடடுரை எலுதி அணுப்பவும்

.......................................................................................................................................

4) காஞ்சி நகறத்தில் எங்கு திறும்பினாலும் கோயில்கலையும் பட்டுக்கடைகலையும் காணலாம்

.......................................................................................................................................

**VI) பின்வரும் சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களுடையன. அவற்றின் இரு கருத்துக்கள் விளங்க வசனங்கள் அமைக்க**

அலை: .......................................................................................................................................

.......................................................................................................................................

அலை: .......................................................................................................................................

.......................................................................................................................................

நாவல்: .......................................................................................................................................

.......................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல்: ..................................................................................................................................................

..................................................................................................................................................

அரி : ..................................................................................................................................................

..................................................................................................................................................

அரி: ..................................................................................................................................................

..................................................................................................................................................

வில்: ..................................................................................................................................................

..................................................................................................................................................

வில் : ..................................................................................................................................................

..................................................................................................................................................

படை: ..................................................................................................................................................

..................................................................................................................................................

படை: ..................................................................................................................................................

..................................................................................................................................................

**VII) உங்கள் வீட்டில் சூழல் மாசடைவதை தடுக்க நீங்கள் கையாளக்கூடிய வழிமுறைகளை எழுதுக.**

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

**VIII) ஏற்ற சொற்களை வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புக.**

1) மல்லிகை.......................................வீசியது. என்.......................................குளிர்ந்தது.

2) உள்ளத்தில்....................................... இருந்தால் முகத்தில் ....................................... முறுவல் வரும்.

3) கனடா பல.......................................பேசும் மக்கள் உள்ள நாடு.

4) பூமி சூரியனை.......................................வருகின்றது.

5) தபால் .......................................சேகரிப்பது ஒரு .......................................பொழுதுபோக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுவேலை

**I) பின்வரும் வசனங்களில் உள்ள கீறிட்ட இடங்களை நிரப்புக**

1) கடித மேலுறையில் ....................................... எழுதிய பின் உறையின் வலது மேல் மூலையில்....................................... ஒட்டப்பட வேண்டும். எழுதிய கடிதத்தை ............. ........................... போடுதல் வேண்டும்

2) வங்கியில் பணத்தைச்....................................... பழக்கம் நல்லது. ....................................... .பணத்தை தேவைப்படும் போது ....................................... பெறமுடியும்.

3) சிங்கப்பூர் ஒரு ....................................... நாடு. ஆனால் பொருளாதாரத்தில் அண்டைய ....................................... நாடுகளிலும் பார்க்க முன்னேறியுள்ளது.

4) தமிழர் ஒற்றுமையை வளர்க்க வேண்டும்....................................... எதிர்க்க வேண்டும்

